www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஜன.16-22,1994

ரூபா 8/50


# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 34



## தொண்டா-செல்லா அரசியல் மோதல்
## இ.தொ.காவின் எதிர்காலம்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்



மோப்பம் பிடிக்கும் பாம்பு

பிறந்த தையில் ஒரு வழி பிறக்குமா —?—

அரசியல் அலசல்



தகவல் பெட்டி

மகாபாரதம் கதை-வசனம்

புயலில் சிக்கிய புகைப்படப்பிடிப்பாளர்

சிறுகதைகள் கவிதைகள்

தையல் சமையல் லேடீஸ் ஸ்பெசல்

பாப்பா முரசு

ரசிகனின் சுவையான இலக்கியநயம்

## அமெரிக்காவில் ஒரு நிர்வாண நகரம்
## வியப்பான தகவல்கள்!

சூடான தமிழகத் தகவல்கள்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## இருதய சுத்தமும் வாழ்க்கையும்


*"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."* மத்தேயு 5:8

சுத்தம், முக்கியமாக இருதயத்தின் சுத்தத்தையே நம் இலக்காகக் கொள்ள வேண்டும். உட்புறத்தில் நாம் ஆவியாலும் வார்த்தையாலும் சுத்தமாக்கப் படவேண்டும். அப்போது கீழ்படிதலினாலும், நம்மை முற்றுமாக ஒப்படைப்பதாலும் வெளிப்புறத்தில் சுத்தம் உள்ளவர்களாய் இருப்போம். உள்ளன்புக்கும் புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நாம் தீமையை விரும்பினால் நன்மையானவைகளைப் புரிந்துகொள்ள இயலாது. இதயம் கறைபடிந்ததாய் இருந்தால் கண் பார்வை மங்கியதாய் இருக்கும். புனிதமற்றவைகளை நேசிக்கும் மனிதர் புனிதமான கடவுளை எவ்விதம் காணமுடியும்?

இவ்வுலகில் கடவுளைக் காண்பது எவ்வளவு சிறப்பு வாய்ந்த உரிமையாகும்! அவருடைய கணநேரத் தோற்றம் பூலோகத்தை மோட்சமாக்கும். இதயத்தில், சுத்தம் உள்ளவர்கள் இயேசு கிறிஸ்துவில் பிதாவைக் காண்கிறார்கள். அவரையும், அவர் உண்மை அன்பு, குறிக்கோள், வல்லமை, உறுதியளிக்கும் அருள், உடன்படிக்கை எல்லாவற்றையும் காண்பிக்கிறார்கள். இதயத்தில் பாவம் இல்லாவிட்டால்தான் இவற்றை உணர முடியும். கடவுள் பற்றை இலக்காகக் கொண்டவரே 'என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது" என்று கூற முடியும். எல்லா அநீதிகளிலிருந்தும் நம்மைச் சுத்திகரித்த பின்தான் "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" என்று மோசே விரும்பினது போல் நாம் விரும்பினால் நம் விருப்பம் நிறைவேறும், "அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்போம். அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும் அவர் அர்த்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்கிறான்." இக்காலத்தில் அவரோடுள்ள தோழமையும்; இனிவரும் காலத்தில் பேரின்பம் தரவல்ல தெய்வீகக் காட்சியைக் காண்போம் என்னும் நம்பிக்கையுமே உடனடியாக இருதயத்திலும் வாழ்க்கையிலும் அர்த்தமுள்ளவர்களாய் இருப்பதற்கு நம்மைத் தூண்டுபவையாகும். ஆண்டவரே, நாங்கள் உம்மைத் தரிசிக்கத்தக்கதாக எங்கள் இதயத்தைச் சுத்தமுள்ளதாக்கும்.

குணத்தி பிரபா-கனடா.

# ஆன்மீகம்



## மானுட நேயம் சிறக்க மாநபி அருளிய அமுத வாக்குகள்

- எவனுடைய தொல்லையினால் அண்டை வீட்டார் அச்சமுடனிருக்கின்றாரோ அவன் சுவர்க்கம் புக மாட்டான்.
- அண்டை வீட்டாருக்கு நல்லவராக இருப்பவரே உங்களில் நல்லவர்

அண்டை வீட்டார் பசித்திருக்கும் போது தான் வயிறு நிறையச் சாப்பிடுவோன் நம்பிக்கையாளன் அல்லன்.

- நன்றியை மறந்தோனும், தனித்து உண்போனும் மனிதர்களில் கீழானோர் ஆவர்.
- உங்களுடைய குற்றங்களைப் போக்கிக் கொள்ளாதவரை மற்றவர்களுடைய குற்றங்களைப் பற்றிப் பேசாதீர்கள்.
- நன்மையைச் சுட்டிக்காட்டுவோனும் நன்மையைச் செய்தோனுக்கும் சமமாவான்.
- உண்மையையே கூறுங்கள். அது மனிதர்களுக்குக் கசப்பாக இருப்பினும் சரியே.
- உங்களுக்குள் ஒருவருக்கொருவர் அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொள்ளுங்கள். ஏனெனில் அது உங்களுக்கிடையில் அன்பையும் வளர்க்கும். பகைமையையும் நீக்கும்.

தொகுப்பு: ஏ.எச்.ஏ. ஹுசைன், ஏறாவூர்.

# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.
தேர்தல் திருவிழாக்கள்
ஆரம்பமாகும் ஆண்டு இது.

அரசியல் கட்சிகளுக்கு
தேர்தல் காலம்-
ஒரு பண்டிகை போலவே இருக்கும்.
வெடியோசைகள் போல
மேடைகளில் இடியோசை எழுப்பும்
பேச்சாளர்களும் இருப்பார்கள்.

வானவேடிக்கைகள் போல
வாக்குறுதிகள்-
வர்ண ஜாலம் காட்டும்.

இதுவரை எங்கே இருந்தார்கள்
என்று தெரியாதவர்கள் கூட
இதோ இருக்கிறோம்
உங்களுக்கு சேவை செய்ய,
என்று வந்து முகம் காட்டுவார்கள்.

ஜனநாயகத்தில் ஒரு வசதி உண்டு.
ஜனவிரோதிகள் கூட-
தப்பித்தவறி வெற்றி பெற்றுவிடலாம்.
பின்னர் அவர்களது சுயமும் தெரியும்போது
அவர்களை அப்புறப்படுத்த
அடுத்த ஐந்து ஆண்டுகள் வரை
திருவாளர் பொதுஜனம் காத்திருக்க வேண்டும்.

என்றாலும்-
தட்டிக் கேட்க ஆளில்லாத
துப்பாக்கித் துரைத்தனங்களைவிட
ஜனநாயகம் மோசமில்லை.
எனினும்-இங்கே

ஜனநாயகம் இன்னும்
முதிர்ச்சியடைய வேண்டியுள்ளது-
பக்குவம் அடைய வேண்டியுள்ளது.

தேர்தல்களில்
தவறான நபர்கள் தலையெடுக்காமல்
தப்பித்தவறி தகுதிக்கு மீறிய பதவி பெற்றுவிடாமல்
பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு
வாக்காளர்களுக்கு இருக்கிறது.

உறவினர், அயலவர், ஊரவர்
வெற்றி பெறாவிட்டால்-
கிணற்றிலே குதித்து தொலைத்துவிடுவார்
என்றெல்லாம்
நினைத்துப் பார்த்து
வாக்குச் சீட்டை விரயமாக்கிவிடக் கூடாது.
பக்குவம் அடைந்த ஜனநாயகத்தை
கட்டியெழுப்பிவிட அது உதவாது.

குறிப்பாக கிழக்கிலும்-வவுனியாவிலும்
உள்ளூராட்சி தேர்தல் நடக்குமானால்
அங்குள்ளோர்
சரியான நபர்களை தேர்வு செய்வதில்
சில சிரமங்கள் உண்டு.

பகிரங்க அரசியல் அங்கு
பலகாலம் இல்லாமையால்
தகுதிவாய்ந்தவர்களை இனம் காணும் வாய்ப்பும்
வாக்காளர்களுக்கு குறைவாகவே இருந்தது.
எனவே-தகுதியற்றவர்கள்
தெரிவாகிவிடாமல் விழிப்போடு
செயற்படுவது முக்கியம்.
திருவிழா ஆரவாரத்தில்
திருடர்களிடம் உடமைகளை பறிகொடுத்த நிலை
தேர்தல் திருவிழாவில் ஏற்பட்டுவிடக்கூடாது.

நாம் இதனை மட்டுமே சொல்ல முடியும்.
தீர்மானம் எடுக்க வேண்டியது
மக்கள் மட்டுமே.

■

சில பகுதிகளில் முரசு
செல்லத் தாமதமாகும் போது
இனி வராது என்று சொல்லி
வேறு பத்திரிகை வாங்குமாறு கூறும்
சில முகவர்கள் பற்றி
வாசகர்கள் பலர் எழுதியுள்ளீர்கள்.

அவ்வாறான முகவர்களது
முரசு விற்பனை உரிமை
உடனடியாக ரத்துச் செய்யப்படும்.

வாசகர்கள் உறவும்-தொடர்பும்
முரசுக்கு பெரிய பலம்.
அந்தப் பலத்தில்-நேசப் பாலத்தில்
தொடரும் வெற்றிப் பயணம்!

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை
என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

### கவிதைப்போட்டி இல-31

போட்டிக்களம் தேடி வந்து குவிந்தவற்றில் வெற்றி பெற்றதுவும், வியக்கப்பட்டவையும்.

**பரிசுக்குரிய கவிதை**

**தேசிய விளையாட்டு**

தேசிய விளையாட்டை
இது மாறும் போக்கு
தேசத்தின் தலைவிதியை
கேள்விக்குள்ளாக்கும்.
இன்னும்-இன்னும்
தேருவில் நசியும்
மனிதம்!

சி. சந்திரசேகரம்
கொழும்பு-11.

### பாராட்டுக்குரிய கவிதைகள்

**இதற்குக் காரணம் என்ன?**
வெள்ளை நிறம் பிள்ளை மனம்
காற்றில் எழுதும் காவியம் போல்
குழந்தையின் கையில் போலி ஆயுதம்
இதற்கு காரணம் என்ன?
சி. ரூபன், மட்டக்களப்பு.

**விளையாட்டு**
பயங்கரவாதம்
இளம்
நெஞ்சங்களுக்கு
கற்பித்த
நாகரிக விளையாட்டு.
ஏ.கியூ.எம்.சாகீர்-தெஹிவளை

**சாதனை!**
ஆயுதங்களால்
சாதிக்க முடியாத ஒன்றை
சாதித்து
'கின்னஸில்' நீயும்
இடம்பிடித்துக்கொள்.
ஷஹிர்ஷா தாஸிம், தர்கா நகர்.

**எது உண்மை**
உங்களிடம் உள்ளது
உயிரைக் குடிப்பதா?
உவகை பூப்பதா?
கு.மதியரசன்
திருகோணமலை.

**எதிர்காலம்?**
இளசுகளின்
எண்ணங்கள்...
இருண்ட வழி
செல்கிறதே!
எதிர்காலம்
என்னாகும்?
இறைவா-நீ
காத்தருள்வாய்!
பரீஹா. ஏ.ஜுனைது
ஏறாவூர்-06.

ஓடி விளையாடு பாப்பா-கையில்
துப்பாக்கி எதற்கடா பாப்பா
கூடி விளையாடு பாப்பா- ஒரு (சிறு)
உயிரையும் கொல்லாதே பாப்பா.
வி.அன்பழகன், கொழும்பு-12.

**வெள்ளோட்டம்**
அடுத்து வரும்
சந்ததிகளின்
சஞ்சலத்திற்கான
ஒரு வெள்ளோட்டம்.
எம்.ஐ.ஏ.சாதாத்
தெஹிவளை.

**ஒரு ஆதங்கம்!**
என்ன செய்வது?
நாளைய சமுதாயமும்
அழிந்து போக,
அத்திவாரம்
இட்டுக் கொள்கிறதே!
சு.சசிக்குமார்
கோட்டைக்கல்லாறு.



'பிஞ்சு மனம்
நச்சு விதை
நடப்பதை
நாமறியோம்.'
கே.எஸ் சுதாகர்
வவுனியா.

**பொய்யும் மெய்யும்**
பொய்யில் பயின்று
மெய்யில் அழிக்கவோ?
எஸ்.மகாலிங்கம்
வெளிமடை.

நாளைய
எதிர்காலத்திற்கு
இன்றே
முன்னோட்டமா?
எஸ்.ஏ.எச்.ஷேக் முஹம்மட்
தர்கா நகர்.

## கவிதைப் போட்டி இல-34



*சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 22.1.1994.*

–முகவரி–
கவிதைப் போட்டி இல: 34
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

**விளம்பரங்கள்**
விலை மதிப்பற்ற
மனித உயிர்களுக்கு,
விலை பேசும்
விளம்பரங்களா..?
செல்வி. ஜீனத்
பூண்டுலோயா.

உங்கள்
பிஞ்சு நெஞ்சில்
பாசிச நஞ்சு
பூசியது யார்?
இளங்கோவன் தமிழ்வண்ணன்
தெனியாய.

**நாமும் தயார்**
இராணுவ ஆட்சேர்ப்புக்கு வயதெல்லை
இல்லையேல்
கோல்பேஸ் கடற்கரையில் கியூவில் நிற்க
நாமும் தயார்.
மது.பாலாவி.

கருவில் கேட்ட
வேட்டுச் சத்தம்
கலையாமல் நிற்கின்றதோ
இளசுகள் மனதினில்
உ.மோகனப் பிரஷாந்
சேற்றுக்குடா.

**ஒத்திகை**
இவர்கள்
ஒத்திகை பார்க்கிறார்கள்
இன்னுமோர்
இயக்கத்தை
தொடங்க!
எஸ்.சர்மிளா பேகம்
கிண்ணியா-03.

**கால மாற்றம்**
பொம்மை தூக்கி விளையாடியது
அந்தக் காலம்
ஆயுதம் ஏந்தி விளையாடுவது
இந்தக்காலம்.
எம். ஆர். மாமூன், மாத்தளை.

**பலன்**
இந்த
விளம்பரம்
போலியோவின்
அபாயத்திற்கல்ல,
போர்க்களத்தின்
விளைவுக்கு.
எப்.மங்களவாணி
ஹெந்தலை, வத்தளை.

யுத்த மண்ணில் முளைத்த-இள
வித்துக்கள்
பித்து பிடித்த யுத்த மண்ணில்
பிறந்ததினால்-இந்த
வித்துக்களும் வீணாகப் போகின்றதோ?
அ.தருஷாந்த், திருகோணமலை.

**தூரவீசுங்கள்**
யுத்த மேகம் பொழிவதை
நிறுத்தட்டும்;
தொண்ணூற்றி மூன்றோடு
தொலையட்டும்;
துப்பாக்கிக் கலாசாரம்
தூர வீசுங்கள்
கைகளில் உள்ளதை.
சு.அருள்ஜோதி
கொழும்பு-13.

# வாசகசாலை

*அரசியல் அதிரடி முதல் உலக அதிசயங்கள் வரை, சினிமா முதல் சிந்திக்க அறிவுப் போட்டி வரை, தொடர்கதை சிறுகதை முதல் தேன் தரும் கவிதை வரை, மருத்துவம் முதல் அறிவுக்கு மருந்தாய் நீ அள்ளி வருகின்ற விருந்து அப்பாடா. உன்னை வர்ணிக்கவே முடியாது. என்றும் நீ வாழ்க! தமிழ் வளர்க என்றும், உன் பணி தொடர என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.*
ச.ராமஜெயம்-எட்டியாந்தோட்டை.

•

*முத்தான முரசமே!*
*உன்னில் அடங்கிய பற்பல அம்சங்களும் வெரி வெரி சுப்பர். அதிலும் இலக்கிய நயம், கண்ணே மதுமிதா போன்ற சுவாரசியமான கதை எழுதும் ரசிகனுக்கும், தினமுரசுக்கும் அனைத்தையும் அள்ளி வழங்கும் ஆசிரியருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்.*
எம்.எஸ்.ஜெஸீலா-மூதூர்-04.

•

*தினமுரசு வாரமலரில் இடம் பெறும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். குறிப்பாக தேன் கிண்ணம், கவிதைப் போட்டி, ரிப்போர்ட், தகவல் பெட்டி போன்ற அம்சங்கள் மேலும் மெருகூட்டுகின்றன. பல புதிய தகவல்களை பிரசுரிப்பதில் உனக்கு நிகர் நீயே!*
ம.மு.ரஞ்சன் துரைசிங்கம்-நோட்டன்.

•

வண்ண(வார)மலராய் மலர்ந்து விரைந்து வரும் தினமுரசே! "தகவல் பெட்டி" தகவல்கள் வியக்க வைக்கின்றன. கண்ணே மதுமிதா தொடரும், தேன் கிண்ணம் கவிதைகள் சங்கமிக்கும் சாகரமும் என் சிந்தைக்கு விருந்தாகின்றன. ரசிகனின் இலக்கிய நயம் அப்பப்பா...!
ஆர்.சுரேஸ்- கலஹா.

"நிலவோ வானைப் பார்த்து ஏங்க,
நீரோ மீனைப் பார்த்து ஏங்க
நதியோ நாணலைப் பார்த்து ஏங்க
நானோ உன்னை எதிர்பார்த்து
ஏங்குகின்றேன்"

அன்பின் தினமுரசே!
இந்த அழகுள்ள அவனியிலே நீ என்றும் அழியாது பவனி வர என் இதய வாழ்த்துக்கள் என்றுமே உனக்குண்டு.
றஜனி கணேசன்-பெரிய போரதீவு.



அன்பின் வாரமலருக்கு...
வெற்றிப் பாதையில் விறு விறுப்பாக வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் கலா எழுத, கிரேஷன், ஓவியம் வரையும் சித்திரக் கதை அருமையாகவும் அழகாகவும் அமைந்துள்ளது.

உலக ரவுண்டப் உலுக்கி வருகின்றது. நகர ரவுண்டப்பைத் தந்த ஒற்றன் எங்கே ஒழித்து விட்டார். நான் அவரை சாட்சியாக ஏற்றுக் காப்பாற்றுகின்றேன். அவரை பசாருக்கு வரச் சொல்லுங்கள்.
கலையுள்ளம் மசூத் அஹமத்
காத்தான்குடி-03.



•

வாரம் தோறும் அள்ளித்தரும் அருமையான கதைகளும் சுவையான அம்சங்களும் எனது உள்ளத்தை கொள்ளை கொண்டு விட்டன. நீ ஒவ்வொரு நாட்களும் ,வெளி வரமாட்டாயா என்று என் மனம் தவிக்கிறது. என்றும் நீ வாழ்க! உன் சேவை வாழ்க.
எம். எ.நஸியா-கொழும்பு-02.

•

வாராவாரம் புதுமைத் தகவல்களை சுமந்து வருவதில் முரசிற்கு நிகர் முரசேதான். மகாபாரதக் கதையை அனைவருக்கும் புரிய வைத்த முரசே, உன் பணி தொடர வாழ்த்துக்கள்.
எம்.நிஸா முஸம்மில்-தொடம்வத்தை.

•

அன்பின் முரசே
இள நெஞ்சின் இதயங்களை குளிர வைக்கும் மலரே, நீ வாரத்தில் ஒரு முறை மலர்வதைப் போல் நீ நாள்தோறும் மலர மாட்டாயா? மனதை கொள்ளை கொள்ளும் தினமுரசே, வாழ்க! வளர்க! உன் பணி.
செல்வன். தியாகராஜா
நமுனுகுல பஜார்.

•

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மாத்தையாவும் யோகியும் வெளியேற்றப்பட்டனர்
# புலிகளின் ஆலோசகர் பகிரங்க அறிவிப்பு!

புலிகள் அமைப்பினர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவோடு பேச்சு நடத்தியபோது விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது.

அதன் தலைவராக கோபாலசாமி மகேந்திரராஜா என்னும் மாத்தையாவும், பொதுச் செயலாளராக யோகரத்தினம் நரேன் என்னும் யோகியும் அறிவிக்கப் பட்டனர்.

இலங்கை அரசோடு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியே கலந்துகொண்டது.

இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த பின்னரும் மக்கள் முன்னணி புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் செயற்பட்டு வந்தது.

மக்கள் முன்னணித் தலைவர் மாத்தையா பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிவந்தார்.

பொதுச் செயலாளர் யோகி கருத்தரங்குகள் பலவற்றை நடத்தியதுடன், தமது வானொலியில் வாரம் தோறும் மக்கள் அரங்கம் என்ற பெயரில் கேள்விகளுக்கு பதில் சொல்லி வந்தார்.

பின்னர் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுக்கும், மாத்தையாவுக்கும் இடையே பிரச்சனை என்று பல்வேறு தகவல்கள் வெளியாகின.


முதலில் அவை ஏனைய தமிழ் அமைப்புக்களது வதந்திகள், கட்டுக்கதைகள் என்றே கருதப்பட்டன.

எனினும், மாத்தையா பொதுக் கூட்டங்களில் மட்டுமல்லாமல் வெளியேயும் காணப்படவில்லை.

யோகியும் படிப்படியாக முக்கியத்துவம் இழந்தவராக மாறினார்.

இதனால் பிரச்சனைகள் இருக்குமோ என்று சந்தேகம் வலுத்தது.

ஆனால், புலிகள் அமைப்பினர் பிரச்சனைகள் தமக்குள் இல்லை என்றே சொல்லி வந்தனர்.



மாத்தையா - பிரபா - யோகி

இதற்கிடையே இந்திய சஞ்சிகைகள் சில மாத்தையா படுகாயமடைந்து சிங்கப்பூருக்கு சிகிச்சை பெறச் சென்றுள்ளதாக செய்திகள் வெளியிட்டன.

இவ்வாறு மர்மமாகவும், பல்வேறு ஊகங்களுக்கும் இடமளித்துவந்த புலிகள் அமைப்பின் உள்பிரச்சனை இப்போது பகிரங்கமாகிவருகிறது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் சென்ற பத்திரிகையாளர்கள் மாத்தையா நிலை பற்றி கேள்வி எழுப்பினார்கள். அதற்கு பதில் அளித்த புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், மாத்தையாவுக்கு வேறு பதவிகள் கொடுக்கப் பட்டுள்ளன என்பது போல கருத்துத் தெரிவித்தார்.

கடந்தவாரம் யாழ் சென்று திரும்பிய நெதர்லாந்து வானொலி நிருபரான ஹார்ம் பொட்ஸ் என்பவருக்கு திரு.பாலசிங்கம் அளித்துள்ள பேட்டியில் மாத்தையா இயக்கத்தைவிட்டு வெளியேற்றப்பட்டு விட்டதாகக் கூறியுள்ளார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் சுற்றுப்பயணம் நடத்திய நெதர்லாந்து வானொலி நிருபர் யாழ்ப்பாணம் கோண்டாவிலில் உள்ள இல்லம் ஒன்றில் திரு. அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்தார்.

மாத்தையா-யோகி ஆகியோரின் தற்போதைய நிலை குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த திரு.பாலசிங்கம் மாத்தையாவும் யோகியும் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்கள் என்று தெரிவித்துள்ளார்.

அவர்கள் தொடர்பாக சில குற்றச் சாட்டுக்கள் இருப்பதாகவும், அவை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் திரு.பாலசிங்கம் கூறியுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் எத்தகையவை என்பதை பாலசிங்கம் தெரிவிக்கவில்லை.

## மட்டக்களப்பிலும் புதிய வியாதி!

சமீபத்திய கடும் மழை காரணமான வெள்ளத்தின் பின் மட்டக்களப்பிலும் புதிய நோய் ஒன்று பரவிவருகிறது.

புதிதாகப் பரவிய அந்த காய்ச்சல் நோய் காரணமாக 200 பேர்வரை பாதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அகதிமுகாம்களில் தொற்று நோய்கள் பரவிவருவதாகவும், வயிற்றோட்டத்தால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள் நடத்திய பொதுக்கல்வி தேர்வு!

வடக்கில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகள் அமைப்பினர் "தமிழீழ பொதுக்கல்வி தேர்வு" என்ற பெயரில் பரீட்சைகள் நடத்திவருகின்றனர்.

வருடம் தோறும் நடைபெற்றுவரும் அப்பரீட்சைகளில் இம்முறை பதினாறாயிரத்து ஐநூறு மாணவர்கள் பங்குகொண்டனர் என்று புலிகள் கூறியுள்ளனர்.

முதல் பத்து இடங்களைப் பெற்றவர்களுக்குப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு.வே.பிரபாகரன் பரிசுகளும், பாராட்டுப் பத்திரமும் வழங்கியுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலும் ஓடி ஒளிப்போரும்!
# முதல்நாள் பெயர் கொடுத்தோரை மறுநாள் காணவில்லை!!

வவுனியாவிலும்-கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத் தயாரிப்புக்களின் போது பல சுவாரசியமான சம்பவங்கள் நடைபெற்றன.

சுயேச்சைக் குழுக்களாகப் போட்டியிட ஆரம்பத்தில் நான் முந்தி நீ முந்தி என்று போட்டியிட்ட சிலர் மாயமாய் மறைந்து விட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு.மு. சிவசிதம்பரம் உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சி கலந்து கொள்ளாது என்று அறிவித்துவிட்டு கண் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றுவிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தலின் நோக்கத்தைக் குறைகூறி அறிக்கை ஒன்றையும் திரு.மு. சிவசிதம்பரம் வெளியிட்டிருந்தார்.

தமது கட்சி தேர்தலில் போட்டியிடாது என்று தெரிந்ததும் கூட்டணியின் முன்னாள் முக்கியஸ்தர்கள் சுயேச்சையாகப் போட்டியிட திட்டமிட்டு அதற்கான முயற்சிகளில் இறங்கினார்கள்.

அவர்களும் முயற்சியில் இறங்க, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவோருக்கு எதிராகப் புலிகள் நடவடிக்கை எடுக்கப் போவதாக வெளிநாட்டு செய்திச் சேவை ஒன்று தெரிவித்தது.

செய்தி கேட்டதும் பலர் திட்டத்தை கைவிட்டு ஒதுங்கிக் கொண்டனர்.

திருகோணமலையில் சுயேச்சையாக தேர்தலில் குதிக்கத் தயாரான கூட்டணியின் முன்னாள் முக்கிய பிரமுகருக்கு தொலைபேசியூடாக மிரட்டல் வந்ததாம்.

அவரது மனைவியிடம் "நீங்கள் பொட்டோடும் பூவோடும் இருக்க விருப்பம் இல்லையா?" என்று கேட்கப்பட்டதாம்.

மனைவி பயந்துவிட்டார். முக்கியஸ்தர் போட்டியிடும் எண்ணத்தை கைவிட்டு ஒதுங்கிவிட்டார்.

வேறுசிலர் தாம் "தேர்தலில் போட்டியிட தயங்கவில்லை. புலிகளது மிரட்டல்களுக்கும் அஞ்சவில்லை. ஆனால் குடும்பத்தில் பயப்படுகிறார்கள். குடும்பமே பிரிந்துவிடும் போல் இருக்கிறது. ஆகவே தேர்தலில் போட்டியிட்டு மக்களுக்கு சேவை செய்ய முடியாமைக்கு வருந்துகிறோம்" என்று கூறிவிட்டார்கள்.

திருகோணமலையில் காலையில் கூடி சுயேச்சைக்குழுவாக பட்டியல் தயாரித்த ஒரு குழுவினரை மாலையில் சந்தித்து பேசிய போது, "இப்போதுதான் அந்த முடிவையே மாற்றினோம். குழு கலைக்கப் பட்டுவிட்டது" என்று கூறினார்கள்.

கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசை என்று சுயேச்சையாளர்கள் சிலர் அவதிப்படுவதை பரவலாக அவதானிக்க முடிகிறது.

இதேவேளை தேர்தலில் போட்டியிடும் ஈ.பி.டி.பி, புளட், ரெலோ போன்ற தமிழ் அரசியல் கட்சிகளின் இடையே பொது வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும் விடயத்தில் உடன்பாடு ஏற்படவில்லை.

சில பகுதிகளில் மட்டும் புரிந்துணர்வோடு செயல்படும் நிலமை காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதே வேளை மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் சுயேச்சையாகப் போட்டியிடும் சிலர் தம்மை இராணுவத்தினரே கட்டாயப்படுத்தியதாகக் கூறுகின்றனர்.

புலிகளிடம் இருந்து தப்பிக்கொள்ளவே அவர்கள் அவ்வாறு கூறுகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

# மத்திய மாகாண சபைக்கு வரப்போகும் மற்றுமொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண முதலமைச்சர் திரு. டபிள்யு.பீ.பீ திசாநாயக்காவுக்கும் சபைத் தலைவர் திரு சரத் கோங்கஹேக்கும் எதிராக மற்றொரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் முஸ்தீபுகள் செய்துவருகின்றன.

கடந்த டிசம்பர் மாதம் 21ம் திகதி முதலமைச்சருக்கு எதிராக மாகாண சபையில் எதிர்க்கட்சிகளினால் கொண்டுவரப் பட்ட பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப் படாமலேயே நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே. அன்றையதினம் மத்திய மாகாண ஆளுநரின் சிபாரிசின் பேரில் அங்கு நிலவிய நெருக்கடியைத் தொடர்ந்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ம் திகதிக்கு மத்திய மாகாண சபையின் கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பெப்ரவரி 17ம் திகதி சபை மீண்டும் கூடும் பொழுது ஆளுநரின் கொள்கைப் பிரகடன விளக்க உரை இடம்பெறுவதுடன் அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது இப்பொழுது விரக்தி அடைந்துள்ள எதிர்க்கட்சியினருக்கும் இ.தொ.காவைச் சேர்ந்த வேறு சில உறுப்பினர்களும் எதிர்ப்புக்களைத் தெரிவிப்பார்கள் என்றே ஊகம் தெரிவிக்கப் படுகின்றது.

தனது பெயரை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாத எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் இது பற்றித் தெரிவிக்கையில், மீண்டும் மாகாண முதலமைச்சருக்கும் சபைத் தலைவருக்கும் எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை சமர்ப்பிக்க இருப்பதாக முரசுக்குத் தெரிவித்தார்.

# வாகனம் இல்லாத திணைக்களம் அவசரப்பணிகள் தாமதம்!

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் ஒரு வாகனமேனும் இன்றி இயங்கும் திணைக்களம் என்ற புகழை அஞ்சல் திணைக்களம் பெற்றுள்ளது. ஆறு வருடங்களுக்கு முன் ஒரேயொரு ஜீப் வண்டியை மாத்திரம் வைத்துக்கொண்டிருந்த அஞ்சல் திணைக்களம் தற்போது அந்த வண்டியும் இன்றியே காலம் தள்ளுகிறது.

திணைக்களத் தலைவர்களின் கூட்டமென்றால் என்ன, வேறு உத்தியோகப் பயணமென்றாலென்ன, அஞ்சல் அத்தியட்சகர் திரு.பி.துரைசாமியும், நுண்ணாய்வுப் பரிசோதகர் திரு.ஏ.ஆர் துரைராசாவும் நடந்தோ சைக்கிலிலோ தான் சென்று வருகின்றனர். தூரமான இடங்களுக்குச் செல்ல வேண்டுமாயின் பஸ் மூலம் பயணம் செய்கின்றனர். சொந்த வாகனம் ஒன்று இருக்குமாயின் திருகோணமலைத் தபாற் கந்தோரிலிருந்து வங்கிக்குப் பணத்தை எடுத்துச் செல்வதற்காக அன்றாடம் அமர்த்தப்படும் வாடகைக் காருக்குரிய பணம் மிச்சமாகும் என்ற கருத்தும் தபால் அதிபர்களிடையே உள்ளது.

கந்தளாய், மூதூர், சேருவிலை, மாவடிச்சேனை போன்ற பரந்த பகுதிகளை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பு திருகோணமலை அஞ்சல் அத்தியட்சகரைச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்க ஒரேயொரு வாகனத்துடன் மாத்திரம் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் தனது பரந்த கடமைகளைக் கவனிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார். பல வெளிக்கள உத்தியோகத்தர்களையும் அவசரப் பணிகளையும் கொண்டிருக்கும் பிரதேச செயலாளர் திரு. வேலும் மயிலும் உரிய நேரத்தில் அவசரப்பணிகளைச் செய்வதில் பெரும் இன்னலை எதிர்நோக்குகின்றார்.

அண்மையில் மதிப்பீட்டு உத்தியோகத்தர் ஒருவரின் வெளிக்களக் கடமைக்கு உடனடியாக வாகனம் கொடுக்க முடியாமல் பிரதேசச் செயலாளர் தவித்ததையும் சகோதர திணைக்களம் ஒன்றில் வாகனம் பெற்றுக் கொடுக்க முயன்றபோது எரிபொருள் பிரச்சனைகள் தலைதூக்கியதையும் இங்குள்ள உத்தியோகத்தர்கள் கவலையுடன் சுட்டிக்காட்டினர்.

# எங்கெங்கு காணினும் வெள்ளமடா!
# மழைக்காலம் வந்தால் தொல்லையடா!!

## வீதி அபிவிருத்தி அதிகார சபையே இங்கே பார்

(நிந்தவூர் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் பெய்த அடைமழைகாரணமாக கல்முனை-அம்பாறை பிரதான வீதியிலுள்ள காரைதீவு-மாவடிப்பள்ளி தாம்போதியினூடாகவும், அதனுடன் சேர்ந்த பெரிய பாலத்தினூடாகவும் வெள்ளம் பாய்ந்தோடிக் கொண்டிருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

இத்தகைய அடை மழைகாலங்களில் இந்த தாம்போதி மற்றும் பாலத்தினூடே வெள்ளம் பரவி போக்குவரத்துத் தடை ஏற்படுவதும் வழக்கமாக இருந்து வருகின்றது.

சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் (வீதி அபிவிருத்தி அதிகார சபை) குறித்த தாம்போதியையும், பாலத்தையும் உயர்த்துவதற்கும் இதன்மூலம் வெள்ள காலங்களில் ஏற்படும் போக்குவரத்துத் தடை ஏற்படாது தவிர்க்கவும் முன்வர வேண்டுமெனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

## முக்தி அடைந்த மாமுனிவர்

கடந்த 85 வருடங்களாக துறவியாக வாழ்ந்த காஞ்சி காமகோபு ஸ்ரீசந்திரசெகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் சமீபத்தில் முக்தியடைந்தார். சரியாக 100 ஆண்டுகள் வாழ்ந்தார். கடந்த வருடம் முழுவதும் காஞ்சி மாமுனிவரின் நூற்றாண்டு விழாக்கள் உலகெங்கணுமுள்ள இந்துப்பெருமக்களால் கொண்டாடப்பட்டது. காஞ்சி மடத்தின் அதிபதிகளாகச் சுடர்விட்ட ஏனைய 67 ஆசாரியர்களுக்குள்ளும் ஸ்ரீசந்திரசெகரேந்திர சரஸ்வதி அவர்களின் வாழ்வும் அருட் பொழிவும் தனிப்பெருஞ்சுடராக என்றும் நீடித்து நின்று மானிட வாழ்வுக்கு ஒளியூட்டும் என்பது திண்ணம்.

www.padippakam.com                                                நன்றி - நூலகத்திட்டம்


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex,
NUWARA ELIYA.

Dial: 052-2508 & 3093
AND
072-26088, 078-61933

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த புதுவருட—தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

**விளம்பரத்தால் வியாபாரத்தைப் பெருக்குங்கள்.**
Advertising Manager
THINAMURASU
88/14, Somadevi Place,
Kirilapone, Colombo-6.

SARIKA TEX
Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள
*Hewa Shopping Complex*
*No. 69/5-1/1, 1st Floor,*
*Galle Road,*
*Dehiwela South.*


தருவது **அயலகச் செய்திகள்** ஏழுமலை

# துணைவியே அடுத்த தலைவி!

## தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுக்கு குவியும் அரசியல் லாபங்கள்!

தெலுங்கு தேசக் கட்சியின் தலைவரும், ஆந்திர முன்னாள் முதல்வருமான பிரபல நடிகர் என்.டி.ராமராவ் தனது புதிய மனைவிக்கு கட்சிக்குள் ஏற்பட்டுவரும் செல்வாக்கைக் கண்டு சந்தோசமடைகிறார்.

ராமராவ் காவிக்கு விடைகொடுத்துவிட்டார். அவர் நடித்த விசுவாமித்திரர் படம் பெரிய வெற்றியைப் பெறவில்லை. ஆனால் துறவி என்று தன்னைச் சொல்லிக்கொண்டிருந்த ராமராவுக்கு மேனகையாக வந்தவர் பார்வதி.

இப்போது பார்வதி கட்சிக் கூட்டங்களில் முக்கிய பேச்சாளராகி விட்டார்.

தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கை பற்றிய முக்கிய செய்திகள், தகவல்கள் உள்துறை அமைச்சுக்கு தெரிவிக்கப் படவில்லை. இது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விசயம் என்று தமிழக ஆளுநர் தன் கடிதத்தில் கூறியுள்ளார்.

தமிழக அரசோடு தமிழக ஆளுநருக்கு ஏற்பட்டுள்ள மோதல் இன்னும் தீரவில்லை.

ஆளுநர் மீது தமிழக மாநில அரசின் அமைச்சர்களும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

■

அதுதான் தி.மு.கவின் தலைமைச் செயலகம்.

அண்ணா அறிவாலயத்தை கைப்பற்றப் போவதாக வை.கோபால்சாமி அறிவித்தார்.

அண்ணா அறிவாலயம் தி.மு.கவின் சொத்தல்ல என்று கலைஞர் கருணாநிதி கூறினார்.

உடனே வை.கோ அதற்கு பதில் சொன்னார்.

"தனது மருமகன் பெயரிலும், மகன் பெயரிலும் அண்ணா அறிவாலயத்தை மாற்றுவதற்கு கருணாநிதி திட்டமிடுகிறார். அதுதான் அப்படிச் சொல்லி இருக்கிறார்" என்கிறார் வை.கோ.

■



## தேர்தலுக்கு முன் ஆவேசம்... தேர்தலுக்கு பின் பரிவு!

வடமாநில தேர்தல் முடிவுகள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு அரசியல் பலத்தை அதிகரித்துள்ளது. அவரது அரசியல் எதிரிகள் தமது போக்கை மாற்ற ஆரம்பித்துள்ளார்கள்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவோடு இப்போது நல்லுறவை நாடுகிறார்.

தமிழக தினமணி பத்திரிகை வெளியிட்டுள்ள காட்டூன் படமே இது.

பரிசுப்பொருட்களும் குவிகின்றன. தெலுங்கு தேசக் கட்சியில் ராமராவுக்கு அடுத்தபடியாக யார் என்ற கேள்விக்கு இன்று உடனடியாக பதில் ரெடி. அதுதான் பார்வதி.

ஆரம்பத்தில் எதிர்த்தவர்களும் இப்போது அனுசரித்துப் போகத் தொடங்கியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டின் துக்ளக் சஞ்சிகை, பார்வதி ஆந்திராவின் ஜெயலலிதா என்று கூறியிருக்கிறது.

செல்வி ஜெயலலிதா ஏற்கனவே அறியப்பட்டவராக இருந்து அரசியலுக்கு அறுமுகமானவர்.

ஆனால் பார்வதி என்.டி.ஆரின் மனைவி என்று திடீரென்று ஒருநாள் அறிவிக்கப்பட்டு, மறுநாளே வாரிசாக உருவாகத் தொடங்கிவிட்டவர்.

தனிப்பட்ட ரீதியில் ராமராவ் மீது தொடுக்கப்படும் விமர்சனங்களை அவரது ரசிகர்கள் மற்றும் கட்சித்தொண்டர்கள் அலட்சியப்படுத்தி விட்டார்கள்.

■

தமிழ் நாடு மாநில பொலிஸ் துறையில் புலிகள் ஊடுருவி விட்டதாக ஒரு குற்றச்சாட்டு.

குற்றம் சாட்டியிருப்பவர் சாதாரண நபர் அல்ல.

தமிழக ஆளுநர் எம்.சென்னாரெட்டிதான் அவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்நாடு மாநில புலனாய்வுத்துறை இயக்குநருக்கும் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாக தமிழக ஆளுநர் கடிதம் எழுதி இந்திய உளவுத்துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ளார்.



என்.டி. ராமராவ்

அண்ணா அறிவாலயம் சென்னையில் இருக்கிறது.

பாட்டாளி மக்கள் கட்சி மூன்றாவது அரசியல் சக்தியாக தமிழ்நாட்டில் வளர்ந்து வந்தது. அதன் தலைவர் டாக்டர் ராமதாசுக்கும் பண்ருட்டி ராமச்சந்திரனுக்கும் இடையே ஏற்பட்ட மோதலால் இப்போது கட்சி பலவீனமடைந்து விட்டது.

தி.மு.க பிளவு போல பாட்டாளி மக்கள் கட்சியும் இரண்டாக பிளந்துள்ளது.

இரு அணியினரும் தாமே உண்மையான கட்சிக்காரர் என்று கூறிவருகின்றனர்.

டாக்டர் ராமதாஸ் புலிகளுக்கு ஆதரவாக பேசுவது கட்சியை அழிவுக்கு கொண்டு சென்றது என்கிறார் பண்ருட்டி. புலிகளை ஆதரிக்கலாம். தமிழ்நாட்டில் அவர்களை அனுமதிக்க முடியாது என்பது பண்ருட்டியின் வாதம்.

இரு அணியினரும் மோதுவதால் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு லாபம். ■

## புகார் பெட்டி

### கண்டி புகையிரத நிலையத்தில் கண்டிப்பாக திருத்தப்பட வேண்டியவை!

கண்டி புகையிரத நிலையத்திலுள்ள அறிவித்தல் பலகைகளைக் கவனமாகப்பாருங்கள். அங்கே,

'பிரதரன புகைரத அதிபர்'

'பிரதான புகையிரத நிளைய அதிபர்'.

'புகையிரத பயணச்சீட்டு அல்லது பேரநட சீட்டு யின்ரி உட்பிவேசிக்கக் கூடரது.'

'நகர் சேர் புகையிரத நேர அட்டவனை.'

என்றும் மேலும் ஒரு அறிவித்தலில் ஆங்கில வசனங்களை அப்படியே தமிழில் "ரயில்வே ஆபிஸர்கள் மட்டும்" என்றும் மேலும் இரு அறிவித்தல்களில் ஆங்கில வசனங்கள் குறிப்பிடும் கருத்துக்கு எதிர்மாறான கருத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

PARCELS OUT WARD OFFICE

பார்சல் பிரயாண சாமான்கள் ஏற்றுக் கொள்ளும் கந்தோர்.

PARCELS IN WARD OFFICE

பார்சல் பிரயாண சாமான்கள் வழங்கும் கந்தோர் என்றும், காணப்படுகிறது. வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ளல் என்றும், ஏற்றுக்கொள்ளல் என்பது வழங்குவது என்றும் தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மேலும், பதுளை பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள தபாற்கந்தோர் வீதி தபர்ற் கன்தோர் வீதி என்றும், பதுளை மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ்களில் சிங்கள வசனங்கள் சிங்கள உச்சரிப்பிலேயே அப்படியே 'பிரவாகன சேவய' என்றும் எழுதப்பட்டுள்ளது. ஏன் இதை தமிழில் மொழி பெயர்த்தும் எழுதினால் என்ன?

வேதனை என்னவென்றால், இது போன்ற அறிவித்தல் பலகைகள் மற்றும் இதர அறிவிப்புக்களில் தானா இத்தவறுகள் விடப்பட வேண்டும்? எழுதப்படுவதற்கு முன் அவை சரிபார்க்கப்படக்கூடாதா? இது போல் வேறு பல இடங்களிலும் உள்ள தவறுகளைச் சட்டிக்காட்டித் தானா தீர்க்க வேண்டும்?

ஆர். வசந்தி - கோலன்ஸ் எஸ்டேட், லுணுகல.

### புறப்படும் நேரம் தெரியாமல் பரிதவிக்கும் பயணிகள்

கல்முனை பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ் புறப்படும் நேர அட்டவணை இல்லாதது பெரும் குறையாக உள்ளது.

முன்பு இந்த பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ் புறப்படும் நேர அட்டவணை இருந்தது. ஆனால் இப்போது அது காணப்படவில்லை.

இதனால் பஸ் பிரயாணிகள் அங்கும் இங்கும் அலைந்து தாம் புறப்படும் பஸ் வந்ததும் முண்டி அடித்துக்கொண்டு ஓடி விபத்துக் களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தனியார் பஸ்களும், ஒட்டோக்களும் இதே பஸ்தரிப்பு நிலையத்தில் தரித்து நிற்பதால் பிரயாணிகளின் நிலமை மேலும் கவலைக்கிடமாக உள்ளது.

இந்த பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ் புறப்படும் நேர அட்டவணை இருந்தால் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பஸ் வந்ததும் தத்தம் அணிவகுப்புக் களில் நின்று பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.

மேலும் தூர இடங்களுக்கு செல்லும் பிரயாணிகள் முன்கூட்டியே ஆசனங்களை பதிவு செய்துகொள்வதற்கும் இது வசதியாக இருக்கும்.

எனவே இவ்விடயத்தில் கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் அதிக அக்கறை செலுத்தி, அல்லல்படும் பிரயாணிகளுக்கு அபயம் அளிக்க வேண்டும்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### ஏமாற்றும் தொலைபேசி!

கொழும்புக்கு மிக அண்மையில் அமைந்துள்ள திஹாரிய கிராமம் பல வர்த்தகப் பேட்டைகளையும் கைத்தொழில் நிலையங்களையும் உள்ளடக்கியது.

மக்கள் தங்கள் தேவைகளையும் அவசர செய்திகளையும் பரிமாறிக்கொள்ள நம்பி யிருப்பது திஹாரிய உப தபாற்கந்தோரில் இணைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு தொலைபேசி ஆகும்.

மக்கள் நாளாந்தம் இந்தத் தொலை பேசியை நம்பி வந்து ஏமாற்றத்தோடு அங்கலாய்த்துத் திரும்பிச் செல்கின்றனர்.

கே.எம்.முகைதீன்
செயலாளர்-திஹாரிய நலன்புரி அமைப்பு.

### கல்லூரி இல்லை கவலை கொள்ளும் மகளிர்

கிண்ணியாப் பிரதேசத்தில் மகளிர்களுக்கென, சுமைய்யா அரபிக் கல்லூரியொன்று தோற்றுவிக்கப் பட்டு பல வருடங்கள் கழிந்து விட்டன.

இக்கல்லூரியில், பாடசாலை விடுமுறை நாட்களில் பாடசாலை செல்லும் ஏனைய இளம் யுவதிகளுக்கும் மார்க்கக் கல்வியை போதிப்பதே நோக்கமாகும். இக்கல்லூரி யுவதிகளுக்கு ஒரு நிரந்தர கட்டட வசதிகள் இல்லாதது பெருங்குறை. இதுவரை பல வீடுகள் இடமாற்றம் பெற்று தற்போது அல்-அக்ஸா மகாவித்தியாலயத்தில் இக்கல்வி போதிக்கப்பட்டு வருகின்றன.

கிண்ணியா நிருபர்.

### இருள் அகலுமா?

வாழைச்சேனை கிராம சபைக்கு முன்பாகவுள்ள புதிய சந்தை கட்டிடத்தையொட்டி தமிழ் பகுதியை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதி 15 வருடங்களுக்கு மேலாக மின்சார வசதியின்றி இருளிலேயே கிடக்கிறது. எத்தனையோ தடவை அப்பகுதி வாழ் மக்கள் எல்லோரது கையெழுத்துடனும் சம்பந்தப்பட்ட பல இடங்களுக்கும் புகார் செய்தும் இதுவரை பயனில்லை. ஒரு ஒதுக்குப்புறம் என்றால் பரவாயில்லை. நகரின் மையத்தில் போக்குவரத்து நெரிசலுள்ள ஒரு வீதியில் இத்தனை வருடம் இப்படி இருளை அனுபவிப்பது அப்பகுதி வாழ் மக்களின் பெரும் மனக்குறையாகும்.

திருமதி.க.ராணி.

### கவனிப்பாரற்ற கிராமம்

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் கிரான்குளத்திற்கு தெற்கே அமைந்துள்ள கிராமம் தருமபுரம் ஆகும். இக்கிராமத்தில் 52 வீடுகள் உள்ளன. இதில் 100க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். இக்கிராமத்தில் 1983ம் ஆண்டு பல பிரதேசங்களிலுமுள்ள மக்கள் அகதிகளாக குடியமர்த்தப்பட்டார்கள். இருந்தும் இன்னும் இம் மக்கள் தேவையான சீரான பாதை, மின்சாரம், பாடசாலை, பஸ்தரிப்பு நிலையம், போன்றவை இல்லாமல் 10 வருட காலமாக மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு வாழும் மக்களை அகதிகளாகவே புறக்கணித்து வருகின்றார்கள். இக்கிராமத்து மக்களுக்கு நிலையான தொழில் வசதி இல்லாத காரணத்தினால் அனேகமானோர் இரப்பு எடுக்கும் தொழிலையே செய்கின்றார்கள். அண்மையில் அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் இக்கிராமத்து மக்களுக்கு ஒரு வீடுதானும் வழங்கப்படவில்லை. இது போன்று சகல வழிகளிலும் இக்கிராம மக்கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றார்கள். ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்கிராம மக்களின் பரிதாப நிலையை மனதில் கொண்டு தருமபுர மக்களுக்கு உதவி செய்யுமாறு தினமுரசு வாயிலாக பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

க. ரங்கநாதன், தருமபுரம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

மலையக மக்கள் மத்தியில் தற்போது பேசப்படும் பிரதான பிரச்சனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உள் மோதல்கள்.

தனது பிள்ளைக்கு அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் மீதுள்ள பாசத்தோடு சௌமியா என்று பெயர் வைத்தவர் திரு.செல்லச்சாமி.

திருமதி வேலம்மா செல்லச்சாமி கடந்த மாகாணசபைத் தேர்தலில் திரு.தொண்டாவிடம் ஆசிர் வாதம் பெற்றுக்கொண்டே தனது தேர்தல் பணிகளை ஆரம்பித்தார்.



திரு.தொண்டா குறுக்கிட்டு கூறியது ஒரு குட்டுக்குட்டியது போலத்தான்.

இன்னொரு விசயம், கணக்கு வழக்குகளில் கோளாறு, முறைகேடுகள் என்பது பற்றியெல்லாம் பகிரங்கமாக குற்றம் சாட்டிய திரு.செல்லச்சாமி திடீரென்று ஐக்கியம் என்று சொல்வது எந்த அடிப்படையில் என்பது தெரியவில்லை.

தற்போது நடைபெற்றுவரும் பேச்சுக்கள் கூட தேசிய சபையின் முடிவுகள் தொடர்பானதாகவே இருக்கிறது.

ஆனால் அதற்கு முன்னர் இருந்ததாக திரு.செல்லா கூறிய பிரச்சனைகள் என்னவாயின?

தற்போதைய பிரச்சனைக்கே அவைதான் அடிப்படைக் காரணம் என்றால் அவை தீராமல் ஐக்கியம் எப்படிச் சாத்தியமாகும்?

திரு.செல்லச்சாமி முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் சில பாரதூரமானவை.

இலட்சக்கணக்கான மக்ள்து நம்பிக்கையோடு இ.தொ.கா தலைமை விளையாடுகிறதா என்ற கேள்வியை உருவாக்கக் தாமே பகிரங்கமாய் மோதிக்கொண்டு இதைக் கண்டுகொள்ளாதீர்கள் என்று சொல்வது சரியல்ல.

ஒரு பெரிய தொழிற்சங்கம் பிளவுபட்டால் மலையகத் தமிழர்களது அரசியல் பலமும் பலவீனமாகும்.

பேரினவாத சக்திகள் இ.தொ.கா. பிளவுபடுவதை விரும்புகின்றன.

இந்த நேரத்தில் திரு.தொண்டாவும் திரு.செல்லாவும் பொறுப்பேற்று நடந்து கொள்வதே விவேகம்.

இ.தொ.காவின் அரசியல் எதிர்காலம் இரு தலைவர்களது மோதலில் இருண்டுவிடக் கூடாது.

பகிரங்கமாய் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' பாணியில் பேசிவிட்டு, பின்னர் பத்திரிகைகளையும் பிறரையும் குறைசொல்வது சரியல்ல.

விடாப்பிடியான தீர்மானத்தோடு இருக்கிறார்.

தேர்தலில் போட்டியிடுவோருக்கு புலிகள் மரணதண்டனை விதிக்கப்போவதாக பேச்சு வந்ததும் சிலர் சுயேச்சையாகப் போட்டியிடும் ஆசையை விட்டுவிட்டார்கள்.

மட்டக்களப்பில் யாரோ ஒருவரை புலிகள் கொலை செய்ய, தேர்தலில் போட்டியிட இருந்தவரையே புலிகள் தீர்த்துக் கட்டியிருப்பதாக அரசாங்கப் பத்திரிகை முன்பக்கத்தில் செய்தி போட்டது. விளைவு சுயேச்சைக் குழுக்களின் பெருக்கம் குறைந்துவிட்டது.

உள்ளூராட்சி சபைகள் மூலம் குட்டித்தலைவர்கள் என்று ஊருக்குள் வலம்வரும் ஆசையைவிட உயிர்ஆசை பெரியது என்பதால் சிலர் சத்தம் போடாமல் தம் ஆசையை மறைத்துக் கொண்டனர்.

தமிழ் அரசியல் கட்சிகளில் ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ போன்றவை தேர்தலில்

# தொண்டா-செல்லா அரசியல் மோதல்

திருமதி வேலம்மா செல்லச்சாமியை அமைச்சர் தொண்டா ஆசிர்வதிக்கும் புகைப்படங்கள் கொண்ட போஸ்டர்களும் காணப்பட்டன.

கடந்த மாகாணசபைத் தேர்தல் சமயத்தில் கூட தொண்டா-செல்லா பனிப்போர் நடந்து கொண்டுதான் இருந்தது.

திரு.தொண்டமான் தனது இரத்த உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்றும் அதனை. செல்லா விரும்பவில்லை என்றும் பேசப்பட்டது.

என்றாலும் உள் பிரச்சனையை முதலில் வெளியே கொண்டுவந்து பத்திரிகையாளர் மாநாட்டில் தூக்கிப் போட்டவர் திரு.செல்லச்சாமிதான்.

மத்திய மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து அதன் முடிவை மலையகமே எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது திடீர் காட்சி மாற்றம்.

இ.தொ.கா. உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு சார்பாய் மாற, வெளியே சொல்ல முடியாத துக்கத்தில் உள்ளே புழுங்கினார் தொண்டா.

அமைச்சர் செல்லச்சாமி நிதானமாக அப்பிரச்சனையை அணுகியிருக்க வேண்டும்.

மத்திய மாகாண சபையில் ஆளும்கட்சிக்கு சார்பாகப் போனவர்கள் தமது போக்குக்கு அமைச்சர் செல்லாவின் அனுமதியை முன்கூட்டியே பெற்றிருக்கக் கூடும்.

அப்படிப் பெற்றிருந்தால் கூட திரு. செல்லச்சாமி சூழலின் பதட்டத்தைப் புரிந்துகொண்டு களத்தில் இறங்கியிருக்க

ஆயினும், தற்போதைய நிலையைவிட கூடுதலான உறுப்பினர்களது ஆதரவு திரு.செல்லச்சாமிக்கு கிடைத்திருக்கக்கூடும்.

திரு.தொண்டமானுக்கு அடுத்தவர் என்ற நிலையில் உள்ள திரு.செல்லச்சாமி வெளியிடும் கருத்துக்கள் வெளியே மக்கள் மத்தியில் இருந்தும் கூர்ந்து கவனிக்கப்பட்டிருக்கக்கூடும்.

ஆனால், திரு.செல்லச்சாமி உட்பிரச்சனையை கொண்டுவந்து பகிரங்க அரங்கில் முன்வைத்த நேரத்தில் அவரது தலைக்குப் பின்னால் யானை தெரிகிறதோ என்று சந்தேகிக்க வைத்துவிட்டார்.

அதுதான் திரு.செல்லச்சாமி செய்த மாபெரும் தவறு.

உள் பிரச்சனை என்பது வேறு விவகாரம். ஆனால் தனது அமைப்புக்கு துரோகம் செய்வதை எந்தவொரு அமைப்பின் உறுப்பினரும் சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

உள்ளே பிரச்சனை படலாம். ஒரே அமைப்புக்குள் சண்டைபோடலாம். பிரிவும் வரலாம். அந்த நேரத்தில் எழக்கூடிய கருத்துக்கள் என்பவை வேறுபட்டதாக இருக்கும்.

ஆனால், வேறு ஒரு அமைப்போடு சேர்ந்து நின்றுதான் உள்ளே பிரச்சனை படுவதாகத் தெரிந்தால், அல்லது அவ்வாறு நம்பக்கூடிய

கூடியவை.

அதற்கு திரு.தொண்டா பதில் சொல்லவில்லை. இதற்கெல்லாம் ஏன் பதில் சொல்ல வேண்டும். யாரும் அதனை நம்பமாட்டார்கள் என்று திரு.தொண்டா நினைத்திருக்கலாம்.

ஆனால் பல்லாயிரம் தொழிலாளர்களது சந்தாக்களோடு சம்பந்தப்பட்ட விசயம். பொதுப்பணம் முறைகேடாகப் போகவில்லை. பத்திரமாக இருக்கிறது என்பதை ஆதாரபூர்வமாக தெரிவிப்பது இ.தொ.கா. நிதிக் காரியதரிசியின் கடமையாகும்.

அதுவும் பொதுச் செயலாளரே அப்படி ஒரு சந்தேகத்தை எழுப்பிய பின்னர் அந்தச் சந்தேகத்தை தீர்க்க வேண்டியது இ.தொ.காவின் கடமையாகும்.

திரு.செல்லச்சாமியும் தனது சந்தேகத்தை அல்லது குற்றச்சாட்டை வெளிப்படையாக கூறிவிட்டு சும்மா ஒரு பேச்சுக்கு சொன்ன கதையாக மற்றவர்கள் மறந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது.

ஒருவேளை திரு்.செல்லச்சாமி மீண்டும் திரு.தொண்டாவுடன் கை கோர்த்து பழைய நட்புறவை புதுப்பித்துக் கொள்ளலாம்.

ஒரு பெரிய தொழிற்சங்கம் பிளவுபடாமல் இருப்பது, பிளவு தவிர்க்கப்படுவது வரவேற்கப்படவேண்டிய விசயம்தான்.

ஆனால், பிரச்சனை என்று வரும்போது



குதிக்கின்றன.

மட்டக்களப்பில் ரெலோ பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரன் சுயேச்சைக் குழு ஒன்றை உருவாக்கிவருகிறார்.

ரெலோ என்ற பெயரில் கேட்பதைவிட சுயேச்சைக்குழுவாகக் கேட்பதே மேலானது என்பதாய் அவரது போக்கு வெளிப்படுகிறது.

# உள்ளூராட்சித் தேர்தலும் உருவாகப் போகும் குட்டித் தலைவர்களும்

வேண்டும்.

இ.தொ.காவில் அமைச்சர் செல்லா நீண்டகாலமாகப் பொதுச் செயலாளராக இருப்பவர்.

இ.தொ.காவின் உள் பிரச்சனைகள் பலவற்றை ஓடித்திரிந்து தீர்த்து வைத்தவர். அதனால் உறுப்பினர்களின் அன்புக்குப் பாத்திரமானவர்.

அதுதான் மிக நீண்டகாலமாக அவரால் பொதுச். செயலாளராக இருக்க முடிந் திருக்கிறது.

இப்போது திரு. செல்லச்சாமி சில பிரச்சனைகளை முன் வைத்துள்ளார்.

பொதுச் செயலாளரான தன்னோடு தலைவர் அமைப்பு வேலைத்திட்டங்கள் பற்றி கலந்து பேசுவதில்லை என்று கூறியுள்ளார்.

ஒருவேளை தனது உழைப்பும் விசுவாசமும் புறம்தள்ளப்படும் வெறுப்பு திரு. செல்லச்சாமியை பகிரங்கமாக அந்த வெறுப்பைக் கொட்ட வைத்துள்ளது என்று கருதலாம்.

திரு.செல்லச்சாமி முன்வைத்துள்ள கருத்துக்கள் இ.தொ.காவின் உள் விடயங்கள் சம்பந்தப்பட்டவை.

தமது அமைப்புக்குள் ஏற்பட்ட பிரச்சனைகளை உள்ளே தீர்க்க முடியாத நிலையில் அவர் வெளியே கொண்டு வந்திருந்தால் இ.தொ.கா உறுப்பினர்களில் எத்தனை வீதமானோர் அதனை ஆதரித்திருப்பர் என்பது தெரியவில்லை.

நிலை ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட அமைப்பின் விசுவாசிகள் பிரச்சனை எழுப்புவதோடு எதிராக மாறிவிடுவார்கள். முன்வைக்கப்படும் பிரச்சனையில் என்ன தான் நியாயம் இருந்தாலும் கூட அது எடுபடாது.

அதுதான் திரு.செல்லச்சாமி முன்வைத்த கருத்துக்களுக்கும் நடந்துள்ளது.

அமைப்புக் கட்டுப்பாடு ஒழுக்கம் என்று திரு. தொண்டமான் தூக்கிய ஆயுதங்கள் நன்றாக வேலை செய்தன.

பொதுத் தேர்தலில் காலை வாரியவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு, வெறுப்புக்கு உள்ளானவர்கள் சார்பாக திரு. செல்லச்சாமி பகிரங்கமாக ஆதரவாகப் பேசியது பெரிய தவறு. ஐக்கியம் என்று அவர் தூக்கிய கவசம் பலவீனமானதாக இருந்தது. அமைச்சர் தொண்டா வீசிய ஆயுதங்கள் முன் அந்த கவசம் தற்காப்புத் திறன் இன்றிப் போய் விட்டது. கடைசியில் திரு.செல்லச்சாமி அணியினர் ஐக்கியம் என்னும் தமது பலவீன மான கோசத்தோடும், கவசத்தோடும் இறங்கிவர வேண்டியதாகிவிட்டது.

பத்திரிகையாளர் மாநாடு நடத்தி தனது மனதை திறந்து கொட்டியவர் இறுதியில் திரு.தொண்டமானோடு இணைந்து தோன்றினார்.

மாநாட்டில்கூட திரு.தொண்டமான் தனது இறுக்கமான போக்கை தளர்த்தவில்லை.

ஐக்கியமே முக்கியம் என்று திரு.செல்லா கூற, கட்டுப்பாடே அவசியம் என்று குற்றச்சாட்டுக்களை அடுக்குவதும், பின்னர் அவற்றை மறந்துவிட்டு ஒற்றுமையாவதும் அரசியலின் தரத்தை கீழ்நோக்கித் தாழ்த்தவே செய்யும். யார் பற்றியும் எதை வேண்டுமானாலும் பேசலாம். எப்படியும் பேசலாம். அரசியல்வாதிகள் அடிபட்டுக் கொள்வார்கள். அந்த நேரத்தில் பலவிதமாக பேசவும் செய்வார்கள். மக்கள் கண்டுகொள்ளக் கூடாது மறந்துவிட வேண்டும் என்பதாக அரசியல்வாதிகள் நினைக்கக் கூடாது.

திரு.செல்லச்சாமி திரு.தொண்டமானுடன் இணைந்து பங்குகொண்ட பத்திரிகையாளர் மநாட்டில் ஒரு சுவையான சம்பவம்.

கேள்வி கேட்ட பத்திரிகையாளர்களைப் பார்த்து "இப்படியான கேள்விகள் எமது ஐக்கியத்தை குலைக்கும்" என்ற ரீதியில் திரு செல்லா கருத்துச் சொல்லியுள்ளார்.

இதைவிட வேறு ஒரு நல்ல ஜோக் இருக்க முடியாது.

பத்திரிகையாளர்களைக் கூட்டிவைத்து இ.தொ.கா. பிரச்சனைகளை விலாவாரியாக அலசியவர் திரு.செல்லா.

அவர் திடீரென்று இ.தொ.கா. ஐக்கியத்தை குலைக்க பத்திரிகைகள் முயல்வது போல பேசுவது பிழையான விசயம்.

மேலும், இ.தொ.காவின் ஐக்கியத்தை கட்டிக்காக்கும் வேலை பத்திரிகையாளர்களுக்கு உரியதல்ல.

பொய்யான செய்திகளை போட்டால், திட்டமிட்டே சேறு பூசினால் கோபப்படலாம்.

கட்டிக்காத்த அமைப்பை சிதறவிடாமல் தொடர்ந்தும் காப்பது அந்த அமைப்பினரது கடமையாகும். இரு தலைவர்களதும் கடமையாகும் என்பதே மலையக தமிழர்களது நலன் குறித்து அக்கறை கொண்டவர்கள்" கூறும் கருத்தாகும். ■

உள்ளூராட்சித் தேர்தல்கள் கிழக்கிலும், வவுனியாவிலும் நடக்கப் போகின்றன.

தள்ளிப் போட்டு தள்ளிப்போட்டு இப்போது நடத்தியே முடிப்பது என்று இறுதிமுடிவோடு அரசாங்கம்.

இந்த முடிவும் ஜனாதிபதியின் திடீர் முடிவென்றே கூறப்பட்டது.

என்னவோ தெரியவில்லை. கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதில் ஜனாதிபதி வெகுஆர்வமும், வேகமும் கொண்டவராகத் தெரிகிறார்.

இம்முறை கிழக்கில் உள்ள ஆளும்கட்சி உறுப்பினர்கள் பலர் தேர்தலை பின்போடுமாறு கேட்டிருந்தனர். முடியாது என்று ஜனாதிபதி பதில் சொல்லிவிட்டார்.

ஆளும்கட்சியினருக்கும், மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கும் கிழக்கில் தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இல்லை என்பது தெரிந்தேயிருக்கிறது.

மட்டக்களப்பு அரச அதிபர் கூட தேர்தல் நடத்த உகந்த சூழல் இல்லை என்றே கூறியிருந்தார்.

ஜனாதிபதி மட்டுமே தேர்தல் விசயத்தில்

ரெலோவும் தனியாக ஒரு பட்டியலை முன்வைக்கக்கூடும்.

அபிவிருத்திப் பணிகளே முக்கியம். கட்சியைக் கலைக்கிறோம் என்று கூறிய ஈரோஸ் அமைப்பினர் தேர்தலையும் அபிவிருத்திப் பணி என்று நினைத்தார்களோ என்னவோ, களத்தில் குதிக்கின்றனர்.

பொதுவாகவே எந்தவொரு தமிழ் அமைப்பும் முழுமையான கட்சி வடிவத்தோடு செயற்படவில்லை என்பதால் தேர்தல்களில் தமது உறுப்பினர்களை வேட்பாளர்களாக நிறுத்தமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

ஊருக்குள் நல்லவர்கள் என்று தாம் கருதுவோரை தேர்தலில் நிறுத்தி இவர் நல்லவர், எம்மவர், வாக்குப்போடுங்கள் என்று சொல்லப்போகின்றனர்.

இதனைவிட தமிழ் அமைப்புக்கள் யாவும் இணைந்து ஒரு பொதுப்பட்டியலை முன்வைத் திருக்கலாம். அல்லது ஒரு சிறந்த சுயேச்சைக் குழுவை தெரிவுசெய்து அதற்கு ஆதரவு தெரிவித்திருக்கலாம். அப்படி நடந்திருந்தால் உருவாகப்போகும் குட்டித்தலைவர்கள் நாளை சம்பந்தப்பட்ட அமைப்புக்களது பெயர்களைக் கெடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

எனினும், எதிர்வரும் பெரிய தேர்தலுக் கான ஒரு பயிற்சிக்களமாக குட்டித் தேர்தல் களைப் பயன்படுத்த அவை நினைக்கக்கூடும்.

தொடர்ந்தும் தேர்தல் அரங்கை அவதானித்து அடுத்த வாரமும் அலசலாம். ■

## அதிரடி அய்யாத்துரை

ரெண்டு எழுத்தாரின் பழைய பிரதியார் விசயத்திலை தீர்ப்பு உறுதியாகிட்டுதாம். பக்கத்து நாட்டு வலையிலை விழுந்து தலைவருக்கு குறி வைச்சது எண்டு ரெண்டு எழுத்தாரின் வெளிநாட்டுப் பேப்பர்களிலை எழுதத் தொடங்கிட்டினமாம். எத்தனை பேருக்கு தண்டனை கொடுத்தவர். இப்ப அவற்றை நிலைமையை நினைச்சா...?

திருமலையிலை 'தேர்தலில் நிற்க ரெடி' என்று முதல்நாள் சொன்னவர் மறுநாள் தலை தெறிக்க ஓடி வந்தாராம். என்ன விசயம் எண்டு கேட்க, காலில் விழாத குறையாக கெஞ்சினாராம். நான் எலக்சன் கேட்டா வீட்டை விட்டு போகப் போறதா மனுசி சொல்லுறா. என்னர பேரைப் போட வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டு ஒரே ஓட்டமாம்.

ரெண்டு எழுத்துக்காரர் மட்டும் சத்தம் போடாமல் இருந்தால் தேர்தலில் குதிச்சு ஒரு கலக்குக் கலக்க எக்கச்சக்கமான ஆட்கள் ரெடிதான். அதுவும் ஊருக்கை நாட்டாண்மை காட்ட ஒரு நல்ல சான்ஸ். சின்ன வருமானங்களும் உண்டு. விட மனம் வருமோ? ரெடிதான். என்ன வெடிதான் கொஞ்சம் பயமூட்டுது.

யாழ்ப்பாணத்திலை பரவாத வியாதியளே கிடையாது. வைத்தியர் களே பஞ்சம். அட்டகாசமான வைத்திய விற்பன்னர்கள் எல்லாம் விமானம் ஏறிப் போய்ச் சேர்ந்திட்டினம். ஆனால் பாருங்கோ அங்கை தான் புதுப்புது வியாதி எல்லாம் பரவுது. இப்ப ஏதோ புதுக் காய்ச்ச லாம். வயது குறைஞ்ச பிள்ளையளைப் பார்த்துத்தான் பரவுதாம். யாழ்ப்பாணத்திலை இளம் பிள்ளையளுக்கு எத்தனை தொல்லைகள்!

பரீட்சை நடத்தி பரிசுகளும் கொடுத்திருக்கினம் ரெண்டு எழுத்துக்காரர். அரசாங்கப் பரீட்சையிலை இந்த முறை வடக்கு படு



வீழ்ச்சி கண்டிருக்குது. ஆனால் ரெண்டு எழுத்துக்காரர் நடத்தின பரீட்சையிலை கன பேர் பரிசு தட்டியிருக்கினம். நாட்டு நிலவரத்தை ஒட்டின கேள்வியளா இருந்திருக்கும். பிள்ளையள் பிய்ச்சு உதறியிருக்குங்கள்.

மலையகத் தனித்துவ தலைவரை பலவீனப்படுத்த பலமுனைகளில் முயற்சி நடக்குதாம். அவரும் விட்டுக் கொடுக்கிற மாதிரி இல்லை. தற்போதைய நிலையிலை அவருக்கு எதிரானவை தனிக்கட்சி அது இது எண்டு வெளிக்கிட்டாலும் சரிவாற மாதிரித் தெரியேல்லை. அதாலை அந்த ஐடியா இப்போதைக்கு இல்லை.

சிங்களப் பத்திரிகை ஒண்டு நல்ல விசயத்தை சொல்லியிருக்குது. மலையகத்திலையும் வடக்கு கிழக்கு மாதிரி சூழ்நிலை வராமல் பார்க்க வேண்டும். அங்கையுள்ள பிரச்சனையளை கவனத்திலை எடுக்க வேணும் எண்டு நியாயமான கருத்தை சொல்லியிருக்குது. அரசியல்வாதியளுக்கு அது புரிய வேணும். யாரைப் பிரிக்கலாம். யாரை மோதவிடலாம் யாரை வசைபாடலாம் எண்டமாதிரி யோசிச்சா உள்ளதையும் கெடுத்த நொள்ளிக் கண்ணன் கதைதான்.

பள்ளிக்கூடங்களிலை பிள்ளையளை சேர்க்க வேணுமெண்டா தாயோ தகப்பனோ பிள்ளையளைக் கையிலை பிடிச்சுக்கொண்டு நேரடியாக போய் தலைமையாசிரியரை பார்க்கிறது அந்தக்காலம். இப்ப நிலமை வேறை. அங்கை போ. இங்கை போ. அவரைப் பாருங்கோ இவரைப்பாருங்கோ எண்டு ஒரே அலைச்சல். அதுவும் தலைநகரிலை வடக்கு-கிழக்கு பிள்ளையள் பள்ளிக்கூட அனுமதி வாங்குறது பெரும் பாடாய் இருக்குதாம்.

இத்தனை இழந்தும், இவ்வளவு நடந்தும் எங்கடை ஆக்களுக்கை இன்னும் ஒற்றுமை வரேல்லைப் பாருங்கோ. வாற மாதிரியும் தெரியேல்லை. இதைத்தான் பாரதியார் அந்தக் காலத்திலையே சொல்லிப் புழுங்கினவர்.

"ஐந்து தலைப் பாம்பு என்பான்- அப்பன்
ஆறுதலை என்று மகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்-பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்."

இப்பிடித்தான் பாருங்கோ. காரணம் சிறிசு. பிரிவு பெரிசு. எப்பதான் எங்கட சனம் ஒன்றாகிறது? ■

# சென்ற காலத் தலைவர்களின் சிலை உடைக்கும் காலம் இது!



## செஞ்சீனம் மட்டும் மா ஓவை மறக்கவில்லை!!

மக்கள் சீனா என்ற மகோன்னத நாட்டை உருவாக்கிய மேதை மா ஓ சேதுங். டிசம்பர் 26ம் திகதி அன்னாருடைய 100வது பிறந்தநாள் விழா. சீன மக்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நாட்டின் தென் மத்திய மாகாணத்தில் ஒஷான் என்ற நகரில் 10 மீட்டர் உயர வெண்கலச் சிலை ஒன்றினை தலைவர் மா ஒவுக்கு நிறுவியுள்ளனர். ஒஷான் நகரில்தான் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மா ஓ பிறந்தார்.

தலை நகரான பெய்ஜிங்கில் உள்ள மக்கள் மா மண்டபத்தில் ஒரு நினைவு தினக் கூட்டம் அன்று நடைபெற்றது. நாட்டிலுள்ள மிக முக்கியஸ்தர்கள் 10,000 பேர் வரை இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். சீன பொதுவுடமைக் கட்சியின் தலைவர் ஜியாங் ஸெமின் உரையாற்றுகையில், "தலைவர் மா ஓ தாய்நாட்டின் மீது அபார பற்றுக்கொண்ட மாவீரர்" என்றார்.

மா ஓவின் நூற்றாண்டு விழாவுக்காக பல நினைவுச் சின்னங்கள் வெளியிடப்பட்டுள்ளன. பதக்கங்கள், புத்தகங்கள், சிகரட் லைட்டர்கள் போன்ற பல பாவனைப் பொருட்களில் மா ஓவின் உருவங்கள் பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

மக்கள் தொகை கூடிய தேசம் சீனா. 110 கோடிக்கும் அதிகமான மக்கள் இன்றுள்ளனர்.

அன்று-

நூறு கோடி மக்களையும் தட்டியெழுப்பியது ஒரே குரல்.

அந்தப் பரந்த பிரதேசமெங்கனும் பிரதிபலித்தது அதே குரல்.

பாட்டாளி மக்களும் விவசாயப் பெருமக்களும் புரட்சிச் சங்க நாதம் கேட்டுத் துடித்தெழுந்தனர்.

அடிமை வாழ்வு விடைபெற்றது. அகிலமே வியக்க 1949ல் மலர்ந்தது மக்கள் சீனம்.

மாஓவின் வழிகாட்டலில் நடை போடும் தலைவர்களால் இன்றைய நவ சீனம் உலகின் வல்லரசாக வரும் அளவு வளர்ச்சி கண்டு வருகிறது.

முன்பிருந்த தலைவர்களை பின்பு வருவோர் குறைகூறி வரும் காலம் இது. வழி காட்டியவர்களின் சிலைகளையே உடைத்தெறிந்துவிட்டு அவர்கள் மீது காறி உமிழும் கொடியவர்களையே இன்று காணக்கூடியதாக இருக்கிறது: ஆனால் சீனாவின் இன்றையத் தலைவர்கள் தங்கள் வழிகாட்டியை உதாசீனம் செய்யவில்லை.

அவரை உதாரபுருஷராகக் கொண்டே, அவர் விட்ட பணியினைத் தொடர்கின்றனர்.

மாஓ தனது ஆட்சிக்காலத்தில் கையாண்ட பல வழிகளில் மிகவும் கொடூரமான சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன என்பதனை மறுக்க முடியாது. 'கலாசாரப்புரட்சி' என்று நாமகரணம் சூட்டப்பட்ட நடவடிக்கை, நன்மையினை விட தீமைகளையே விளைவித்திருந்தது.

'தேசத்துரோகிகள்' என்ற குற்றச் சாட்டுடன் இலட்சக்கணக்கான மக்கள் சிறையிலடைக்கப்பட்டனர்; சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டனர். கொன்று குவிக்கப்பட்டனர். முற்றிலும் இளஞர்களை உள்ளடக்கிய 'செம்படை' மக்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவே விளங்கியது.

இந்தச் சம்பவங்கள் மாஓ வரலாற்றின் பொன்னேடுகளில் கறை படிந்தவையாக இருந்த போதிலும் அந்த மாமனிதரின் தியாகங்கள் வீண் போகவில்லை. எமா ஓசேதுங் விதைத்த அருமையான கருத்தோவியங்கள் இன்றும் பெரும் பலனை அளித்து வருகின்றன. அவரின் சிந்தனையில் மலர்ந்த செம்மை மிகு மலர்கள் மக்கள் அனைவருக்கும் இன்றும் நறுமணம் பரப்பி வருகின்றன.



மாஓ மறைந்த போதும் அவரது உடல் பத்திரமாய் காக்கப்படுகிறது.

# ரஷ்யாவைக் கலக்கிய கடத்தல் நாடகம்!



கடத்தல் முறியடிக்கப்பட்டு மீட்கப்பட்ட சிறுவன், மீட்பாளரின் அரவணைப்பில்.



## சினிமாப் பாணியில் நடந்த துணிகரக் காட்சிகள்!!

### உலக ரவுண்டப்

சோவியத் ஒன்றிய அமைப்பு சீர்குலைந்ததைத் தொடர்ந்து, அந்த அமைப்பிலிருந்து வெளியேறிய நாடுகளில் அரசியல் நெருக்கடிகளும் பொருளாதாரச் சீரழிவுகளும் உணவு முதலான அத்தியாவசியப் பொருட்களுக்குப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளன. இவற்றுக்குச் சிகரம் வைத்ததைப் போல வன்முறைகள் மலிந்துவிட்டன.

அண்மையில் மிகவும் பாரதூரமான தொரு சம்பவம் நடந்து முடிந்தது. இச்சம்பவத்தின் விளைவு எங்கே போய் முடியுமோ என்று அனைத்துலகமுமே விசனத்திலாழ்ந்திருந்த போது, எதிர்பார்த்ததுக்கு மாறாக- இரத்தம் எதுவும் சிந்தப்படாமல் சுலபமாக முடிவடைந்தமை ஓரளவு ஆறுதலை அளித்திருக்கிறது.

டிசம்பர் 23ம் திகதி இந்நாடகம் ஆரம்பமாகியது. தெற்கு ரஷ்யாவிலுள்ள ரொஸ்ரொவ் ஒன்-டொன் நகர்தான் இந்த நாடக அரங்கேற்றத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம். நான்கு முரடர்கள், பொது மக்கள் பயணம் செய்த பேருந்து (பஸ்) ஒன்றினை அபகரித்தனர்.

வாகனத்தை ஓட்டிச்சென்று ஒரு பள்ளிக்கூடத்தின் முன் நிறுத்தினர். ஒருவகுப்பறையுள் புகுந்து 15 மாணவர்களையும் ஆசிரியர் ஒருவரையும் ஆயுத முனையில் கடத்தினர். அனைவரையும் பேருந்தில் ஏற்றிக்கொண்டு ஒரு மைதானத்தை அடைந்தனர். அங்கிருந்த ஒரு ஹெலிக்கொப்டரில் அவர்களைத் திணித்து கிரெஸ்நோடர் என்ற இடத்தை நோக்கிச் சென்றனர்.

"ஒரு கோடி அமெரிக்க டொலர் உடன் தேவை. நாங்கள் நால்வரும் எய்ட்ஸ் நோயாளிகள். இரான் நாட்டுக்குச் சென்று சிகிச்சை செய்யப் போகிறோம். மறுத்தால் ஹெலிக்கொப்டருடன் அனைவரையும் ஒழித்துக்கட்டப் போகிறோம்" என்பதுதான் அவர்கள் விதித்த நிபந்தனை.

அரசியல் பிரச்சனைகளால் சின்னாபின்னப்பட்டுக் கிடக்கும் ரஷ்யாவுக்கு இது ஒரு பெரும் சவாலாகவே இருந்தது. இருப்பினும் நிர்வாகிகள், அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் துரித கதியில் இயங்கினர். பொருளாதாரச் சீரழிவினால் சிதைவற்றுக் கிடக்கும் ரஷ்யாவின் திறைசேரி நான்கு நாள் தவணைக்குள் ஒரு கோடி டொலரைத் திரட்டி கடத்தல் காரர்களிடம் ஒப்படைத்தது. இப்பணத்தில் ஒரு பகுதியினை கடத்தப்பட்டவர்களுக்கு வழங்கப் போவதாகவும் அவர்கள் வாக்களித்தனர்.

கடத்தப்பட்ட மாணவர்களில் 11 பேரை, பணம் கையில் கிடைத்ததும் ஹெலியிலிருந்து கீழிறக்கி விட்டனர். எஞ்சிய மாணவர்களுடன் பேருந்து ஓட்டுநரையும் ஆசிரியரையும் மினெறலின் வோடி என்ற இடத்தில் இறக்கிவிட்டபின்னர் தங்கள் பயணத்தைத் தொடர எத்தனித்தனர். சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த மற்றுமொரு பிரதேசமான தகேஸ்தான் என்ற நாடுதான் அவர்களுடைய இலக்காக இருந்தது. இங்குள்ள கிளர்ச்சியாளர்களின் கூட்டாளிகளாகத்தான் இந்த நால்வரும் இருக்கக் கூடும் என்பதுதான் அதிகாரிகளின் கணிப்பு.

ஹெலிக்கொப்டர் புறப்படும்போது அவர்களைத் துரத்திப்பிடிப்பதற்கான திட்டங்களும் விரிவாக வகுக்கப்பட்டுவிட்டன என்பதை அந்த நால்வரும் அறிந்திருக்கவில்லை. தங்கள் திட்டம் பரிபூரணமாக வெற்றியடைந்துவிட்டது என்று வானில் பறந்த அவர்கள் தரையில் இறக்கப்பட்டனர். நால்வரும் கைது செய்யப்பட்டனர். ஆனால் ஒரு கோடி டொலரில் 5இலட்சம் டொலர் மாயமாக மறைந்து விட்டது. ஹெலிக்கொப்டரைவிட்டு அந்த நால்வரும் வெளியேறவில்லை. இந்தப் பணம் எவ்வாறு மறைந்தது என்பதே இப்போது அனைவரையும் வியப்பிலாழ்த்தியிருக்கிறது.

எப்படியோ ஆயிரம் மைல் வரை ஹெலி ஓட்டம் நடந்து இந்த நாடகம் சுபமாக முடிவுற்றது சகலரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

நன்றி-டைம்

# ஒற்றைக்கால் எஞ்சினியரும் சதித்திட்டமும்! இந்திய உளவுப் பிரிவே அனுப்பி வைத்ததாம்!!

புலிகள் அமைப்பின் உள் பிரச்சனைகள் பற்றி கனடா செந்தாமரையில் வெளியான தகவல்களின் தொடர்ச்சி இது. தற்போது புலிகள் அமைப்பின் மாத்தையா பற்றிய பிரச்சனையைப் பகிரங்கப்படுத்த ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் எதுவும் முரசின் கருத்தல்ல.

### இந்தியாவின் குறிக்கோள்

இந்தியப் படைகள் புலிகளுடன் போரிட்ட காலத்திலேயே மாத்தையா-பிரபாகரன் பற்றிய பல முரண்பட்ட தகவல்கள் இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகின. ஒருவர் கடும் போக்காளர். மற்றவர் மென்போக்காளர் என்று மாறி மாறி செய்திகள் வந்தன. இருவருக்குமிடையில் பிளவு என்றும் செய்திகள் வந்தன. இறுதியில் வன்னிக்காட்டில் வைத்து மாத்தையா பிரபாகரனைச் சுட்டுக் கொன்று விட்டார் என்றும் செய்தி வந்தது. பின்னர் றோ அதிகாரி ஒருவர் தாமே இப் பொய்த் தகவல்களைப் பத்திரிகைகளுக்கு வழங்கியதாகவும் பிரபாகரன் மரணமடைந்தால் எத்தகைய பின் விளைவுகள் ஏற்படும் என்பதை அனுமானிக்கவே இப்படிச் செய்ததாகவும் கூறினார். அக்காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிக்காமல் அதன் தலைமைத்துவத்தை மாத்திரம் ஒழிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை இந்தியா கடுமையாக ஆராய்ந்தது. இதையடுத்துப் போர் முடிந்து இந்தியப்படைகள் வெளியேறின.

### பிளவுபடுத்தும் சதி

நரசிம்மராவ் பதவிக்கு வந்ததையடுத்து வெளியுறவுக் கொள்கையை ஒரு மீகாமனில்லாத மரக்கலமாக ஆக்கிவிட்டார். இவ்வாறான நிலையில் 'றோ' போன்ற உளவு அமைப்புக்கள் கட்டுப்பாடற்ற நிலையில் பல திட்டங்களை உருவாக்கினர். அவற்றில் ஒன்று தான் விடுதலைப் புலிகள் இயக்கத்திடையே பிளவு ஏற்படுத்துவது. ஏற்கனவே இந்திய அதிகார வர்க்கம் முன்யோசனையுடன் ஒரு காரியத்தைச் செய்தது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பிரபாகரனைக் குற்றவாளியாக்கினால், ஏதோவொருகையில் -அதனை நிரூபித்தால் எந்தவொரு கால கட்டத்திலும் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் ஒரு சமரசத்துக்கு வர முடியாது.

ஆனால் அவரில்லாத நிலையில் மாத்தையாவோ வேறு ஒருவரோ தலைவரானால் புலிகளுடன் இந்தியா உடன்பாடு காணமுடியும் என்பது போன்ற முன்னேற்பாடாக இது அமைந்தது. பிரதி-தலைவரைக் குறிப்பிடாமல் தலைவரையும் உளவுப்பிரிவுத் தலைவரையும் மாத்திரம் குற்றவாளிகளாகக் குறிப்பிட்டது இந்தியா.



இதன் மூலம் பிரபாகரன்-மாத்தையா நல்லுறவைப் பிளக்க இந்தியா வித்திட்டது.

### ஒற்றைக் கால் எஞ்சினியர்

இந்திய உளவுப் படையினர் முயற்சிக்குப் பலியானவர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் சென்னையில் பல காலம் தங்கியிருக்கும் வடமராட்சி வாசியான தியாகராசா என்பவர். மற்றவர் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த எஞ்சினியர் என்பவர். இந்தத் தியாகராசாவுடன் சில பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் திட்டத்தை பூரண விபரங்களுடன் கொண்டு வந்தவர் எஞ்சினியர் தான். இந்த எஞ்சினியர் என்பவரின் இயற்பெயர் மாணிக்கவாசகர் மகேந்திரராஜா. இவரது பட்டப் பெயர் எஞ்சினியரே ஒழிய இவர் தொழில் முறைப் பொறியியலாளர் அல்ல. வாகனங்கள் ஒட்டுவதில் பழுதுபார்ப்பதில் மிகவும் சமர்த்தர். இந்தத் திறமையினால் தான் அவருக்கு எஞ்சினியர் என்று பெயர். இவர் மறைந்த விடுதலைப்புலி வீரன் லெப்டினன் வாசன் என்ற குலேந்திரராசாவின் சகோதரன். வாசன், கிட்டு யாழ் தளபதியாக இருந்த போது பல தீரமான செயற்பாடுகளில் ஈடுபட்டு பின் வீரமரணத்தைத் தழுவியவர்.

மகேந்திரா என்றும் எஞ்சினியர் என்றும் அழைக்கப்பட்ட இவரது சகோதரன் புலிகளின் உள்ளூர் பயிற்சி பெற்று ஆதரவாளராகச் செயற்பட்டவர். புலிகளுக்கு வாகனம் கூட ஓட்டுவார். 1987 கட்டுவனில் இவரது வாகனம் ஹெலித் தாக்குதலுக் குட்பட்ட போது ஒரு காலை இழந்தவர். தமிழகத்தில் நெய்வேலி சென்று செயற்கை கால் பொருத்தியவர், பின்னர் 1991ல் புலிகளின் படகில் இந்தியா சென்று ஜய்பூரில் செயற்கைக் கால் ஒன்றைப் பொருத்திக் கொண்டார். அச் சமயம் ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்டார். இலங்கை- இந்தியா நாட்டுப்படகுச் சேவை ஸ்தம்பித்தது. ராஜிவ் காந்தி கொலைக்குப் பினனர் இலங்கைத் தமிழர்கள் கணக்கு, வழக்கின்றி இந்தியாவில் கைது செய்யப்பட்ட போது இவரும் கைது செய்யப்பட்டார். இச் சமயத்தில் றோ அமைப்புஅவர் மேல் கண் வைத்தது.

தியாகராஜா, எஞ்சினியர் ஆகிய இருவருடனும் திட்டம் வரையப்பட்டது. இத்திட்டத்தை எடுத்து வந்து சேர்ந்தது, இச் சதி முயற்சிக்கு இலங்கை அதிகாரிகளின் அனுசரணையும் உண்டென்று காட்டியது. இந்த எஞ்சினியர் மாத்தையாவுக்கு மிக நெருக்கமானவர். இதே சமயம் இவரது உடனடி சுற்றத்திலிருந்து 5 அல்லது 6 பேர் புலிகளில் இணைந்து போராடி வீரமரணம் எய்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உளவுத் துறை உசார் அடைந்தது

ஜெய்ப்பூர் காலணிந்தவர், இந்தியாவில் சிறை பிடிக்கப்பட்டவர். எப்படி தென்னிலங்கையூடாகப் பிரச்சினையின்றி வந்தார் என்ற சந்தேகமே புலிகளின் உளவுத் துறையை உஷார் படுத்தியது. ஆனால் அந்நேரம் இவ்வளவு பாரதூரமான சதிப் பின்னணி இருக்கும் என்று அவர்கள் கற்பனை பண்ணிக்கூட இருக்கவில்லை. எஞ்சினியர் கவனமாக நோட்டமிடப்பட்டார்.

(மிகுதி அடுத்த முரசில்)

# அலசுவது – இராஜதந்திரி

## புதிய தளபதியின் பதவியேற்புடன் பிறந்த புதிய ஆண்டு, ஜனாதிபதித் தேர்தலை நோக்கி நகர ஆரம்பிக்கின்றது!

புதிய ஆண்டு புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் பதவி யேற்புடன் ஆரம்பமாகியுள்ளது.

புதிய தளபதியின் நியமனம் இராணுவ வட்டாரத்தில் ஒரு புதிய தெம்பையே உருவாக்கியுள்ள நிலை காணப்படுகின்றது.

ஒரு நல்ல தலைமைத்துவப் பண்பைக் கொண்ட லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் கீழ் இராணுவம் தகுந்த வகையில் வழிநடத்தப்படும் என்ற நம்பிக்கை சிரேஷ்ட் படை அதிகாரிகளிடையே நிலவக் காணப்படுகின்றது.

புதிய தளபதி ஜெரி டி சில்வாவும், தமது பதவியேற்பு வைபவத்தையடுத்து முதல் பணியாக யுத்தத்தினால் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் சிப்பாய்களை நேரில் சென்று சந்தித்திருந்தார்.

இலங்கையின் பதினோராவது இராணுவத் தளபதியாகப் பொறுப் பேற்றுள்ள தளபதி ஜெரி டி சில்வா ஒரு கத்தோலிக்க மதத்தவராவார். அத்துடன் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா கல்வி பயின்ற கொழும்பு மருதானை சென்ஜோசப் கல்லூரியிலேயே தளபதி ஜெரி டி சில்வாவும் கல்வி பயின்றிருந்தார்.

ஓர் இராணுவ அதிகாரியின் மகனான ஜெரி டி சில்வா, இரு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவினால் கொழும்பு சென்ஜோசப் கல்லூரியின் சிறந்த மாணவர்களில் ஒருவராகவும் பாராட்டப் பட்டிருந்தார்.

இதேவேளை பதவியிலிருந்தும் ஓய்வு பெற்றுள்ள முன்னாள் தளபதி சிசில் வைத்யரத்ன, இராணுவ சேவை குறித்த தமது கண்ணோட்டத்தையும் வெளியிட்டிருந்தார்.

முன்னாள் தளபதி சிசில் வைத்யரத்ன இந்த ஆண்டின் மே மாதத்திலேயே தமது பதவியிலிருந்தும் ஓய்வு பெறவிருந்தார். ஆனால் பின்னர் தமது முடிவைமாற்றி ஐந்து மாதங்கள் முன்பதாகவே கடந்த டிசம்பர் மாத இறுதியில் அவர் பதவியிலிருந்தும் ஓய்வு பெற்றுக்கொண்டார்.

தளபதி வைத்யரத்னவின் பதவி ஓய்வு பற்றிய அறிவிப்பும், அது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களும் இராணுவ வட்டாரத்தில் பலத்த சர்ச்சைக்கு இடமளித்திருந்தன.

"தோல்வியடையும் இராணுவத்தின் தளபதியர்க இருக்க நான் விரும்பவில்லை" என்று முன்னாள் தளபதி சிசில் வைத்யரத்ன கூறியதாக அவரது கூற்றை ஆதாரங்காட்டி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால் இச்செய்தியை முன்னாள் தளபதி சிசில் வைத்யரத்ன மறுத்திருந்தார். "தோல்வியடையும் இராணுவம்" என்ற வார்த்தையை தான் உபயோகிக்கவில்லை என்று அவர் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

ஆயினும் முன்னாள் தளபதி சிசில் வைத்யரத்ன, தமது பதவி ஓய்வையடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையில், தமது பதவிக்காலத்தில் இராணுவம் பல பின்னடைவுகளுக்கு முகங்கொடுத்ததை ஏற்றுக் கொண்டிருந்தார்.

அப்பின்னடைவுகளில் பூநகரியில் ஏற்பட்ட இழப்புக்கள் பிரதானமானவை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவர் இறுதியாக தமது அறிக்கையில் பலதரப்பட்ட இழப்புக்களும் ஏற்பட்ட நிலையில் ஒரு பிரதம தளபதியாக தொடர்ந்து இருப்பது தமக்கு ஒத்துவராத விடயம் என்பதனாலேயே தாம் பதவியிலிருந்தும் ஓய்வுபெற முன்வந்ததாகக் குறிப்பிட்டி ருந்தார்.

'எத்தகைய சூழ்நிலையிலும் இராணுவத்தின் உறுதிப்பாடு குலையக் கூடாது' என்று இரண்டாம் உலக யுத்தகால பிரிட்டிஷ் தளபதி பீல்ட்மார்ஷல் மொன்ட் -கொமரி (Field Marshal Montgomari) என்பவர் கூறியதையும் முன்னாள் தளபதி சிசில் வைத்யரத்ன தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

1991ம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் தளபதியாக சிசில் வைத்யரத்ன பொறுப்பேற்றிருந்தார். ஆனால் அவர் பதவியிலிருந்த இருவருட காலத்தில் இராணுவம் பல்வேறு வகையான இழப்புக்களுக்கும் முகங்கொடுத்திருந்தது.

1987ம் ஆண்டு இலங்கை இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக 'வடமாராட்சி ஒப்பரேஷன்' என்ற பாரிய தாக்குதலை ஆரம்பித்திருந்தது. இத்தாக்குதல் நடவடிக்கையின்போதே இலங்கை இராணுவம் முதல் தடவையாக பெருமளவு இழப்புக்களை எதிர்கொண்டது. மறுபுறத்தே புலிகளும் குறிப்பிடத்தக்களவு இழப்புக்களை அடைந்திருந்தனர்.

தற்போதைய தளபதி ஜெரி டி சில்வா, அவரது சகாவான மறைந்த வடபிராந்திய




தளபதி டென்ஸில் கொப்பேகடுவ ஆகியோர் களத்தில் குதித்து புலிகளுடன் தீவிர மோதல்களில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது ஜெரி டி சில்வா, டென்ஸில் கொப்பேகடுவ ஆகியோர் பிரிகேடியர் தரத்திலேயே இராணுவத்தில் கடமையாற்றியிருந்தனர்.

ஆனால் இந்திய இராணுவம் 1987ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வடக்கு-கிழக்குப் பகுதியை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்தது. தொடர்ந்து இரு வருடங்களின் பின்னர் இந்திய இராணுவம் வடக்கு-கிழக்குப் பகுதியை விட்டு வெளியேறியதையடுத்து புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்குமிடையே மீண்டும் மோதல்கள் ஆரம்பமாகியிருந்தன.

இந்தியப் படையினருடனான மோதல்களையடுத்து புலிகள் நலிவடைந்திருக்கலாம். இந்நிலையில் அவர்களை எதிர்கொள்வது இலகுவாக இருக்கும் என இலங்கைப் படையினர் எதிர்பார்த்திருக்கலாம்.

ஆனால் புலிகளுக்கும், படையினருக்குமிடையே வெடித்த மோதல் ஆரம்பத்திலேயே படையினர் தரப்பில் பலத்த சேதத்தை உண்டுபண்ணியிருந்தது.

திருகோணமலையை அண்டிய இராணுவ முகாம் ஒன்று நிர்மூலமாக்கப் பட்டு இராணுவ அதிரடிப்படையினர் பலரும் கொல்லப்பட்டிருந்தனர்.

இது தவிர மாங்குளம் பகுதியில் இருந்த இராணுவ முகாம் ஒன்றும் புலிகளால் தாக்கப்பட்டிருந்தது. மேலும் ஆனையிறவு இராணுவ முகாமையும் புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கியிருந்தனர். இத் தாக்குதல் முறியடிக்கப்பட்டிருந்தது. ஆனால் படையினர் தரப்பிலும் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

தொடர்ந்து இராணுவத்தினரும் புலிகளுக்கெதிராக பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வடக்கே தீவுப்பகுதி, வன்னிப்பகுதி, மற்றும் கிழக்கின் பல்வேறு பகுதிகளையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்தனர்.

ஆனால், கடந்த ஒரு சில வருட காலங்களில் புலிகள் நடத்திய தாக்குதல்களினால் பல முக்கிய இராணுவ, கடற்படை முகாம்களில் இழப்புக்கள் பாரதூரமானவையாக இருந்தன.

மேலும் இராணுவ, கடற்படைத் தலைமைப் பீடத்தை சேர்ந்த பிரதான சிரேஷ்ட அதிகாரிகளும் கொல்லப் பட்டிருந்தனர்.

இராணுவ சிரேஷ்ட அதிகாரிகளான டென்ஸில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன, கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ மற்றும் வடபிராந்திய கடற்படைப் பொறுப்பதிகாரியாகவிருந்த மொஹான் ஜெயமஹா திருகோணமலைப் பகுதியின் பொறுப்பதிகாரியாகவிருந்த பிரிகேடியர் லக்கி விஜயரத்ன ஆகியோர் புலிகளினால் கொல்லப்பட்டவர்களில் முக்கியமானவர்களாவர்.

எனவே முன்னாள் தளபதி சிசில் வைத்யரத்னவின் பதவிக்காலத்தில் படையினர் தரப்பில் இழப்புக்கள் உயிர்களாகவும், உடமைகளாகவும் பெருமளவில் காணப்பட்டிருந்தன.

இந்நிலையில் புதிய தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா புதிய ஆண்டின் முதல் தினத்தில் பதவியேற்றுள்ளார்.

இதேவேளை வடக்கே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் புதிய ஆண்டை ஒரு யுத்த ஆண்டென்று அறிவித்துள்ளார்கள்.

அத்துடன் பூநகரி மற்றும் வடக்கின் வேறு இராணுவ முகாம்கள் மீது தாம் நடத்திய தாக்குதல்களையும் தொகுத்து 'வீடியோ' படங்களாகவும் காண்பித்து வருகின்றனர்.

இது தவிர குடாநாட்டில் சில இடங்களில் தாம் தாக்குதல்களை மேற்கொண்ட இராணுவ முகாம்களின் மாதிரி வடிவங்களையும் வடிவமைத்து பொது மக்களுக்குக் கண்காட்சியாகக் காண்பித்து வருகின்றனர்.

மேலும் படையினரிடமிருந்து கைப்பற்றிய கனரக ஆயுதங்கள், வேறு யுத்த தளபாடங்களையும் பொதுமக்களின் பார்வைக்கு வைத்து தமது 'வீரப்பிரதாபங்களை'ப் புலிகள் பறைசாற்றி வருகின்றனர்.

புதிய ஆண்டின் ஆரம்பத்தில் புதிய இராணுவத் தளபதி பொறுப்பேற்றுள்ளார்.

ஆனால் இப்புதிய ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறவுள்ளது. பின்னர் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலும் இடம் பெறவுள்ளது.



## கைப்பற்றிய யுத்த தளபாடங்களைப் பார்வைக்குவைத்து மாதிரி யுத்த மையங்களை உருவாக்கி தமது வீரப்பிரதாபங்களை பறைசாற்றிவரும் தமிழீழ விடுதலைப்புலிகள்!

இராணுவத்தரப்பில் பல்வேறு பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள நிலையிலேயே புதிய தளபதியாக ஜெரி.டிசில்வா பொறுப்பேற்றுள்ளார்.

இதே வேளை அரசியல் ரீதியாக நோக்கும் போது தற்போதைய ஜனாதிபதியாக இருக்கும் திரு.டிங்கிரி பண்டா விஜேதுங்க கூட திரு.ரணசிங்க பிரேமதாசாவின் மறைவையும், அதனால் ஆட்சிப்பீடத்தில் தோன்றிய வெற்றிடத்தையடுத்தே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவ ரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியாகவும் பல்வேறு முக்கிய இழப்புக்கள் இடம்பெற்றுள்ள நிலையே இலங்கையில் தற்போது காணப்படுகின்றது. கடந்த ஆண்டில் இடம் பெற்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மறைவு கடந்த மூன்று தசாப்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்றிருந்த ஒரு பெரும் அரசியல் படுகொலையாக அமைந்திருந்தது.

இது தவிர ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி, மற்றும் ஜனாதிபதி பிரோமதாசாவின் ஆட்சிக்காலத்தில் தேசிய பந்ரதோபஸ்து அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்ன ஆகியோரும் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

மேலும் தமிழ் அரசியல் பிரமுகர்களான திரு.அ.அமிர்தலிங்கம், திரு.வே. யோகேஸ்வரன், ஆகியோரும் கொழும்பில் வைத்து கொலை செய்யப்பட்டிருந்தனர்.

எனவே கடந்த ஒரு சில வருடங்களில் இராணுவ ரீதியாக மட்டுமல்ல அரசியல் வட்டாரத்திலும் முக்கிய இழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

புதிய தளபதியின் பொறுப்பு பெரும்பாலும் இராணுவத்தை சீரமைப்பதுடன் எதிர்கால தாக்குதல்களைத் திட்டமிடுவதாகவும் காணப்படும்.

ஆனால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இந்த ஆண்டின் இறுதியில் இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு தம்மைத் தயார் செய்பவராக இருப்பார்.

கட்சி நிலபரங்களைப் பொறுத்தவரை நாட்டின் பிரதான தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பவற்றில் மட்டுமல்ல, மலையகத்தின் முக்கிய அரசியல் கட்சி என்று வர்ணிக்கப்படும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினுள்ளும் பிளவு ஏற்பட்டுள்ளது.

இ.தொ.கா தலைவர் எஸ். தொண்டமான், மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளரான எஸ்.செல்லச்சாமி ஆகியோருக்கிடையிலான வேறுபாடுகள் விரிவடைந்துள்ளன.

ஒரு காலத்தில் நகமும் சதையுமாக இருந்த இந்த இரு இ.தொ.கா பிரமுகர்களும் கீரியும், பாம்புமாக மாறியிருந்தனர்.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை தை மாதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும்.

தை மாதத்திலேயே தமிழ் மக்கள் பெரிதும் தமது சுப காரியங்களை வைத்துக் கொள்வதுண்டு. தை மாதத்தில் வரும் அறுவடைத் திருநாளான தைப்பொங்கல் பண்டிகை மங்களகரமான ஒரு புதிய ஆரம்பத்தையே குறித்து நிற்கின்றது.

இதன் காரணமாகவே நம் முன்னோர் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று கூறியிருந்தனர். ஆனால் இப்புதிய தை மாதம் இலங்கையில் ஓர் அமைதியான சூழ்நிலைக்கு வழிவகுக்குமா? அல்லது தற்போது நிலவும் இக்கட்டான நிலையை மேலும் சங்கடமானதாக்கி விடுமா? என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எது எப்படி இருந்தபோதிலும் ஆட்சி, அதிகாரங்களில் இருப்போர் சிக்கலடைந்துள்ள வடக்கு-கிழக்கு நிலைமையை தமது சிந்தனைக்கும், நிதானத்துக்கும் முதன்மையளித்தே தீர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

ஏனெனில் இன்று நாட்டில் எவருமே பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதையே அறியக் கூடியதாக இருக்கிறது.

இந்நிலையில் நிதானமான பேச்சுக்கள், அவசரப்படாத நடவடிக்கைகள், என்பவற்றின் மூலமே நாட்டில் ஓர் ஒட்டு மொத்தமான பாதுகாப்பை ஏற்படுத்த முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

லேடீஸ் ஸ்பெசல்



ஒரே வீட்டில் இருக்கும் போதும் முகம் பார்த்துப் பேசுவது கிடையாது.

# பேரப்பிள்ளைகள் பிறந்த பின்னரும் எலியும்-பூனையுமாய் சில தம்பதிகள்

திருமணமாகி 50 வருடங்களாகி விட்டன. தம்பதியினருக்கு பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சேர்ந்து பொன் விழாக் கொண்டாடுகின்றனர். வாழ்த்துக்கள், பாராட்டுக்கள், பரிசுகள் குவிகின்றன. 'ஈடு இணையற்ற தம்பதி' என்று போற்றிப் புகழப்படுகின்றனர்.

ஆனால், பெரும்பாலான குடும்பங்களில் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் கருத்து வேற்றுமைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. நீண்ட காலம் குடும்பம் நடத்தி, பல பிள்ளைகளைப் பெற்றவர்கள் எலியும் பூனையும் போல ஒருவரை ஒருவர் காண்பதற்கே விரும்பாமல் ஒளித்து விளையாடுபவர்களாக விளங்குகின்றனர். ஒரே வீட்டிலிருந்தபோதிலும் ஒருவரோடொருவர் பேசாமல் பல வருடங்களைக் கடத்துகின்றனர்.

வயதான தம்பதிகளுக்கிடையில் நிலவும் உறவு முறைகள் பற்றி பல்கலைக்கழக மட்டத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின்படி இவ்வாறு மேலதிகமான தம்பதிகள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

30 வருடங்களுக்கு மேல் கணவன் மனைவியாக வாழ்ந்த பல நூறு குடும்பங்களை வைத்தே ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்கத்தைய நாடுகளிலும் ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற கீழத்தேய நாடுகளிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு தரவுகள் பரிமாறப்பட்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே முடிவுகள் பெறப்பட்டன.

கணவனுக்கும் மனைவிக்குமிடையில் பிணக்குகள் ஏற்பட்டு விவாகரத்து செய்து கொள்வோர்தான் நவநாகரிகமடைந்த நாடுகளில் அதிகம் என்று இதுவரை தப்புக் கணக்குப் போட்டு வந்துள்ளோம். உண்மையில் தங்கள் கணவர்களுடன் கருத்து வேற்றுமை கொண்டு-முகம் பார்த்துப் பேசாதிருந்த போதிலும் விவாகரத்தை விரும்பாமல் வாழும் குடும்பத்துடன் ஒன்றி பெண்களின் தொகையே அதிகம் என்று கணக்கிட்டுள்ளனர். இவ்வாறு வாழும் பெண்களின் தொகை 70 சத விகிதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

நீண்ட காலம் குடும்பமாக இருக்கும் கணவனுக்கும் மனைவிக்குமிடையிலான தொடர்புகளும் கசப்படைய ஆரம்பிக்கின்றன. ஆரம்பத்தில் அதிக பாசத்துடன் வாழ்ந்தவர்கள் காலம் செல்லச் செல்ல கீரியும் பாம்புமாக மாறிவிடுகின்றனர். இவர்களுடைய பிள்ளைகளே பெற்றாரின் உறவுக்கு வேட்டு வைப்பவர் களாகவும் மாறிவிடுகின்றனர்.

தகப்பன் விரும்பாத இடத்தில் மகள் சம்பந்தம் வைத்தால், மகளுக்குச் சாதகமாக தாய் போனால்-அதனாலும் இருவரும் மாறாத பகையாளிகளாக மாறிவிடுகின்றனர்.

இளமைக்காலத்தில் அவரவர் விடும் தவறுகள்-அக்காலக் கவர்ச்சியில் வெளிவராமல் உள் அமிழ்ந்து விடுகின்றன. ஆனால் அடி மனதில் அதன் தாக்கம் இருக்கும். வயதின் காரணமாக கணவனுக்கும் மனைவிக்கும் நெருக்கமான உறவு இயல்பாகவே குறைய நேரிடும். அப்போது அடி மனதில் அமிழ்ந்து கிடந்த பழைய நினைவுகள் மேலெழுந்து இருவரிடையேயும் கசப்புணர்வுகளை ஏற்படுத்தும்.

இதனால் தொட்டதற்கெல்லாம் கோபமும் வெறுப்பும் வெளிப்படும்.

குழந்தைகள் வளரும்போது பெற்றாருக்கிடையிலான பாதிப்புகளும், சில சந்தர்ப்பங்களில் அதிகரிக்கின்றன. குழந்தைகளின் செலவினங்களைச் சமாளிக்க முடியாத பொருளாதார வசதியற்ற நிலையும் கசப்புணர்வுகள் வளரக் காரணமாகின்றது.

குழந்தைகள் இல்லாதவர்களிடமும் கசப்பு அதிகரிக்கவே செய்யும்.

ஒருவரின் உடல் நிலையும் கணவன் மனைவி ஒற்றுமை நீடிக்க முடியாத நிலையினை ஏற்படுத்தும். கணவனோ அல்லது மனைவியோ ஒருவருடைய காதல் நாட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் இருந்தாலும் வெறுப்பு வளர இடமுண்டு. ஒருவருக்கு நீண்ட காலம் வரை இன்ப நுகர்ச்சிக்கான நாட்டம் இருக்கும் போது மற்றவருடைய உடல் நிலை ஈடுகொடுக்க முடியாத நிலையில் இருக்கலாம். அதனால் குடும்ப உறவு குன்றிவிடும். இருவரும் ஒரே வீட்டில் ஒன்றாக இருந்தாலும் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்க்கவே கூச்சம் ஏற்பட வாய்ப்பிருக்கும்.

சில குடும்பங்கள் விதி விலக்காக அமைந்து விடுகின்றன. ஆரம்ப காலத்தில் உறவுகள் கசந்தாலும் காலம் செல்லச் செல்ல அந்யோன்ய உறவுகள் மிகவும் அதிகமாகி விடும். சில வயதான தம்பதிகள் எப்போதும் இணைபிரியாமல் வாழ்ந்து வருகின்றனர்.

இறப்பில் கூட ஒற்றுமை நீங்காமல் ஒன்றாக இறந்த தம்பதிகளும் இருந்துள்ளனர். உடன்கட்டை ஏறிய மூடத்தனத்தை சொல்லவில்லை. இயற்கையாக ஏற்பட்ட மரணத்தை தழுவிய தம்பதிகளைச் சொல்கிறோம்.


தாம்பத்திய உறவுகள் பற்றி நீண்ட நெடுங்கால ஆராய்ச்சிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தம்பதிகளின் உறவுகள் நெருக்கமாகவும் அதே போன்று வேற்றுமையாகவும் மாறிவிடுவதற்கான காரணங்களை விஞ்ஞான ரீதியாக விளக்குவதற்கு முடியாதிருக்கிறது. காரணம் ஒவ்வொரு குடும்பமும் ஓர் உலகம் போன்றிருப்பதாகும்.

## வீட்டுக் குறிப்புகள்



தைக்கும் பொழுது பல கலர் நூல்கள் தேவையானால் ஒரு பிளாஸ்டிக் பையில் எல்லா நூல் கண்டுகளையும் போட்டு வைக்கவும். ஒவ்வொரு ஓட்டை மூலம் ஒவ்வொரு நூலையும் வெளியில் எடுத்துத் தைக்கவும். கடைசிவரைக்கும் நூல் சிக்கல் ஆகாது.

□□□



தக்காளித் தோலை அகற்ற ஒரு குத்தூசியில் தக்காளியைச் செருகி ஓரிரு நிமிடம் அனலில் காட்டினால் தோல் சுலபமாக வந்துவிடும். பின்பு நனைந்த பஞ்சில் தக்காளியைத் தோய்த்து முகத்தில் தடவினால் சுகமாக இருக்கும்.

□□□

பல நிறங்கள் உள்ள கம்பளி ஆடைகளை உப்புக் கலந்த நீரில் சலவை செய்தால் கலர் சாயம் போகாது.

□□□

நல்ல விளைச்சல் காலத்தில் எலுமிச்சம் பழங்களை நிறைய வாங்கிச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

தண்ணீர் படாத கண்ணாடிப் போத்தல்களில் பழத்துண்டுகளையும், உப்பையும் படிப்படியாகப் போடவும். மேலே உப்பு உள்ள படியாக காற்றுப் புகாவண்ணம் மூடவும். பத்து நாட்களுக்கு நன்றாகக் குலுக்கி வைக்கவும். காற்றோட்டமான தண்ணீர் பதம் இல்லாத இடத்தில் வைக்கவும். இம்முறையால் பழங்களை இரண்டு வருடங்கள் கூட உபயோகிக்கலாம்.

□□□

பேப்பர்களில் சுருக்கம் விழுந்திருக்கிறதா? துணிகளுக்கு இஸ்திரி போடுவது மாதிரி சுருக்கம் விழுந்த பேப்பரின் மீது இஸ்திரி பெட்டியை அழுத்தினால் சுருக்கங்கள் மறைந்துவிடும். கடிதங்கள், கவர்கள், போஸ்டர்களுக்கும் இதே முறையைப் பயன்படுத்தலாம்.

□□□

கோதுமை மாவைத் தண்ணீர் மற்றும் சிறிதளவு எண்ணையும் சேர்த்து மாவைப் பிசைந்து...இந்த மாவை முகத்தில் நடவிக் கொண்டு காய்ந்த பிறகு முகத்தை அலம்பினால் முகத்திலுள்ள கரும்புள்ளிகள் மறைந்துவிடும்.

# தையல்வேலை சுலபமாக அமைய அடிப்படையான சில முறைகள்!




தையற்காரர் வேலை செய்யும்போது உட்காரும் ஒழுங்கு(The sitting posture): காலைப் பின்னிக்கொண்டு (Cross legged) உட்கார்ந்து பழகுவது முதலில் கடினமாய் இருக்கும். ஆனால், அப்படிச் செய்வது வேலை செய்யச் சவுகரியமாய் இருக்கும். வேலை செய்யும் பொழுது துணியை வலப்பக்க முழங்கால் மீது வைத்துக்கொண்டு வேலை செய்யலாம்.




தைக்கும் ஊசியைப் பிடிக்கும் ஒழுங்கு (Tailors method of holding needle): தையல் கற்றுக்கொள்ளுபவர் ஒவ்வொருவரும் இதில் பழகிக் கொள்ள வேண்டும். முதலில் தைக்கும் ஊசியைக் கட்டை (Thumb) விரலுக்கும் ஆள் காட்டி விரலுக்கும் (Fore Finger) இடையில் வலக்கையில் 1/2 அங்குலம் வெளியிலிருக்கப் பிடித்துக்கொள்ள வேண்டும். நடுவிரலில் அங்குஸ்தானை அமைத்துக்கொண்டு, அது ஊசியின் தலைக்கு எதிராக, ஊசியின் மேல் தாங்கிக் கொண்டு இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். உசியை உபயோகிக்கும் பொழுது, அங்குஸ்தான் உள்ள நடுவிரலால் அதை முன்னுக்குத் தள்ள, அது தைக்கப்படும் துணியில் சுலபமாகவும் நன்றாகவும் நுழையும்.



கத்தரிக்கோலை உபயோகிக்கும் ஒழுங்கு (The use of scissors): வெட்டுவதற்கென உபயோகிக்கும் கத்தரிக்கோலைத் துணிகளை வெட்டும் வேலைக்கே உபயோகிக்க வேண்டும். வெட்டும் கத்தரி பெரியதாகவும், ஓர் அலகு (Blade) அகலமாகவும் கூர்மையாகவும் (Sharp) மற்றொன்று முனையுள்ள (Pointed) தாகவும் இருக்க வேண்டும். முனையுள்ள அலகை மேஜைக்குக் கிடைமட்டமாகக் (Horizontal) கூடிய மட்டும் ஒழுங்காகப் பொருத்திக் கொள்ள வேண்டும். துணியை மட்டும் சிறிது உயர்த்த வேண்டும். அது நழுவாமல் இருக்க இடக்கை



யானது Lefthand) துணியைப் பிடித்தாற்போலக் கத்தரிக் கோலுக்கு இடப்புறம் அமைக்க வேண்டும். கத்தரிக்கோலைச் சவுகரியமாக உபயோகிக்கும் அளவு திறந்து வெட்டு ஓரம் பல்லுப் பல்லாக அமையாமல் இருக்க நீட்டு செட்டு செட்ட வேண்டும்.



மடிப்பை வெட்டும் ஒழுங்கு (Cutting a fold): ஒரு மடிப்பை வெட்ட, கத்தரிக்கோலின் அகன்ற அலகை மடிப்பில் நுழைத்து வெட்ட ஆரம்பிக்க வேண்டும். துணி வெட்டும் மேஜை வழுவழுப்பாய் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால், துணி வழுக்கும். அதுவும் அல்லாமல் மெருகிட்ட பாகத்தில் கத்தரிக்கோல் கீற்றை உண்டுபண்ணும். ஆகையால், மேஜை சமமாகவும் மெழுகிடாத பரப்பு உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

தருவது சுகந்தினி

## பற்றீஸ் செய்யும் முறை

**தேவையானவை:**

கோதுமை அல்லது மைதா மா- 1/2 கிலோ
இறைச்சி- 1/2 கிலோ (எலும்பற்றது)
உரு.கிழங்கு- 1/2 கிலோ
மாஜரின் அல்லது-பட்டர்-50கிராம்
ஈரவெங்காயம்-10
மல்லி மற்றும் சரக்குகள் சேர்ந்த மிளகாய்த் தூள்-2 மே.கரண்டி
பச்சை.மிளகாய்-5.
பேக்கிங் பவுடர்-1 தே.கரண்டி
உப்பு, மஞ்சள்
கறிவேப்பிலை,
ஏலம், கறுவா-அளவாக.

**செய்முறை:**

மா, மாஜரின் 25 கிராம் மற்றும் பேக்கிங் பவுடர் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து நீர்விட்டு ரொட்டிப் பதத்துக்கேற்ப நன்றாகப் பிசைந்துகொள்ளவும்.


இறைச்சியை நன்றாகக் கழுவி அவித்தெடுக்கவும். கிழங்கையும் அவித்து தோலைச்சீவி சிறு சிறு துண்டுகளாக அரிந்தெடுக்கவும். இதே போன்று இறைச்சியையும் சிறிது சிறிதாக அரிந்து கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தை அடுப்பிலேற்றி மாஜரினை இட்டு எண்ணை போலாகியதும் வெங்காயம், கறிவேப்பிலை ஆகியவற்றுடன் ஏலக்காய், கறுவா ஆகியவற்றையும் போட்டு வதக்கவும். பின்னர் இறைச்சி, கிழங்கு, ப.மிளகாய் ஆகியவற்றையும் ஒன்றாகப் போட்டு வதக்கவும். அவற்றுடன் மிளகாய்த்தூள் பச்சை மிளகாய், உப்பு ஆகியவற்றையும் சேர்க்கவும். முக்கால் பதம் வெந்ததும் இறக்கி ஆறவிடவும்.

ஏற்கனவே பிசைந்து வைத்துள்ள மாவினை சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, பின்னர் தட்டி மெல்லிய துணி போலாக்குங்கள். இவற்றை வேண்டிய வடிவத்தில் வெட்டி, இறைச்சிக் கறியினை அளவாக எடுத்து மா துண்டில் வைத்து மூடி எண்ணெயில் பொரித்தெடுக்கவும்.

பெண்களின் முக வசீகரத்தையும் உடலின் பளபளப்பையும் பேணிப் பாதுகாக்கும் சக்தி மீன் உணவில் இருப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன. பெரும்பாலும் சிறிய அளவு மீன்களை உண்ணும் பெண்கள் பொலிவுடன் விளங்குகின்றனர்.

# மீன் உணவில் விசயம் இருக்கிறது முக அழகுக்கு உதவும் உணவுமுறை!



இறைச்சி உணவு வகையினை உண்பவர்களிடம் இத்தகைய எழிலைக் காண்பது அரிது. பெண்கள் மென்மைத்தன்மையுடையவர்கள். காய்கறி வகைகளை அதிகமாக உண்பவர்கள் மென்மையான-குளிர்ச்சியான அவயவங்களைப் பெறுகின்றனர். ஆனால் இறைச்சியினை அதிகம் விரும்பி உண்ணும் பெண்களுடைய சருமம் மிருதுத்தன்மையினை இழந்துவிடுகிறது.

நெத்தலி, பாரக்குட்டி போன்ற சிறு ரக மீன்களில் உள்ள பொசுபரசு உடலுக்கு ஒரு வகை ஒளியினைத்தரவல்லன. இவற்றை அதிகமாக உண்பவர்கள் அறிவு விருத்தியும் பெறுகின்றனர். கடல் மீன்களை விட கடலோடிணைந்த ஓரளவு உப்புத் தன்மை கலந்த வாவிகளில் காணப்படும் மீன்களே பெண்களின் எழிலை மென்மேலும் மெருகூட்டக் கூடியன.

மீன் எண்ணை வகைகளையும் பெண்கள் உண்பதனால் சருமத்தில் ஒரு வகையான பளபளப்புத்தன்மை காணப்படும். மீன் எண்ணை 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மாறுபட்ட பலனையும் அளிக்கக் கூடும் என்பதால் அவர்கள் மருத்துவரின் ஆலோசனை பெற்ற பின் அவற்றைப் பாவிக்கலாம்.

மீன் வகைகளை எண்ணையில் பொரித்து உண்ணுவதையே பெரும்பாலானோர் விரும்புகின்றனர். ஆனால் இவை அவித்து உண்ணும் போதே சிறந்த பலனைத் தருகின்றன.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அமெரிக்காவில் ஒரு நிர்வாண நகரம்!



வாரத்தில் ஒரு நாள் பாதி உடை அணிய அனுமதி

**தகவல் பெட்டி**

உடைகளைத்தவிர வேறு எதையும் வாங்கக்கூடிய ஒரு நகரம் இருக்கிறது. ஆடை அணிவதே பாபம் என்றும் அங்கு வாழ்பவர்கள் கருதுகின்றனர்.

'சொர்க்க ஏரி, (பாரடைஸ் லேக்) என்பதுதான் அதன் பெயர். அமெரிக்கா ஃபுளோரிடா மாநிலத்தில் ஃபிரெட் பிஸ்சொஃப் என்பவர் இந்த நகரின் உரிமையாளர். இது ஒரு ஓய்வு வாசஸ்தலமாக இயங்குகிறது. வருடம் முழுவதும் இந்த நகரில் தங்கள் பெரும்பாலான காலத்தைச் செலவிடும் 550 பேர் உள்ளனர். இவர்களில் 50 பேர் சிறுவர்கள்.

இந்த நகரின் எல்லைக்குள் பிரவேசிக்கும் எந்த வயதினரும், அங்கு தங்கியிருக்கும் காலத்துள் உடைகள் எதையுமே அணியக்கூடாது என்று-எழுதப்படாத-கட்டுப்பாடு உண்டு. ஓடி விளையாடினாலும், நீச்சலடித்தாலும், ஏரியில் மீன் பிடித்தாலும், டென்னிஸ் ஆடினாலும் தோணி ஓட்டினாலும் எவருமே ஆடைகளை அணிவதில்லை.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலரும் இங்கு செல்லலாம். உணவு விடுதிகள், பொழுது போக்குச் சாதனங்கள் ஆகிய சகலமுமே இருக்கின்றன.

இத்தனை இருந்தும் அங்கு காதல்-காமக் கவர்ச்சிகளுக்கு இடமில்லை.

"ஆண், பெண் இருபாலாரும் நிர்வாணமாக திரியும் போது அங்கு காம உணர்வு தலைகாட்டுவதில்லை. உடலின் வேறு பாகங்களில் தங்கள் புலனைச் செலுத்தி மனதை அலைய



நிர்வாண நகரில் நிம்மதியாக விருந்துண்ணும் குடும்பம்

விடுவதில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதைத் தவிர விகாரமான உணர்வு பெற வாய்ப்பே ஏற்படுவதில்லை" என்று உரிமையாளர் ஃபிரெட் கூறுகிறார்.

இங்கு வருபவர்கள் பெரும்பாலும் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஓய்வும் ஆறுதலும் தேடி வருகிறார்கள்.

கவர்ச்சியும் காதலும் தேடி இங்கு எவரும் வருவதில்லை. அதற்கும் ஒரு காரணம் சொல்கிறார் நிர்வாண நகர உரிமையாளர், "மூடி மறைத்து வைத்திருப்பதனால் தான் கவர்ச்சியால் ஒருவன் கவரப்படுகிறான். மூடி மறைப்பதற்கு எதுவுமே இல்லையென்றால் அங்கு ஆர்வத்தூண்டுதலுக்கே இடமில்லை என்ற தத்துவங்களின் அடிப்படையிலேயே இந்த நிர்வாண நகரம் எனும் விடுதி அமைக்கப்பட்டுள்ளது." என்பதுதான் அவர் சொல்லும் விளக்கம்.

இதே வேளை, வார முடிவுகளில் கீழ் ஆடை அணியுடனான கேளிக்கை விருந்து ஒன்று நடைபெறுவதுண்டு. இதற்கு ஆண்களும் பெண்களும் கீழாடை மட்டும் அணிந்து வரவேண்டும் என்றொரு விதி உண்டு.


இந்த ஆடையும் ஒருவகை நார் போன்ற சருகுத் துணியால் அமைக்கப்பட்டது. இத்தகைய அணிகள் இந்த விடுதி கடைகளில் விற்பனைக்குண்டு. இவற்றை விற்பதன் மூலம் வாரம் 8000 டொலர் வருமானம் கிடைப்பதாகத் தெரிகிறது.

"இங்கு வருவதன் மூலம் எத்தகைய கட்டுப்பாடுமற்ற சுதந்தரமான ஓய்வினை நான் பெறுகிறேன். அத்துடன் எனது உடலில் உள்ள வெளுப்பு வர்ணம் நீக்கி பழுப்பு நிறம் ஏற்படுகிறது" என்று 53 வயதான றொன் ஜோன்சன் கூறுகிறார்.



ஓய்வு சுகத்தோடு இசைக்கருவி மீட்டுகிறார்

# இறுதியாய் ஒரு போட்டோ



சூழன்று அடித்த புயலில் சருகுபோல் தூக்கப்பட்ட மனிதன்

**புகைப்படப் பிடிப்பாளரை புயல் தூக்கியது**
**தானியங்கி கமரா பதிவு செய்தது**

சாகசங்களைத் தேடிச் சென்று படம் பிடித்து உலகை வியக்கவைக்கும் படப் பிடிப்பாளர்களின் வேலை சாதாரணமானதல்ல.

அதிசயப்படங்களை பார்த்து வியக்கும் எமக்கு அதற்கு பின்னாலுள்ள படப்பிடிப் பாளர்களின் துணிகரமும், சில சமயங்களில் உயிரையே பணயம் வைத்து மேற்கொள்ளும் முயற்சிகளும் தெரிவதில்லை.

இன்று நாம் தரும் தகவல் ஒரு புகைப்படப்பிடிப்பாளரின் சோக முடிவை சொல்கிறது. இதோ தகவல்!

ஜப்பானில் ரோறாஜீமா தீவில் ஒலிம்பிக் போட்டியாளர்களுக்கான பயிற்சி முகாம் உள்ளது. அங்கு படங்கள் எடுப்பதற்காக கெஞ்சி ஓஸாவா என்ற 24 வயது இளைஞர் சென்றிருந்தார்.

அவருடன் டோக்கியோவிலிருந்து பத்திரிகைப் படப்பிடிப்பாளரான ஹிட்டோஷி ஹறாவும் சென்றிருந்தார். இவர்கள் படப்பிடிப்புகளில் ஈடுபட்டி ருக்கும் போது 200 மைல் வேகத்தில் பெரும் புயல் வீசியது. கெஞ்சி, வீசிய புயலின் அநர்த்தங்களை ஓடி ஓடிப் படம் பிடித்துக் கொண்டிருந்தார்.

புயலின் வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தது. பாதுகாப்பான இடத்துக்குச் சென்று ஒதுங்கும்படி ஹறா கெஞ்சியை பலமுறை எச்சரித்தார். அவர் கேட்க வில்லை.

இதற்கிடையில் புயல் கடுமை யடைந்த மையினால் திறந்த வெளியில் காணப்பட்ட 5 பேர் காற்றினால் மேலே இழுக்கப் பட்டனர்.

அவர்களில் இருவர் எப்படியோ ஒரு பள்ளத்துள் உருண்டு மறைந்துகொண்டனர். கெஞ்சியும் மற்றும் இருவரும் ஆகாயத்தில் தூக்கிச் செல்லப்பட்டனர்.

புயல் அடங்கியதும் இம்மூவரையும் ஹறாவும் வேறு பலரும் தேடிச் சென்றனர். ஏறத்தாழ ஒரு மைல் தூரத்துக்கப்பால் ஒரு பாறையின் மீது மூவரின் சடலங்கள் சின்னாபின்னமாகச் சிதறிக்கிடக்கக் காணப்பட்டது.

காற்றினால் மேலே கெஞ்சி தூக்கப்பட்ட இடத்தில் அவருடைய கமராவை ஹறா கண்டெடுத்துள்ளார். கெஞ்சியின் சிதறிய உடல் பாகங்களை தன்னுடன் டோக்கி யோவுக்கு ஹறா எடுத்துச் சென்றுள்ளார். அவருடைய குடும்பத்தாருக்கு உடலையும் உடமைகளையும் ஒப்படைக்குமுன்னர் கமராவிலுள்ள படச்சுருளை எடுத்து அதனைக் கழுவிப் படப்பிரதி எடுத்துள்ளார்.

படத்தில் பதிவாகியுள்ள காட்சி அவரை கலங்க வைத்துள்ளது.

புயல் காற்றினால் ஒரு இலைச் சருகினைப் போல் தூக்கிக்கொண்டு சென்ற அவருடைய வாழ்வின் இறுதிக் கட்டத்தை கெஞ்சியின் கமரா தத்ரூபமாகப் பதிவாக்கியிருக்கிறது.

"இதனைக் கண்டதும் நான் அதிர்ச்சி யடைந்தேன். கெஞ்சி படப்பிடிப்பில், தான் சாதனைகளை நிலை நாட்ட வேண்டும் என்ற துடிப்புள்ளவன். தான் புயல் காற்றினால் இழுக்கப்படும் அந்த அபாயகரமான நேரத்திலும் கமராவை தானியங்கி சூட்சும நிலையில் செயற்பட வைத்திருக்கிறான். அவனுடைய இறுதிக்காலப் பயணத்தினை அக்கமரா அப்படியே படம் பிடித்துவிட்டது." என்று கவலையுடன் ஹறா கூறுகிறார்.



பிரியமான பாம்போடு ஜோன் பவர்



## தன்கையே தனக்குதவி

அணில் பிள்ளைக்கு தண்ணீர் தாகம். பூங்காவுக்கு வருபவர்கள் பழங்களை வீசிவிட்டு போய்விடுவார்கள். தாகம் தீரவும், உண்டது ஜீரணமாகவும் தண்ணீர் வேண்டாமோ? தன் கையே தனக்குதவி. அணில் பிள்ளையாரும் தாகம் தீர தண்ணீர் தேடி தானாகவே முயற்சி செய்கிறார். வெல்க முயற்சி.

# ஏவப்படும் பாம்பு மோப்பம் பிடிக்கிறது! குற்றவாளிகள் உலகம் நடுக்கம்!!

கொலை, கொள்ளை மற்றும் கற்பழிப்புக் குற்றச் செயல்கள் நாளாந்தம் அதிக ரித்துக்கொண்டு வருகின்றன. பெரும்பாலான குற்றங்களைப் புரியும் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பது பெரும் கஷ்டமாகவே இருக்கிறது.

இவர்களைச் சுலபமாகக் கண்டு பிடிப்பதில் வெற்றி கண்டு வருகிறார் தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த பொலிஸ்காரர் ஒருவர். இவர் மந்திர முறைகளையும் இரண்டு வெங்கணாந்திப் பாம்புகளையும் பயன்படுத்தியே குற்றவாளிகளை மடக்கி வருகிறார்.

'ஸ்னேக்மான்' ஜோன் பவேர்ஸ் என்பது தான் இவர் பெயர். தென் ஆபிரிக்க தலைநகரின் அணித்தாக உள்ள ஹில்பிரோ என்ற பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பணி புரிகிறார். கறுப்பு இன மக்கள் வாழும் இப்பகுதியில் எல்லாவகையான குற்றச் செயல்களும் மலிந்து கிடக்கின்றன. பலதரப்பட்ட துப்பாக்கிகளும் தாராளமாக உலாவரும். போதைப்பொருள் கடத்தலும் கட்டுக்கடங்காது.

குற்றங்களைப் புரிவோரை மடக்கிப் பிடித்துத் தண்டனை வழங்குவதென்பது நடக்க முடியாத காரியமாக இருந்தது.

ஜோன் பவர் பொலிஸ் நிலையத்துக்கு வந்து சேர்ந்ததும் பூனையைக் கண்ட எலிகளைப் போல குற்றவாளிகள் பயந்து ஒதுங்கி ஒழிந்து விடுகின்றனர். ஆனால் ஜோன் பவர் இவர்கள் ஒழிந்து கொண்டாலும் தேடிக்கண்டு பிடித்து விடுகிறார். இதனால் இவரைத் தெருவில் கண்டாலே சாதாரண சிறு சிறு குற்றங்களைப் புரிவோரும் இடத்தை விட்டே அகன்று விடுகின்றனர்.

ஜோன் பவர் பிரிட்டிஷ் மரைன் படைப்பிரிவில் முன்பு சேவை செய்தவர். ஆபிரிக்காவிலுள்ள நேட்டாலைச் சேர்ந்த ஸுலு இனப் பெண்ணைக் காதலித்து மணம் முடித்தார். இந்த ஸுலு இனப் பெண் மூலம் சில மந்திர தந்திரங்களைக் கற்றுக்கொண்டார். நேட்டால் மாகாண மலைப்பிரதேசங்களில் 6 மாதங்கள் தங்கி மந்திரங்களைக் கற்றுள்ளார். இங்கு தான் மூன்று வெங்கணாந்தி மலைப் பாம்புகளையும் பிடித்தார். இருவருடைய பணிகளுக்கு லில்லி, நீகிற்றா மற்றும் சாம் ஆகிய மூன்று பாம்புகளும் உதவுகின்றன.

பாம்புகளுக்கு மந்திரங்களைச் சொல்லி அவற்றை ஏவி விட்டால், அவை வேகமாக ஊர்ந்து சென்று குற்றவாளிகள் எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து விடுகின்றன.

6 அடி 4 அங்குலம் உயரமுடைய ஜோன் பவர் 250 இறாத்தல் எடை கொண்டவர். உயரத்துக்கேற்ற பருமனும் கொண்ட ஆஜானுபாவர்.

ஜோன்பவரால் முடியாத காரியம் ஒன்று இருக்கிறது.

அவரது வீட்டிலேதான் அந்தப் பிரச்சனை.

இவருக்கு இரு மனைவியர். ஜோன் பவரைக் கண்டால் மக்களெல்லாம் கிலி கொண்டு ஓடி ஒழிகின்றனர். ஆனால் இவருடைய இரு மனைவியரும் இவரைப் பாடாய்ப்படுத்துகின்றனராம். இவர்களை அடக்குவதே தனக்குப் பெரும்பாடாக இருப்பதாகக் கூறுகிறார். தனது மந்திர சக்தியை இங்கும் பயன்படுத்திப் பார்க்கலாமே? அதுவும் முடியவில்லை என்கிறார்.

அப்படியானால் ஜோன் பவர் வெளியே புலி. வீட்டிலே எலி.

பாப்பா முரசு சிறுகதை

# பப்பா முரசு

# புலியும் எலியும்!



அந்த அடர்ந்த காட்டில் ஆயிரக் கணக்கான மிருகங்கள் வசித்தன.

அவற்றுள் வயது முதிர்ந்த ஒரு கிழட்டுப் புலியும் இருந்தது. பற்களை இழந்த அக்கிழட்டுப்புலி காட்டில் நடமாட முடியாத நிலையில் ஒரு குகைக்குள் முடங்கிப் படுத்துக்கிடந்தது. மற்ற மிருகங்கள் எல்லாம் அவை புசிக்கும் இறைச்சியின் ஒரு பகுதியை இக்கிழட்டுப் புலிக்குக் கொடுத்தாக வேண்டும். இது அந்தக் காட்டு சிங்க மகாராஜாவின் கட்டளையாகும்.

அதன்படியே அனைத்து மிருகங் களும் கிழட்டுப்புலிக்கு இறைச்சித் துண்டை வீசிவிட்டு ஏளனமாக ஏசிவிட்டுப் போவது வழக்கமாக இருந்தது.

"ஏய் கிழமே, இதைத் தின்று தொலை. எங்களுக்கே இரை கிடைப்பதில்லை. அதில் உனக்கு வேறு பங்கு ஒரு கேடா?" எனக் கேட்டு விட்டு வாயில் கவ்வி வந்த இறைச்சியைத் துப்பிவிட்டுப்போகும். இதை எல்லாம் கேட்கும் போது கிழட்டுப் புலிக்கு அழுகை அழுகையாக வரும். ஆனால் அழுவதற்குக் கூடச் சக்தி இல்லாத நிலை அதற்கு.

குகைச் சந்தில் ஒரு சுண்டெலி வசித்து வந்தது. அது அங்கு வசிப்பது வேறு எந்த மிருகங்களுக்கும் தெரியாது. அச்சுண்டெலி உருவத்தில் சிறியதாக இருந்தாலும் மனதால் பெரியது. கிழட்டுப் புலியை மற்றப் பிராணிகள் கேவலமாகப் பேசி ஏசுவதையும் அதைக் கேட்டுப் புலி கண்ணீர் வடிப்பதையும் பரிதாபத்துடன் தினமும் பார்த்துக்கொண்டே இருக்கும்.

எல்லா மிருகங்களும் வந்து போன பிறகு அந்தச் சுண்டெலி வெளியே வந்து புலியைப் பார்த்துப் பேசிற்று.

"ஐயா நீங்கள் எத்தனை பெரியவர். ஒரு காலத்தில் இப்போதைய சிங்க மகா ராஜாவின் அப்பாவுக்கே மதி மந்திரியாக இருந்தீர்கள் என்று கேள்விப்பட் டிருக்கிறேன். இன்றைய சிங்க மகாராஜா உங்கள் மீது மதிப்பும், மரியாதையும் நிறைய வைத்துள்ளார். அதுவும் எனக்குத் தெரியும். நீங்கள் பசியோடு காத்துக் கொண்டிருந்த பல சந்தர்ப்பங்களில் நான் பயந்து பயந்து உங்கள் முன்பு குறுக்கும் நெடுக்காகவும் ஓடியிருக்கிறேன். ஆனால் ஒரு முறை கூட நீங்கள் பசிக்கு என்னை இரையாக்கிக் கொண்டதில்லை. அதனால் இன்றுமுதல் நான் உங்கள் நண்பன். உங்களுடைய மன வருத்தங்களையும் மற்ற மிருகங்களின் உதாசீனப் போக்கையும் இன்றே போய் சிங்க மகாராஜாவிடம் தெரிவித்துவிட்டு வரப் போகிறேன். அனுமதி கொடுங்கள்" என்றது.

கிழட்டுப் புலி பொக்கை வாய் தெரியச் சிரித்துவிட்டுச் சொல்லிற்று, "எலியே நீ உருவத்தில் சிறுவனாக இருந்தாலும் மனத்தால் உயர்ந்து நிற்கிறாய். நீ என் மீது காட்டும் பரிவுக்கு மிக்க நன்றி. என்னுடைய நிலைமையைச் சிங்கமகாராஜாவிடம் சொல்ல வேண்டாம். அவர் ரொம்பவும் கோபக்காரர். அதனால் மற்ற மிருகங்களுக்குத் தண்டனை வழங்குவார். அவற்றிற்கு என்மீது கோபம் வந்து கொஞ்ச நஞ்சம் போடும் இறைச்சியையும் போடாமல் போய் விடுவார்கள். அதனால் ராஜாவிடம் போய் முறையிடாதே," என்றது.

புலியின் பெருந்தன்மை எலிக்கு வியப்பூட்டியது. பெரியவரின் வேண்டு கோளைப் புறக்கணிக்கவும் முடியவில்லை. அதே சமயம் அதை எப்படியாவது ராஜாவிடம் சொல்லி அக்கொடுமை களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் ஆசைப்பட்டது. நீண்ட நேரம் சென்று ஒரு முடிவுக்கு வந்து நேராக சிங்க மகாராஜாவின் குகைக்குள் வேகமாக நுழைந்தது.

அவ்வளவு பெரிய மகாராஜாவை கேவலம் ஒரு சுண்டெலி உடனடியாகப் பார்க்க விட்டு விடுவார்களா? குடுகுடு வென ஓடிய எலியை தனது காலால் நசுக்கப்பார்த்தது முள்ளம்பன்றி. முள்ளால் குத்தப் பின் தொடர்ந்தது. அதற்குள் சுண்டெலி ஓடிப்போய் அங்கே நின்ற யானையின் தும்பிக்கைக்குள் புகுந்து கொண்டது. தும்பிக்கையினுள் சுண்டெலி புகுந்ததும் யானை பிளிறிக்கொண்டு அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தது. கிட்டத் தட்ட சிங்கராஜாவின் இருப்பிடம் வரை யானை ஓடியது. உடனே சுண்டெலி தும்பிக்கையை விட்டு வெளியே வந்து சிங்கராஜாவிடம் ஓடியது.

மகாராஜா எழுந்து காலால் சுண்டெலியை அழுத்திப் பிடிக்க யானை, தப்பியது தம்பிரான் புண்ணியம் என அங்கிருந்து ஓட்டம் பிடித்தது.

"சுண்டெலியாரே, அனுமதியின்றி என் அருகே வர உனக்கு என்ன தைரியம்? உன்னைச் சும்மா விடப் போவதில்லை," என்ற ராஜாவின் காலை சுண்டெலி சுரண்ட, ராஜா காலை நகர்த்திக் கொண்டார். ஆனால் சுண்டெலி தப்பி ஓடவில்லை

"மகாராஜா, நான் அனுமதியின்றி இங்கே வந்தது குற்றம்தான். ஒரு முக்கியமான செய்தி சொல்லவே அவ்வாறு வந்தேன்," என்றது எலி.

"என்ன செய்தி? சொல் சீக்கிரம்", அவசரப்படுத்தினார் ராஜா.

எலி ஆதி முதல் அந்தம் வரை எல்லா விவரங்களையும் சொல்லி விட்டுப் புலிப்பெரியவரின் பயத்தையும் புரிய வைத்தது.

"அரசே, இச்சங்கதியைத் தங்களிடம் சொல்ல வேண்டாம் எனப் புலிப் பெரியவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். அதை மீறி உங்களிடம் சொல்லிவிட்டேன். நீங்கள் நடப்பவைகளைப் புரிந்து கொண்டு கோபப்படும் மற்ற மிருகங்களுக்கும் தீங்கிழைக்காமல் இப்பிரச்சனைக்கு ஒரு முடிவு காண வேண்டும். இதுதான் எனது கோரிக்கை. இதைச் சொல்லவே இங்கே வந்தேன்," என்றது எலி.

"சரி நீ போ. நாளை நீ விரும்பிய படியே நடக்கும்." எனச் சொல்லி எலியை அனுப்பி வைத்தார் ராஜா.

மறுநாள் காலை எலிக்கும் இனம் தெரியாத பயம் கவ்விக்கொண்டது. வழக்கம் போல் அனைத்து மிருகங்களும் வந்தன. ஆனால் முன்பை விட ஒரு வித்தியாசம். அனைத்தும் வரிசையில் நின்று பேசாமல் இறைச்சியை எலியிடம் கொண்டு வந்து போட்டன.

"நீங்கள் வழக்கமாக புலிப் பெரியவருக்கல்லவா இதைக் கொடுப்பீர்கள். இதென்ன புது வழக்கம்?" என்று கேட்டது எலி.

"பாவம்! புலிப்பெரியவர் இறந்து விட்டதாக அரசர் எங்களுக்குச் செய்தி சொல்லி அனுப்பினார். அதே சமயம் எங்கள் யாரையும் அவரைப் பார்க்கக் குகைக்குள் வரவேண்டாம் என்றும் சொல்லியுள்ளார். அப்போது தான் புலிப் பெரியவரின் ஆத்மா சாந்தியடையும் என்றும் சொன்னார். பாவம்! பெரியவரைத் தினமும் திட்டிக்கொண்டே உணவு கொடுத்து வந்தோம். இப்படி திடீர் என்று போய்விட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய இதே மாதிரி தினமும் இரையை உங்களிடம் ஒப்படைப் போம்," எனக்கூறி விட்டு அனைத்து மிருகங்களும் திரும்பிப் போயின. உள்ளே புலிப் பெரியவரிடம் அந்த இரையைச் சேர்க்கும் பணியை எலி மேற்கொண்டது.

## கடிகாரம்

டிக்கு டிக்கு கடிகாரம்
தீனி கேட்ட கடிகாரம்
குட்டி குட்டி முள்ளினால்
காலம் காட்டும் கடிகாரம்.

வாசல் அறை சுவற்றிலே
வீற்றிருக்கும் கடிகாரம்
நேசம் காட்டி எவரையும்
நண்பராக்கும் கடிகாரம்



பாட்டி பிறந்த நாளன்று
பரிசு வந்த கடிகாரம்
வீட்டில் உள்ள அனைவரும்
விரும்பி பார்க்கும் கடிகாரம்

வி.மனோராஜ்
நு/சென்மேரிஸ் த.ம.வித்தியாலயம்
பொகவந்தலாவ.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஒரு கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை. அது என்ன?
2. இருப்பதற்கு வசதியுண்டு. தேங்காயைக் கண்டால் உறுமுவான். அவன் யார்?
3. வெள்ளை வீதியில் கறுப்புக்கார் ஓடுகிறது. அது என்ன?
4. பத்தாம் மாதம் வரையும் ஊமையன். அதைத்தாண்டினால் கத்துவான். அவன் யார்?
5. கிணற்றடியிலே கிடப்பான். அதன் பிறகு கொடியிலே மேய்வான். அது என்ன?
6. எங்களுடைய தோட்டம் எல்லாம் ஆடை. அது என்ன?

1. செத்தல் மிளகாய் 2. திருகாணி 3. கண் 4. தவளை 5. ஆடை 6. பன்னாடை

செல்வன். இயேசுதாசன் தவதீபன்
நாமகள் வித்தியாலயம்-கல்குடா.

1. சிவப்புச் சேலை கட்டி தெருவெல்லாம் நிற்பாள். அவள் யார்?
2. உயிரற்ற பறவை. ஊருக்குப் பறக்கும். அது என்ன?
3. நண்ணுவார். உண்ண மாட்டார். அவர் யார்?
4. உன்னிடம் வருவேன். உன்காலை தொட்டுப் பார்ப்பேன். நான் யார்?
5. முட்டைக்கு மூன்று கண்கள். அது என்ன?

1. தபாற்பெட்டி 2. கடிதம் 3. பாக்குவெட்டி 4. கடல் 5. தேங்காய்.

கே.மோகனா குமாரி, அம்பன்பிட்டிய.

1. எல்லையில்லாத வலையிலே எண்ண முடியாத மீன்கள். அது என்ன?
2. பார்த்தால் பகட்டுக்காரி. கடித்தால் கோபக்காரி. அவள் யார்?
3. திறந்து திறந்து மூடினாலும் சிறிது சத்தம் கேளாது. அது என்ன?
4. பிடியில்லாத குடையை யாரும் தொட முடியாது. அது என்ன?
5. பார்க்க அழகான பூ. கையில் எடுக்க முடியாப்பூ. அது என்ன?
6. தூக்கத்தில் வரும். அயலவனை தூர ஓடச் செய்யும். அது என்ன?

1. நட்சத்திரம் 2. மிளகாய் 3. கண் 4. வானம் 5. நெருப்பு 6. குறட்டை.

பா.அபிராமி-சென்மேரிஸ் த.ம.வித்தியாலயம், பொகவந்தலாவ.

1. எலும்பில்லாத பையன். கந்து இல்லாத மரத்தில் ஏறுகிறான். அவன் யார்?
2. ஒருவருடம் உயிர் வாழ்ந்து, பன்னிரண்டு பிள்ளை பெறுவாள். அவள் யார்?
3. கூட்டினாலும் ஒன்றுதான். பெருக்கினாலும் ஒன்றுதான். அது என்ன?
4. வண்ண அழகி வானத்தில் தோன்றுவாள். சற்று நேரத்தில் மறைந்து விடுவாள். அவள் யார்?

1. பேன் 2. மாதக் கலண்டர் 3. குப்பை 4. வானவில்

வி.ஜெயந்தினி, மட்டக்களப்பு.

1. பையில் தான் இருந்தால் மற்றொன்றை இருக்க விடாது. அது என்ன?
2. மண்ணிலே பிறந்து மங்கையர்களுக்கு அழகு தந்து தன் மதிப்பை குறைத்துக்கொண்டாள் அவள் யார்?
3. பறிக்கப் பறிக்க பெரிதாகிறது. அது என்ன?
4. ஒல்லியான மனிதனுக்கு ஒரே காது. அவன் யார்?
5. வருடம் ஒரு முறை வந்து வண்ணமுறத் தைலமிட்டு வகை வகையாய் சிற்றுண்டி இன்பமுடன் அளித்துவிட்டு டப்பென்பாள், டுப்பென்பாள் அவள் யார்?
6. தன்னை தானே விழுங்கி மாயமாய் மறைந்து போவது எது?

1. கிளிசல் 2. தங்கம் 3. குழி 4. ஊசி 5. தீபாவளி 6. மெழுகுவர்த்தி

உம்முல் மஸாஹிறா அப்துல்காதர்
காத்தான்குடி-02


## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.01.1994.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 24**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்**
**கிருலப்பனை,**
**கொழும்பு-05.**

## அறிவோம்- மனதில் பதிவோம்



ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள மடகாஸ்கர் தீவில் ஒரு வகை விசிறி வாழைமரம் வளர்கிறது. இதனை ஆங்கிலத்தில் 'ட்ரவலர்ஸ் ட்ரீ' (பயணிகள் மரம்) என்பார்கள். இந்த மரத்தின் இலைகளின் தண்டுப்பகுதியில் அரை லீற்றர் நீர் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும். இது ஒரு நீர் விரும்பித் தாவரம்.



இமய மலையில் மேற்கு 'திபெத்'ல் உள்ள கா-எர்(Ka-erh) நகரம்தான் உலகிலேயே மிக உயரத்தில் உள்ள நகரம். கடல் மட்டத்திலிருந்து நாலாயிரத்து நூற்றெழுபது மீற்றர் உயரத்தில் இது உள்ளது.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 21

பரிசுக்குரியவர்:
செல்வன். ரீ. கமல்ராஜ்
திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

எம்.ஆர். நப்ரிஜ், வவுனியா.

எம்.இஸட்.எம். ஷிபான்
அல்-முபாரக் மத்திய கல்லூரி, மல்வானை.

ஏ.எம். உனைஸ்
மத்திய மகா வித்தியாலயம், காத்தான்குடி-6.

எம். பர்ஸாத்
மீரா பாலிகா மகா வித்தியாலயம்,
காத்தான்குடி-6.

லோகிதகுமார் ஜெயதர்ஷன்
கோட்டைக்கல்லாறு.

செ. சுஜிகரன், கொழும்பு-13.

எம். ராஜா, கொழும்பு-13.

விநோகாந்தன் வீரபுத்திரன்
புனித ஜோன் போஸ்கோ மகா வித்தியாலயம், ஹட்டன்.

நவம்தர்ஷனா, வாழைச்சேனை.

யூ.எல். முகம்மட் அஸாம்
ஸாஹிறாக் கல்லூரி, புத்தளம்.

சி. ரமேஸ், களுவாஞ்சிக்குடி.

எஸ். ஜீவா
பாரதிபுரம், களுவாஞ்சிக்குடி.

ந. சுஜாந்தி
நொச்சிமுனை, மட்டக்களப்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புறக்கணிப்பால் ஒதுங்கிய புயல்

இங்கிலாந்தின் புகழ் பெற்ற கிரிக்கெட் வீரர் டேவிட் கோவர் ஓய்வு பெற்றமை கிரிக்கெட் இரசிகர்களுக்கு பெரும் கவலையை எற்படுத்திவிட்டது.



இங்கிலாந்து அணியில் ரன்களை மழைபோல் பொழிந்து "கோல்டன் போய்" என்று அழைக்கப்பட்டவர் டேவிட் கோவர்.

டேவிட் கோவர் இல்லாத இங்கிலாந்து அணி இலங்கை அணியிடமும், இந்திய அணியிடமும் வாங்கிக் கட்டியது.

டேவிட் கோவர் தன்னைவிட புகழும் செல்வாக்கும் பெறுவதை சகிக்க முடியாத இங்கிலாந்து அணி கப்டன் கூச் கோவரை ஒதுக்கத் தொடங்கினார்.

கூச் எழுதிய புத்தகம் ஒன்றில் டேவிட் கோவர் அணிக்காக சிறப்பாக செயற்பட்டது கிடையாது என்று எழுதினார்.

இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்தபோது கூச்சுக்கும்-கோவருக்கும் இடையே மோதல் முற்றியது.

டெஸ்டில் தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து அணி போராடிய போது, அந்த மைதானத்தின் மேல் ஒரு குட்டி விமானத்தில் குத்துக்கரணம் அடித்தபடி கோவர் உல்லாசமாய் இருந்தார். அது அணியின் கட்டுப்பாட்டை மீறிய செயல் என்று கூச் சுட்டிக்காட்ட கோவர் மறுக்க மோதல் வளர்த்தது.

இப்போது டேவிட் கோவர் முதல்தரக் கிரிக்கெட்டில் இருந்து தனது விலகலை பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.

கூச்சின் புறக்கணிப்பே அவரது விலகலுக்குக் காரணம் என்று இங்கிலாந்தின் கிரிக்கெட் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

டேவிட் கோவருக்கு வயது 36. 448 முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளார்.

53 செஞ்சரிகள் உட்பட 26339 ரன்களை (சராசரி 40.08) குவித்துள்ளார்.

32 டெஸ்ட்டுகளில் கப்டனாக இருந்து விளையாடியது உட்பட 117 டெஸ்டுகளில் விளையாடி 18 செஞ்சரிகள் உட்பட 823 (சராசரி 44.25) ரன்களை குவித்துள்ளார்.

114 சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொண்டு 7 செஞ்சரிகள் உட்பட 3170 ரன்களை (சராசரி 30.77) குவித்திருக்கிறார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ரன்கள் குவித்த இங்கிலாந்து வீரர் என்ற சாதனையைப் படைத்தார். அந்தச் சாதனையை இப்போதுதான் கூச் முறியடித்துள்ளார்.

டேவிட் கோவரின் ஓய்வு சர்வதேச கிரிக்கெட் இரசிகர்களுக்கு இழப்புத்தான்.

# கிரிக்கெட் அரங்கில் பெண்கள் உலகக் கோப்பை போட்டிக்கும் ரெடி

சகல துறைகளிலும் சாதனை படைத்துவரும் பெண்கள் கிரிக்கெட் களத்தையும் விடுவதாக இல்லை.

இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியினர் சாதனை படைப்பதில் படு தீவிரமாக உள்ளனர்.


இம்மாதம் சார்ஜாவில் நடைபெறவுள்ள பெண்கள் கிரிக்கெட் போட்டியில் 3 நாடுகள் கலந்து கொள்ளவிருக்கின்றன. அதில் இந்திய அணியும் உண்டு.

1994ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் மேற்கிந்தியத்தீவு மற்றும் அவுஸ்திரேலிய பெண்கள் அணிகள் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்கின்றனர்.

1995 டிசம்பரில் இங்கிலாந்து கிரிக்கெட் பெண்கள் அணி இந்தியா செல்கிறது.

அவற்றோடு மோதி முடிய 1996ல் இந்திய கிரிக்கெட் பெண்கள் அணி நியூசிலாந்துக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் சுற்றுப்பயணம் செல்லவுள்ளது.

1997இல் உலகக் கோப்பைக்கான



பெண்கள் கிரிக்கெட் போட்டியை இந்தியா நடத்தப் போகிறது.

கிரிக்கெட் என்றால் அது ஆண்களின் விளையாட்டு என்பது இனி பழைய கதை.

கிரிக்கெட் போட்டிகள் நடந்தால் தொலைக்காட்சி முன்பாக பெண்களும் அமர்ந்துவிடுகிறார்கள்.

# ஓட்டத்தில் ராணி! ஸ்போர்ட்ஸ்



கெயில் டேவர்ஸ் 1992ம் ஆண்டு பார்சிலோனாவில் நடந்த 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றார். ஆனால் தடை ஓட்டத்தில் பதக்கத்தைத் தவற விட்டார். ஆனால் ஜேர்மன் நாட்டில் உள்ள ஸ்டட் கர்டில் சென்ற வருடம் நடந்த உலக தடகள சம்பியன் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் புகழ்பெற்ற வீராங்கனை மெர்லின் ஓட்டியை மயிரிழை நேரத்தில் முந்தித் தங்கம் வென்றார். 100 மீற்றர் தடை ஓட்டத்திலும் பந்தயத் தூரத்தை 12.46 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றார்.

அமெரிக்க ஓட்டப்பந்தய வீராங்கனைகளில் 100 மீற்றர் ஓட்டத்திலும், தடை ஓட்டத்திலும் வென்ற ஒரே வீராங்கனை 'கருப்புக்குதிரை' கெயில் டேவர்ஸ் தான் என்ற பெருமை கிடைத்திருக்கிறது. அடுத்த ஒலிம்பிக் போட்டியிலும் பதக்கம் வெல்ல திருமணமான 27 வயது டேவர்ஸ் இப்போதே தயாராகி வருகிறார்.

# தேன் கிண்ணம்

## காணமல் போன நிலவு

எத்தனை
நட்சத்திரங்கள்
பிடுங்கி
எறியப்பட்டன
ஒரு
இருட்டு நாளில்!
வடக்கின் இரவில்
அண்ணாந்து பார்ப்பேன்
அப்போதெல்லாம்
என்
வீட்டு வேலியோரத்து
மரத்தின் கிளையில்
குந்திக்கொண்டிருக்கும்
என்
நிம்மதி!

வானம்
குனிந்து
நிலவை
தொலைத்துவிட்டாய்
காதோடு
சொல்லும் போதெல்லாம்
என்
பெருமூச்சின்
வேகத்தில்
தூரத்தில் போய்விழும்!


பிய்ந்து போன
வானத்தால்
குருதி மழை கொட்டும்!

மரணத் துயரில்
துடிக்கும்
வானத்துக்கு
ஒட்டுப்போடுவதற்காய்
நிலவைத் தேடித்தேடி
புழுதிகளிலும்
சுடு மணல்களிலும்

புரண்டு புரண்டு
என்
கால் தடங்கள்..!

நிலவும் சுடுமோ?

ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.



## என் தேசத்தின் வேண்டுதல்

என் தேசத்தின்
ஒவ்வொரு பொழுதுகளும்
ஏதாவதொரு
மகிழ்விற்காய் வேண்டி
தவம் கிடக்கிறது.

யுத்தக் கருக்கட்டலில்
பொழுது ஆரம்பித்தலும்
பொழுதின் முடிதலும்
இல்லாத ஒரு
சுபீட்சத்திற்கான
ஆதரவு தேடுகிறது.

மனிதாபிமானமுள்ளவர்களிடம்
என் தேசம்
மடிப்பிச்சை கேட்பதெல்லாம்
நிம்மதி என்பதற்காய்
மட்டும்.

மாடு சப்பிய பனம்பழம்
போலவும்
கசாப்புக் கடையின்
தோலுரிந்த ஆடு
போலவும்
எனது தேசம்.

நெருடி முறித்த
கோழியின் கழுத்தைப்
போலவும்
பலவீனமான
சோமாலிய
ஏழை போலவும்
இறைவனிடமும்
இறைதூதரிடமும்
என் தேசத்தின்
வேண்டுதலெல்லாம்
'நிம்மதி மட்டுமாவது தாரீர்'

அக்குறணை
இளைய அப்துல்லாஹ்.

## இதழ்கள்

முத்தங்களை
சேகரிக்கும்
வண்டுகள்

## மழை

இடி முழக்கத்துக்கு
பயந்து முகில் மகள்
விட்ட கண்ணீர்

## ஆண்கள்

வரதட்சணை சந்தையில்
விற்கப்படும்
அடிமைகள்

எஸ்.அகில் (கனடா)

## முற்றுப் பெறாத முதற் காதல்

அன்று
ஒரு மழை நாள்
நாமிருவரும் இரு
குடைகளில்
அருகருகே நடந்தோம்
மழை மட்டும் நம்மிடையே
பொதுவாக இருந்தது.

நம் நடைகள்
சமாந்தரமாக இருந்தாலும்
நம் எண்ணங்கள்
பின்னி பிணைந்து ஒன்றாக
இருந்தது.

நம்மிடையே மௌனம்
ஆட்சி செலுத்திக்
கொண்டிருந்தது.
வார்த்தைகளுக்கு
உதட்டுக் கதவுகள்
பூட்டுப் போட்டுக்கொண்டன.

அது நம் வாலிப வயதின்
வாசலில் பூத்த
முதற்காதல்.

பின்
நாட்டில் வெடித்த
வன்முறையால் நம்
முதற்காதல்
முற்றுப் புள்ளியானது.

நம் வாழ்வே இங்கு
கேள்விக்குறியானதால்
முற்றுப் புள்ளி நம்மை
முழுதாகப் பாதிக்கவில்லை.

ஆனாலும்
எண்ணத்தின் எச்சங்கள்
எஞ்சியிருக்கின்றன.

இன்று
உன் எண்ணத்தின்
வெப்பத்தால்-அந்த
குளிர் நிலவு கருகியிராது
என்றே நம்புகிறேன்.

இன்று
மீண்டும்
அதே மழை நாள்
ஏக்கத்தை சுமந்த
விழிகளோடு
நான் மட்டும்
போகிறேன்-தனியாக
ஒரு குடையோடு.

மட்டுநகர்-நர்மி.

## "ஆட்டோ கிராவ்"

நீ எழுதுவதற்கு
ஒரு பக்கம் என்ன
ஒவ்வொரு பக்கமும் உனக்காகவே!
ஏன் தெரியுமா?

உன் நினைவுகள்
நீங்காமல் இருக்கின்ற போதே
நினைவுச் சின்னமாக
நீ தந்தது
இன்னும் உன் நினைவை
நிலைக்க செய்கின்றது- அதில்
உன் எண்ணங்கள் மட்டும்
உன் எழுத்துக்கள் மட்டும்
உலாவர வேண்டும்
என் பார்வையில்.

• •

நீ
எனைவிட்டு போகும்
நாள்வரையில்-என்
நினைவுகளும் நீங்காதிருக்கும்
நீ போன பின்பு
நான்....
என் நினைவுகள்....
எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.
அதனால் உன்
எண்ணங்கள் எழுத்துக்கள்
எப்போதும் உலாவரவேண்டும்
என் பார்வையில்

• •

நீ எழுதுவதற்கு
ஒரு பக்கம் என்ன
ஒவ்வொரு பக்கமும் உனக்காகவே.

எல்.கே.நாதன்.



## சின்னக்கவிகள்

முக்கால்வாசி
பிரபஞ்சத்தை
தன் முக்காட்டால்
போர்த்துக் கொண்டிருக்கிறாள்
பர்தாக்கன்னி
'தண்ணீர்'

• •

வெளிச்சம் தந்து
தானும்
வெந்து செத்த தியாகி
'மெழுகுவர்த்தி'

• •

இருளில்
கண்சிமிட்டி
கண்ணடித்த
காரிகை
வெளிச்சத்தில்
காணாமல் போனாள்
'நட்சத்திரம்'

• •

வானம் துப்பிய
எச்சில் துளிகள்
பூமியின் மேல்
மினுங்கியவாறு
'பனி'

• •

ஊசிபோட்டு
காசு வாங்காமல்
போன
வைத்தியவள்ளல்
'நுளம்பு'

கிண்ணியா சபறுள்ளா.





# இந்த வாரம் உங்கள் பலன்

(16.01.94 முதல் 22.01.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், சனி, வெள்ளி, செவ்வாய், புதன் |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |

கும்பம், மீனம், மேடம் இராசிகளில் சந்திரன் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

## மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய நஷ்டம், பொருள் இழப்பு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பணநெருக்கடி, பூமியால் நஷ்டம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், இடமாற்றம். | பகல்11 மணி |
| புதன்- | தனலாபம், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| வியாழன்- | அற்ப சுகம், குடும்ப மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், காரிய சித்தி. | காலை 10 மணி |
| சனி- | பணவரவு, மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மனமகிழ்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | குடும்ப சுகம், தேகசுக நன்மை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் சகவாசம், பொருள் இலாபம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | இனசனக் கொண்டாட்டம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| சனி- | பயமிகுதி, கடவுள் வழிபாடு, மேன்மை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, பொருள் சிறப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | தனலாபம், செய்தொழில் மேன்மை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், கவலையதிகம். | காலை 9 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, தேகசுக மேன்மை. | பி.ப 4 மணி |
| வியாழன்- | கௌரவம், பாராட்டு. | காலை 9 மணி |
| வெள்ளி- | அந்நியரால் உதவி, செய்தொழில் நன்மை. | காலை 7 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, மனக்கவலை அதிகம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தூர இடப்பயணம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பொருள் பேறு, முதலீட்டு இலாபம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாசம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, அரச நன்மை. | பகல் 11 மணி |
| வியாழன்- | தேகசுகம் பாதிப்பு, ஆழ்ந்த கவலை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளிவட்டாரப் பழக்கம், ஆடம்பரச் செலவு. | காலை 8 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | காரியசித்தி, கௌரவம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், உயர்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | பொருள் பேறு, செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | துன்பம் அகலும், மகிழ்ச்சி நிலை. | பி.ப 3 மணி |
| சனி- | முதலீட்டு இலாபம், புதிய முயற்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 1

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள் பேறு. | காலை 7 மணி |
| திங்கள- | பூமியால் இலாபம், கடன் பயம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், வீண் முயற்சி. | காலை 9 மணி |
| புதன்- | குடும்ப நன்மை, பிள்ளைகளால் சுகம். | பகல் 12 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், வீண் செலவு. | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப 3 மணி |
| சனி- | கவலை அதிகம், காணி பூமித்தகராறு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | பயணம் வெற்றி, பாராட்டு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- | வீண் சந்தேகம், குடும்பப் பகை. | காலை 10 மணி |
| வியாழன்- | தேகசுகம் பாதிப்பு, கடன் தொல்லை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு. | பகல் 11 மணி |
| சனி- | அந்நியர் உறவு, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -6

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நடைக்கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| திங்கள்- | விருந்தினர் வருகை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | காரியத் தடை, மனக்கிலேசம். | பகல் 12 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வியாழன்- | தனலாபம், உயர்ந்த நிலை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| சனி- | பணக்கஷ்டம், கடன் பயம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| திங்கள்- | கடன் தொல்லை நீங்கும், பணப்புழக்கம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | வீண் பயணம், உறவினர் பகை. | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாசம், அற்ப சுகம். | காலை 7 மணி |
| வியாழன்- | குடும்பக் கஷ்டம், பணச்செலவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| சனி- | உயர்ச்சி முன்னேற்றம், பணவரவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -4

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | கடன் படல், மனக்கலக்கம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, தொழில் மேன்மை. | பி.ப 1 மணி |
| புதன்- | கௌரவம், தெய்வானுகூலம். | காலை 9 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், கவலை அதிகம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | முன்னேற்றம், பயணத்தினால் கஷ்டம். | பகல் 11 மணி |
| சனி- | காணி பூமி மாற்றம், உயர்ந்த நிலை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 5

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் விரயம், செய்தொழில் நட்டம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், காரியானுகூலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | பி.ப 2 மணி |
| புதன்- | வாழ்க்கை உயர்ச்சி, பணப்புழக்கம். | காலை 8 மணி |
| வியாழன்- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 10 மணி |
| வெள்ளி- | குடும்பக் கஷ்டம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | வீண் சிரமம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 8

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள் பேறு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | துன்ப நிலை நீங்கும், செய்தொழில் நன்மை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, இலாபமிகுதி. | காலை 9 மணி |
| வியாழன்- | சமயோசித வாழ்க்கை, குடும்ப சுகம். | காலை 7 மணி |
| வெள்ளி- | வெளியிட பிரயாணம், வீண் செலவு. | பி.ப 1 மணி |
| சனி- | கோப மிகுதி, வீண் பழி கேட்டல். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 2

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## விழிகளைத் தழுவ மறுக்கிறதா தூக்கம்?

### இதோ தூக்கம் வரச் சுலபமான வழிகள்!



தூக்கமின்மையும் ஒரு வியாதிதான். உடலிலுள்ள நரம்புகள் தளர்வடைவதனால் உண்டாவது. கவலையும் தூக்கத்தைக் கெடுத்துவிடும். படுக்கையில் போய் கண்களை இறுக மூடிக்கொண்டு படுத்தாலும் புரண்டு புரண்டு படுத்தாலும் தூக்கம் தூர ஓடி விட்டிருக்கும்.

சிலர் படுக்கையில் போய் விழுந்ததும் குரட்டை ஒலி கூரையை முட்டும். அவர்களைப் பார்த்து, 'கவலை இல்லாதவன்' என்று பொறாமைப்படுவோருமுண்டு.

உடலிலுள்ள பல கோளாறுகளினால் தூக்கம் வருவதில்லை. 'இன்சோம்னியா' என்று இதனை அழைப்பார்கள். உடலுறுப்புக்களில் சிறு வயதிலேயே ஏற்படும் சோர்வும் தூக்கமின்மைக்கான மற்றுமொரு காரணம். 'செரொட்டோனியம்' என்னும் இரசாயனப் பொருளை மூளை உரிய அளவில் அவ்வப்போது வெளியிடும். இத்திரவத்தை போதுமான அளவு மூளை வெளியிடவில்லையானால் தூக்கம் வரவே வராது.

தூக்கம் வரவில்லையானால் பலதரப்பட்ட யோசனைகள் எழுந்து மனத்தை அலைக்கழிக்கும். கோபம் அதிகரிக்கும். இதற்காக 'நித்திரை மாத்திரை'களையும் உட்கொள்வார்கள். ஆரம்பத்தில் அரை மாத்திரை, ஒரு மாத்திரை என்று ஆரம்பித்து நாளாக ஆக பல மாத்திரைகளை விழுங்கினாலும் நித்திரை வராது. இதன்பின் மது, போதைப்பொருட்களையும் இந்நபர்கள் நாடுவார்கள்.

மூளைக் கோளாறு உள்ளவர்களுக்கு நிச்சயமாக தூக்கம் வராது. உண்மையான பைத்தியங்களையும் பைத்தியக்கார வேடம் புனைவோரையும் தூக்கத்தை வைத்தே கண்டுபிடித்துவிடலாம்.

உணவு முறைகளில் சில மாற்றங்களைச் செய்து தூக்கமின்மையை விரட்டி விடலாம் என்று டாக்டர் ஜூடித் வேர்ட்மன் கூறுகிறார். 'உணவு மூலம் உள்ளத்தைப் பக்குவப் படுத்துவது எப்படி' (Managing your mind through food) என்ற நூலை எழுதிய இந்த மருத்துவ நிபுணர், தூக்கத்தை வரவழைக்கும் சில உணவு முறைகளைத் தந்துள்ளார்.

"கார்போ ஹைதரேட்டு எனும் மாச்சத்து அதிகமாக உள்ள உணவுவகைகள் தூக்கத்தைத் தரவல்லன." என்று கூறுகிறார் டாக்டர் வேர்ட்மன். அவர் தெரிவு செய்து தந்துள்ள உணவு முறைகளைப் பார்ப்போம்.

- அரிசி, புல்லரிசி போன்ற தானியங்கள் அதிக மாச்சத்தினை உள்ளடக்கியவை. இவற்றில் விட்டமின் Bயின் செறிவுண்டு. நரம்புகளுக்கு இவை அமைதித் தன்மையினைத்தரவல்லன.
- பச்சை வாழைப்பழங்கள் ஓரளவு உண்ணலாம். இவற்றிலும் அதிக மாச்சத்துண்டு. உருளைக்கிழங்கிலும் இது அதிகம் காணப்படுகிறது.
- கோதுமையும் தேனும் கூட நரம்புகளுக்கு ஓய்வளிக்க வல்லன. தேனில் ஓரளவு மயக்கும் தன்மையுண்டு.
- பொன்னாவரையினை தேனீர் போல் தயாரித்து அதில் தேன் கலந்து பருகலாம்.
- கேக் வகைகளும் தூக்கத்தைத் தரவல்லன. 'ஸ்ரோபெரி' என்றழைக்கப்படும் மேலை நாட்டு நாவற்பழங்களைச் சேர்த்துத் தயாரிக்கப் படும் கேக் வகைகள் தூக்கத்தைத் தரவல்லன.
- சோளப் பொரியினைக் கொறித்துக் கொண்டிருக்க உள்ளமும் உடலும் அமைதி பெறும்.
- ஒரேஞ்ச் பழச்சாறு அடிக்கடி பருகினால் இமைகள் நம்மை அறியாமலே மூடிக்கொள்ளும்.
- கோதுமை அல்லது அரிசிக் கஞ்சியுடன் வெல்லம் அல்லது நாட்டுச் சர்க்கரை கலந்து உட்கொண்டால், நல்ல தூக்கம் வரும்.

இத்தகைய உணவுகளை உட்கொள்வதனால் நரம்புகளுக்கும் தசை நார்களுக்கும் நல்ல அமைதியான ஓய்வினை ஏற்படுத்தக்கூடிய இரசாயன அமிலங்கள் சுரப்பது அதிகரித்து நிம்மதியான தூக்கம் கிடைக்க வழி பிறக்கும்.

இவை மேல் நாட்டு முறைகள். கீழத்தேயங்களில் தூக்கம் வராமல் தவிப்பவர்கள், பெரும்பாலும் உடலுக்கு ஏற்ற உழைப்பினை-பயிற்சியைத் தராதவர்கள். சோறு அதிகமாக உண்டவுடன் ஓடிவரும் தூக்கம். உழைக்காமல் இருக்கும் சோம்பேறிகளும் சதா தூங்கி வழிந்த வண்ணம் இருப்பார்கள்.

நல்ல எருமைத் தயிர் உண்டால் போதும்- உடனே கும்பகர்ண அவதாரம் எடுத்து விடுபவர்களும் நம் மத்தியில் உளர்.

## தொற்றிக் கொள்ளும் மூன்று நோய்கள்



மனிதனை மிக விரைவில் தொற்றிக்கொள்ளும் நோய்கள் மூன்றுள்ளன. சிரிப்பு, அவலம் மற்றும் கோபம் ஆகியவையே மிக வேகமாகப் பரவுகின்றன என்கிறார் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த எரிக் மொறிஸ்.

இந்த மூன்று வியாதிகளில் ஏதாவதொன்று ஒருவருக்கு வருமானால் அவருடன் இருக்கும் ஒருவருக்கோ பலருக்கோ உடனடியாகப் பரவ ஆரம்பித்து விடுகிறது.

ஒருவர் ஏதாவது ஒரு காரணத்துக்காகச் சிரிக்கத்துவங்கினால் அந்தக் காரணத்தை மற்றொருவருடன் கூறி அவரையும் சிரிக்க வைப்பதுடன் சேர்ந்து சிரிப்பார். இது வெகு வேகமாகப் பரவிவிடும்.

ஏதாவது ஒரு காரணத்தினால் ஒருவர் துயருற வேண்டிய நிலை ஏற்பட்டால் அவருடன் சேர்ந்த அனைவரும் அந்த அவலத்தால் பாதிக்கப்படுகின்றனர். உறவினர் மட்டுமல்லாமல் நண்பர்களும் சுற்றத்தாரும் இதனால் அவலப்படுகின்றனர்.

இதே போன்று தான் கோபமும், ஏதாவது ஒரு காரணத்தினால் ஒருவர் கோபத்துக்குள்ளாரானால் அவருடைய கோபம் உடனுள்ளவர்களெல்லாரையும் நிச்சயமாகப் பீடிக்கவே செய்யும்.

அவருடைய கோபம் அவருடைய குடும்பத்தைப் பற்றிக்கொள்ளும். அவரைக் கோபத்துக்குள்ளாக்கியவர்களும் கோபத்தைப் பரப்பிக் கொண்டேயிருப்பார்கள்.

## இதை எறியலாமோ?

எதையும் தேவையற்றது என்று தூக்கி எறிந்து விட முடியாது. பாபா அடாமிக் ஆராய்ச்சி மையம் கண்டுபிடித்திருக்கிறது. ஒரு ஆராய்ச்சி இதைத் தெளிவு படுத்துகிறது. சிறுநீரகத்தில் ஏற்படும் கற்களை உற்பத்தி செய்யும் ஒக்சலேட் மட்டத்தைக் குறைப்பதற்குப் பயன்படும் ஒருவித திரவம் இதில் இருக்கிறது. மிருகங்களில் பரிசோதனை செய்து முடித்து விட்டு, மனிதனில் இந்தச் சோதனை நடக்கிறது. வெற்றி பெற்றுவிட்டால், இனிமேல் வாழைப்பழத்தைத் தூக்கி எறிந்துவிட்டு தோலைச் சாப்பிடும் நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## எகிப்திய முறையால் புற்றுநோய்த் தடுப்பு!



எகிப்து நாட்டில் 6000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பல அபூர்வ மூலிகை மருந்துகளைப் பயன் படுத்தி வியாதிகளிலிருந்து தற்காத்துக் கொண்டார்கள். அது மட்டுமல்லாமல் வியாதிகள் வந்தாலும் கூட அதனை உடனடியாகக் குணப்படுத்திவிடக் கூடிய மருத்துவ முறைகளும் அவர்களிடம் இருந்துள்ளன.

இறந்தவர்களின் சடலங்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் கழிந்தும் கெட்டுப்போகாமல் பதனிட்டு பாதுகாப்பதற்கும் இவர்கள் பல நூதன மூலிகைகளையே பயன்படுத்தி வந்துள்ளனர். இவ்வாறு பண்டைய எகிப்தியர்கள் பயன்படுத்திய மூலிகை ஒன்றை விஞ்ஞானிகள் இனம் கண்டுள்ளனர். இம்மூலிகையைப் பயன்படுத்தி புற்று நோயைக் குணப்படுத்த முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

ரெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள "ஏ அண்ட் எம்" நிறுவன ஆய்வாளர் டேவிட் எல்.பஸ்பீ என்பவர் இந்த மூலிகையை ஆராய்ந்துள்ளார். ஆய்வகத்தில் பல எலிகளுக்கு புற்று நோய்க்கிருமிகளைச் செலுத்தியபோது அவற்றின் உடலில் கட்டிகள் வளர ஆரம்பித்துள்ளன.


புதிய (பழைய) மூலிகையிலிருந்து பெறப்பட்ட மருந்தினை நோய் கண்ட எலிகளுக்கு ஊட்டிய போது ஆச்சரியமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன. குதிரைகளுக்கும் இதே பரிசோதனை நடத்தப்பட்டு வெற்றி கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. "பரிசோதனை மையங்களில் கண்டுபிடிக்கப்படும் இரசாயன முறை மருந்துகளை வைத்தே இதுவரை பலன்கண்டு வந்தோம். இப்பொழுது இயற்கையாகக் கிடைக்கும் அம்சங்களைக் கொண்டே நோய் தீர்க்கும் மருந்துகளைக் காண முற்படுகிறோம். நல்ல பலன் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன." இவ்வாறு டாக்டர் டேவிட் கூறுகிறார்.




## மார்பகப் புற்று நோய் யாருக்கு வரும்?

இதை யாராலும் தீர்மானமாக இதுவரை சொல்ல முடியவில்லை. ஆனால் கீழே தரப்பட்டுள்ள சில விஷயங்கள் உங்களோடு சம்மந்தப் பட்டிருந்தால் மார்பகப் புற்று நோய் உங்களுக்கு வருவதற்கான சாத்தியங்கள் உண்டு என்கிறார்கள்.

- உங்கள் தாயாருக்கோ அல்லது சகோதரிக்கோ மார்பகப் புற்றுநோய் இருந்தால் உங்களுக்கும் வரலாம்.
- நீங்கள் குழந்தை பாக்கியம் அற்ற 'மலடி'ப் பெண்மணியாக இருந்தால்
- நீங்கள் உண்ணும் உணவில் கொழுப்புச் சத்து அதிக அளவில் இருந்தால்-
- உங்கள் உடலின் எடை வயதுக்கு மீறி அதிகமாக இருந்தால்-
- நீங்கள் மது அருந்துபவராக இருந்தால்-
- நீங்கள் பன்னிரெண்டு வயதுக்கு முன்பாகவே பருவம் எய்திய பெண்ணாக இருந்தால்- புற்றுநோய் வர வாய்ப்புண்டு.



# கண்ணே மதுமிதா






தன் இருபுறமும் நின்றவர்கள் தாக்கப்பட்டு வீழ்ந்து கொண்டிருப்பது புரிந்து - நந்தகோபாலுக்கு மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது.

பற்றரியில் இயங்கும் பொம்மையின் கழுத்து திரும்புவது போல, நந்தகோபாலின் கழுத்துத் திரும்பியது.

"என்ன டாக்டர் உடம்பெல்லாம் எப்படியிருக்கிறது?"

கேலியாய் கேட்டு, உதட்டிலே கேலிப் புன்னகை காட்டி, நந்தகோபாலின் முகத்தில் பரவிய உச்ச பட்சமான பயம் பார்த்து ரசித்தது,

-குலாம்ஷா-

"என்ன டாக்டர் பதில் சொல்ல மாட்டீர்களா? அது சரி,இது வழக்கமாக நீங்கள் கேட்கும் கேள்வி. என்ன செய்வது இப்போது? நீங்கள் எங்களுடைய பேஷன்ட். உங்கள் உடம்பை கவனிக்க வேண்டிய பொறுப்பு எங்களுடையது. குறிப்பாக என்னுடையது. நான் குலாம்ஷா. கேள்விப்பட்டிருப்பீர்களே."

நந்தகோபால் புலியின் வாயில் சிக்கிய மான்போல துடித்துப் போனார்.

குலாம்ஷாவின் கவனிப்புக்கள் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறார்.

குற்ற உலகின் சிம்ம சொப்பனம் குலாம்ஷா. பணத்தால் அல்லது பலத்தால் பணியவைக்க முடியாத பெரிய பிரச்சனை குலாம்ஷா.

நேரில் பார்த்ததில்லை. இப்போது பார்க்கும் போது பயம் தொற்றிக்கொண்டது.

சைலன்சர் பொருத்தப்பட்ட கைத் துப்பாக்கி.

பெரிய சத்தம் போடாமல் நந்தகோபாலின் நம்பிக்கையான காவலர்களை சாப்பிட்டுவிட்டது.

நந்தகோபால் கீழே விழுந்து கிடந்தவர்களை பயத்தோடு நோக்கினார்.

"இனி அவர்கள் உபயோகப்பட மாட்டார்கள் மிஸ்டர் நந்தகோபால். உங்களையும் அனுப்பியிருக்கலாம். சில கேள்விகள் இருக்கின்றன. பதில் சொல்ல நீங்கள் வேண்டும். சோ....ஒரு ரவை உள்ளேயே இருக்கிறது."

சொல்லிவிட்டு நந்தகோபாலை பார்த்த பார்வையில் பூரணமான வெறுப்பு இருந்தது.

குலாம்ஷாவின் பின்னால் ஐந்து பொலிஸ்காரர் நின்றார்கள். ஆயுதபாணிகளாய் தெரிந்தார்கள்.

குலாம்ஷாவை நோக்கி விரைந்து போய் கைகுலுக்கினார் வைத்திலிங்கம்.

கைகுலுக்கிக் கொண்டு மதுமிதாவைப் பார்த்தார் குலாம்ஷா.

ஆச்சரியத்தால் விழிகள் விரிந்திருக்க மேலும் அழகாகத் தெரிந்தாள் மதுமிதா.

கீழே குனிந்து தரையில் கிடந்த போட்டோக்களையும், சிறிய கவரையும் எடுத்து பெரிதான பச்சைக் கவருக்குள் பத்திரப்படுத்திக்கொண்டாள்.

வைத்திலிங்கத்தோடு கைகுலுக்கிவிட்டு,

"மிஸ்டர் வைத்திலிங்கம் நாங்கள் உங்களையும் விசாரிக்க வேண்டியிருக்கிறது. அத்தோடு மதுமிதாவையும்..."

சொல்லியபடியே மதுமிதாவை நெருங்கி,

"அந்தக் கவரை தரமுடியுமா மிஸ் மதுமிதா."

தயங்கினாள். தந்தையைப் பார்த்தாள். வைத்திலிங்கம் தலையைச் சொறிந்து கொண்டே,

"இன்ஸ்பெக்டர் அந்தக் கவரில்.... வந்து"

"தெரியும். போட்டோக்கள் உள்ளன."

குலாம்ஷா சொல்ல, வைத்திலிங்கம் அவரை ஆச்சரியமாய் பார்த்தார்.

"போட்டோக்களை வைத்து மதுமிதாவோடு விளையாட உங்கள் எதிரிகள் நினைக்க, போட்டோக்களை மீட்க மதுமிதா தான் அறிந்த வழிகளில் முயல, இடையே சில கொலைகள் விழ... அதனால் அந்தப் போட்டோக்கள் எம்மிடம் . தரப்படுவது நியாயம்தானே மிஸ்டர் வைத்திலிங்கம்."

உறுதியாய் கூறி, மதுமிதாவை நோக்கிக் கைநீட்டினார்.

மதுமிதா தயக்கமாய் கவர் நீட்டினாள்.

லாலுக்கு மெல்ல மெல்ல மயக்கம் விலகிக்கொண்டிருந்தது.

கண்களை திறந்தவன் குலாம்ஷாவைப் பார்த்ததும் மீண்டும் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

மயக்கமாய் கிடப்பவன் போலவே இருந்து காதுகளை தீட்டிக்கொண்டான்.

'குலாம்ஷா உள்ளே வந்துவிட்டார். ஆக பொலிஸ் இந்த இடத்தை அறிந்து வளைத்துவிட்டது. வெளியே இருந்தவர்கள் இந்த நேரம் பொலிசின் கவனிப்பில் உடம்பெல்லாம் புண்ணாகிக் கொண்டிருப்பார்கள்...

'எப்படித். தப்புவது? எப்படியும் தப்பியேயாக வேண்டும்.'

லால். பி.எம்.லால் மனதுக்குள் கேள்வி எழுப்பி விடை தேடி யோசித்துக்கொண்டிருந்தான்.

குலாம்ஷா லால் மயக்கமாய் கிடப்பதை நோக்கினார். நோக்கியபடியே கவர் பிரித்து உள்ளே இருந்த போட்டோக்களை வெளியே எடுத்தார்.

புகைப்படங்கள் இரண்டும் கறுப்பு-வெள்ளையில் இருந்தன.

புகைப்படங்கள் இரண்டிலும் மதுமிதா இருந்தாள். விழிகளில் போதை தெரிந்தது. கறுப்பு-வெள்ளை புகைப்படத்தில் கூட உதடுகளின் ஈரம் தெரிந்தது. மதுமிதா முழுமையாய் தெரிந்தாள்.

அழகான வளைவுகள். அளவு சொல்லி திட்டமிட்டு செதுக்கப்பட்டவை போன்ற இளமை எழில்கள்.. எல்லாமே தெரிந்தன.

துணியில்லாத மதுமிதாவை கவர்ச்சியான கோணம் புரிந்து படம் எடுத்திருக்கிறார்கள்.

குலாம்ஷா கூர்ந்து புகைப்படம் பார்க்க மதுமிதா சங்கடத்தால் நெளிந்தாள். வெட்கம் பிடுங்கித் தின்றது. வேதனை உள்ளே வதைத்தது.

வைத்திலிங்கமும் சங்கடமாய் உணர்ந்தார். குலாம்ஷா இரண்டாவது புகைப்படம் நோக்கினார்.

அதிலே தெரிந்த காட்சியால் ஒரு கணம் திகைத்து பின்னர் கூர்ந்து நோக்கினார்.

மதுமிதா ஒரு கட்டிலில் மல்லாந்து சரிந்திருந்தாள்.

சரிந்திருந்தவள் மீது அவன் கவிழ்ந்திருந்தான். மதுமிதாவை கட்டில் தாங்க, அவனை மதுமிதா தன் உடலால் தாங்கிக்கொண்டிருந்தாள்.

கட்டிலின் தலைப்பக்கமாய் நின்று படம் எடுக்கப்பட்டிருந்தது.

மதுமிதாவின் மீது கவிழ்ந்திருந்தவனின் முகம் உயர்ந்த போது கமரா கிளிக் செய்திருந்தது.

அதனால் அவன் முகம் தெளிவாய் தெரிந்தது.

தெளிவாய் முகம் தெரிய, மீண்டும் ஒரு முறை அந்த முகம்பார்த்து உறுதி செய்து கொண்டார் குலாம்ஷா.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு குலாம்ஷாவின் அருகில் வந்தார் வைத்திலிங்கம்.

முகத்தில் கவலை இருந்தது. விழிகள் கலங்கியிருந்தன. குரல் திணறியது.

"அ.....அந்தப்...படத்தில் இருப்பவன் யார் என்று....யார் என்று தெரிகிறதா இன்ஸ்பெக்டர்?"

"தெரிகிறது"

வைத்திலிங்கம் கவலையோடு குலாம்ஷாவைப் பார்த்தார்.

குலாம்ஷா படத்தில் இருந்தவனின் பெயரைச் சொன்னார்.

■

பி.எம்.லாலின் இரகசியமான இல்லம் முற்றுகையிடப்படுவதற்கு சில நிமிடங்கள் முன்னதாகவே அங்கிருந்து வெளியேறி விட்டாள் சுஜிதா.

வெளியேறியவள் நேராக ஹோட்டல் அஜந்தாவுக்கு சென்றாள்.

ஆடம்பரம் நிறைந்திருந்த அஜந்தாவின் 25ம் இலக்க அறையின் பொத்தானை அழுத்தி காத்திருந்தாள்.

கதவு திறந்தது. திறந்தவன் வெற்று மார்போடு நின்றான். மார்பில் கற்றையாய் முடி வளர்ந்திருந்தது. உடற்பயிற்சி செய்வதை தினசரி கடமையாக வைத்திருப்பான் போல் இருந்தது. பயிற்சியின் உபயத்தில் மார்புகள் வலிவு காட்டின. சுஜிதாவைப் பார்த்ததும் முகத்தில் வியப்புக் காட்டினான்.

"வாவ்! நீயா. உள்ளே வா சுஜி" என்று கதவை அகல விரித்தான்.

உள்ளே இரு படுக்கைகள் கொண்ட கட்டில். பெரிய மேசை ஒன்று, மேசையிலன் விஸ்கிப் போத்தல் இருந்தது. பாதியை காலி செய்திருந்தான்.

கட்டிலில் சுஜி அமர பக்கத்தில் அவனும் ஒட்டிக்கொண்டான்.

விஸ்கி வாசனை மூக்கில் வந்து மோதியது.

"என்ன லாலோடு ஏதாவது பிரச்சனையா ,சுஜி? மறைக்காதே. உன் முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறது. எனக்குத் தெரியும். இந்த நரேனின் அழைப்பை என்றாவது ஒரு நாள் நீ ஏற்றுக்கொள்வாய் என்று தெரியும்."



சுஜி அவனைத் திரும்பிப் பார்த்தாள். பரந்து விரிந்த வெற்று மார்பு வெட்கப் படுத்தியது. தாராளமாகத் தலைவைத்துத் தூங்கலாம் போல் இருந்தது.

நரேன் லாலோடு விரோதித்து பிரிந்தவன்.

விரோதத்துக்கு பல காரணங்கள். அதில் ஒரு காரணம் சுஜிதா.

சுஜிதாவை நரேன் சுற்றிவர அதை தெரிந்துகொண்டு லால் சீற, இனி சரிவராது பிரிவோம் என்று நரேன் சொல்ல லால் ஓ.கே சொல்லிவிட்டான்.

நரேன் துரோகம் செய்யமாட்டான். லாலுக்கு அது தெரியும். எனவே நரேன் உயிரோடு விடப்பட்டான்.

லாலோடு உறவு அறுத்த போதும் நிழல் உலகோடு நரேன் தொடர்பு வைத்திருந்தான்.

கள்ளத்தனமான கடவுச்சீட்டுக்கள் அடையாள அட்டைகள், போலி விசாக்கள் தேவையா? நரேன் வரவேண்டும். நரேனின் இன்னொரு தொழில் புகைப்படம் எடுப்பது.

"என்ன யோசிக்கிறாய் சுஜி."

கேட்டபடியே ஆதரவாய் தோள் தொட்டான்.

"லால் என்னை ஏமாற்றிவிட்டான் நரேன்."

சொல்லும்போதே அழுகை வந்தது. குலுங்கினாள்.

"எதிர்பார்த்தேன்."

என்றான் நரேன். தோளில் இருந்த கரம் இறங்கி இடையில் நின்று அழுத்தியது. சுஜி இடம் கொடுத்தாள்.

"இன்னொருத்தியின் முன்னால் என்னை குப்பைபோல தள்ளிவிட்டான் பார். அதுதான் தாங்க முடியவில்லை நரேன்."

"யார் அந்த இன்னொருத்தி?"

"மதுமிதா"

"போலியா? ஒரிஜினலா?"

"ஒரிஜினல்"

சுஜிதா சொல்ல நரேன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய் நரேன்?"

"மதுமிதாவை ஆட்டிப்படைக்கும் ஒரு இரகசியம் என்னிடமும் இருக்கிறது சுஜி."

சுஜிதாவுக்குப் புரியவில்லை.

"என்ன இரகசியம் நரேன்."

"மதுமிதாவை ஆட்டிப்படைத்து அவள் பெயரில் உள்ள சொத்தை சுருட்ட நடத்தப்பட்ட நாடகத்தை புகைப்படம் எடுத்தது ஐயாதான்."

"அது தெரியும். அந்தப் புகைப்படங்கள் இப்போது லாலிடம் தானே இருக்கின்றன."

"இருக்கட்டும். அப்படி நூறு புகைப் படங்கள் எடுக்கக் கூடிய வசதி என்னிடம் இருக்கிறது சுஜி."

"என்ன வசதி நரேன்."

ஆர்வமாய்க் கேட்டாள். உடனே பதில் சொல்லாமல் சுஜிதாவின் அடிவயிற்றில் கரம் இறக்கி அதன் மென்மையில் மனம் லயித்தான் நரேன். சுஜிதாவின் கன்னத்தில் உதடுகளை பொருத்தி மறுகரத்தால் அவள் மூக்கைக் கிள்ளினான்.

"வலிக்கிறது நரேன்." என்றாள்.

"வலிக்கட்டுமேன்."

என்றபடி வயிற்றில் இருந்து மெல்ல கரம் இறக்க,

"வேண்டாம். இது போதும்."

என்று தடுத்து,

"என்ன வசதி நரேன். அதைச் சொல்லு முதலில்."

"சொன்னால் என்ன தருவாய்?"

"என்ன வேண்டும்?"

"கேட்டால் தருவாயா?"

குரலில் காமம் வழிந்தது. அவன் விட்ட மூச்சில் வெப்பம் இருந்தது.

"கேளேன்"

அவளை நோக்கி சுட்டுவிரல் நீட்டிக்காட்டினான்.

புரியாதது போல, விழிகள் விரித்து,

"என்ன?"

"புரியவில்லையா சுஜி. நீ வேண்டும். நீ தரும் சுகம் வேண்டும்."

கண் சிமிட்டி சிரித்து, அவள் காதில் கிள்ளினான்.

சுஜி நரேனை வைத்து லாலை வஞ்சம் தீர்க்க நினைத்தாள். நரேன் லாலுக்கு எதிரியாக விரும்பமாட்டான். விரும்பவைக்க வேண்டும். அதற்கு நரேனை மடக்கிப் போடவேண்டும்.

"இனி நான் உனக்குத்தான் நரேன். இதற்கெல்லாம் எதற்கு அனுமதி?"

கேட்டுக்கொண்டே அவன் பரந்த மார்பில் தலை சரித்தாள்.

"சொல்லு நரேன் என்ன வசதி?"

மார்பு முடியை விரல்களால் கோதி விளையாடினாள்.

"சொல்லாவிட்டால் விடமாட்டாய்."

என்றான் சிரித்தான்.

"சொல்லாவிட்டால் தரமாட்டேன்."

என்றாள். விழிகள் உயர்த்தி மயக்கம் காட்டினான்.

"அந்த புகைப்படங்களின் நெக்கடிவ் என்னிடம் தான் இருக்கிறது. அங்கே இருப்பது போலி. நரேன் மடையன் அல்ல. எப்போதாவது தேவைப்படும் என்று முக்கியமானவற்றை இழப்பதில்லை நான்."

சுஜிதா துள்ளி எழுந்தாள். முகத்தில் மின்னொளிபோல மகிழ்ச்சி காட்டினாள்.

"நரேன் எனக்கு அந்த நெக்கடிவ் வேண்டும் தருவாயா?"

"எதற்கு?"

"லாலை அலையவைக்க. ஏமாற்றம் என்றால் எப்படியிருக்கும் என்று அவனுக்குப் புரியவைக்க."

"நரேன் துரோகம் செய்யமாட்டான். வேண்டுமானால் மதுமிதாவை மிரட்டலாம். சில இலட்சங்கள் கேட்கலாம். லாலோடு வேண்டாம்."

"நரேன்."

என்று உரத்த குரலில் அதட்டுவது போல் அழைத்தாள் சுஜி.

"என்ன சுஜி?"

என்று கேட்டு நிமிர்ந்து பார்க்க சுஜிதாவின் கரத்தில் சின்னதாய் ஒரு கைத்துப்பாக்கி இருந்தது.

"என்ன சுஜி. வேண்டாம். அதைப் போடு. உன்னையே நீ அழித்துக் கொள்ளாதே."

"சத்தியமாய் சுடுவேன். எனக்கு அந்த நெக்கடிவ் உடனே தேவை. தந்தால் உன் உயிர் உனக்கு. என் உடலும் உனக்கு."

சுஜி சொல்லிக்கொண்டிருக்க, நரேன் துரிதமாய் செயற்பட்டு, கட்டிலில் கிடந்த தலையணை தூக்கி அவள் முகத்திற்கு வீசினான்.

தடுமாறியபடி, துப்பாக்கியின் விசையை அமுக்க, ரவைகள் குறியற்று பாய்ந்தன.

நரேன் தரையில் உருண்டு, சுஜிதாவை நெருங்கி அவள் காலில் இழுத்துவிட நிலத்தில் பின்புறமாய் விழுந்தாள். அப்போதும் சுடுவதை நிறுத்தவில்லை. ஆறு ரவைகளும் விரயமாகி துப்பாக்கி காலியானது.

நரேன் சிரித்தான்.

"அவசரப்பட்டுவிட்டாய் சுஜி. இப்போது கூட எனக்கு உன் மேல் கோபமில்லை." என்றான்.

ரூம் கதவு வெளியே இருந்து தட்டப் பட்டது.

"துப்பாக்கி வெடித்த ஓசை வெளியே கேட்டிருக்குமோ?"

நினைத்துக்கொண்டு எழுந்து, தரையில் கிடந்த சுஜியை நோக்கி கை நீட்டினான்.

"எழும்பு சுஜி."

கையைப்பிடித்து உந்தி எழுந்தாள்.

நரேன் சென்று கதவு திறக்க வெளியே பொலிஸ் யூனிபோம்கள் தெரிந்தன.

■

டி.ஐ.ஜி டென்சில் குலாம்ஷாவிடம் இருந்து வரப்போகும் செய்திக்காகக் காத்திருந்தார்.

மிருகமாய் ஷா நடத்தும் வேட்டையால் காலையில் ஐ.ஜி கூப்பிட்டு ஏறி விழுந்தார்.

"குற்றவாளிகளை தண்டிக்கும் உரிமை பொலிசுக்கில்லை டி.ஐ.ஜி."

"யெஸ் சேர்"

"என்ன யெஸ். குலாம்ஷாவை அந்தக் கூட்டத்தைப் பிடிக்க அனுப்பினீர்களா அல்லது கொல்ல அனுப்பினீர்களா?"

ஐ.ஜியின் கோபம் அவரது தடிப்பான மீசையின் துடிப்பில் தெரிந்தது.

சமாதானம் சொல்லி, குலாம்ஷாவுக்கு சில கட்டுப்பாடுகள் விதிப்பதாய்க் கூறி ஐ.ஜியிடம் இருந்து விடைபெறுவதற்குள் போதும் என்றாகியது.

தொலைபேசி அழைத்தது.

"ஹலோ டி.ஐ.ஜி. ஹியர்."

"காக்கிச் சட்டையைப் போட்டால் பாசம் பறந்து போய்விடுமா டி.ஐ.ஜி?"

கோபம் வந்தது.


"யாரடா நீ?"

"யாராயிருந்தால் உங்களுக்கென்ன? நான் முக்கியமல்ல. நான் சொல்லும் செய்தி உங்களுக்கு முக்கியம். என்னசொல்லட்டுமா?"


"சொல்லு."

சொன்னான். டி.ஐ.ஜி கோபத்தில் சிலிர்த்தார். (இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: T. Jeyakumar
வயது: 26
முகவரி: Kirchgasse-2, CH-4107-Ettingen, Switzer Land.
பொழுதுபோக்கு: ரீவி. பார்த்தல், வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், விளையாடல்.



பெயர்: எஸ்.ஜே. நந்தினி
வயது: 16
முகவரி: சாகாம ரோட், அக்கரைப்பற்று-8.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல்,ரீவி. பார்த்தல்.



பெயர்: ஏ.எம். ஆரிப்
வயது: 19
முகவரி: 115, அளுத்கம, மண்ணவத்த, மாத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடல்.



பெயர்: முகமட் ஸனூஸ்தீன்
வயது: 17
முகவரி: தோறகொடுவ, அனுக்கனே, குளியாப்பிட்டிய.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: பி. தங்கராஜ்
வயது: 22
முகவரி: 25, பிரதான வீதி நானுஓயா.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், கிரிக்கெட், கால்பந்து விளையாடுதல்.

பெயர்: ஏ.சி.எம். ஹக்மான்
வயது: 17
முகவரி: ஏ.எல்.எம். ஸ்டோர்ஸ், கல்பிட்டி வீதி, நுரைச்சோலை, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், உதைபந்து விளையாடுதல்.

பெயர்: எஸ். பிரமிளா
வயது: 18
முகவரி: 75/6, பர்கியுன் ரோட் கொழும்பு-14.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல், பாட்டுப் பாடுதல்.

பெயர்: எஸ்.எம். பரீனா
வயது: 20
முகவரி: 352, ஸைலான் வீதி, கல்முனைக்குடி, கல்முனை-04.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பேனா நண்பர் தொடர்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

வாசக நேயர்களுக்கு உள்ளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்... இந்த முறை தனிப்பட்ட வாழ்த்துக்கள் இல்லை. அதற்குப் பதில் கன்னத்தைக் காட்டுங்கள்.... இச்....இச்...போதுமா?

சிறுகதை

# ஒரு பழைய பனையும் புதிய பொங்கலும்!



எம். சுரேஷ்

சோதிநாதருக்கு மூச்சு வாங்கியது. முழங்கால்வரை ஓடிக்கொண்டிருக்கும் இலுப்பைக் குளத்து நீருக்குள் காலை இழுத்து, இழுத்து முன்னேறிக் கொண்டிருந்தார். அந்த 70 வயது உடல் இப்போது சிரமப்படுவதற்கு சிரமப்பட்டது!

"அவங்கள் வானத்தால கொட்டுறது போதாதெண்டு, மழையுமெல்லே இப்பிடிக் கொட்டுது" முணுமுணுத்தார்.

மேட்டு நிலத்தில் கிடுகால் வேயப்பட்டிருந்த ஓலைக்கொட்டில் காற்றினாலும், மழையினாலும் அலங்கோலமாகி ஒரு கற்பழிக்கப்பட்ட பெண்ணைப்போல்....

நீருக்குள் இருந்து விடுபட்ட சோதிநாதர் தன் நீண்ட குடுமியை அவிழ்த்து ஒரு உதறு உதறிக்கொண்டார்.

"சேச்சே! இந்த முறை மாரி சீரழிச்சுப் போட்டுது... முருங்கைக்காய் கூட 100 ரூபாவுக்கு மேல விக்குதெண்டால் பாருங்கோவன்" கையில் வைத்திருந்த வெற்றுப் பையை முற்றத்தில் எறிந்தார்.

"இந்த லட்சணத்தில பொங்கல் சாமான் வாங்கி பொங்கியும் யாருக்கு? நான் மட்டும்தான் தின்ன வேணும்" லேசாய் கண்ணுக்குள் ஈரம்!

கொல்லைப் புறமாக தெற்கே கிணற்றடியில் தனியாய் நிற்கும் அந்த ஒற்றைப் பனைமரத்தை அண்ணாந்து பார்த்தார். பெருமூச்சு விட்டார்.

•••

எனக்குக் கொஞ்சம் தொடவேணும் போல கிடக்கிது.

"சரி தொடுங்கோவன்."

"நீ கொப்பருக்குச் சொன்னால்....?"

"சொல்லமாட்டன்."

"சேச்சே! வேண்டாம்! எதுக்கு வீண் வம்பு."

"ம்... சும்மா வாய்ப்பேச்சு மாத்திரம் தான். நான் ஒரு ஆம்பிளையா இருந்தால் இந்த நேரம் அப்பிடியே கட்டிப்பிடிச்சு....."

"சரி நான் என்ன செய்யோணும்?"

"நீங்கள்தானே 'அதுக்கு' ஆசைப்பட்டனீங்கள்?"

"அப்ப தொடட்டே?"

"ம்...(அவன் தொட்டான். அவள் நெளிந்தாள்)

"என்ன குளிருது?"

"குளிச்சுக்கொண்டு நிக்கேக்கை தொட்டாக் குளிரத்தானே செய்யும்?"

"அப்ப இது?"

"தொட்டுத்தான் பாருங்கோவன்."

அந்தக் கிராமத்து ரோஜாவின் சின்ன இதழைத் தொட்டான். அவளும் இசைந்து கொடுத்தாள்- எல்லை தாண்டமாட்டான் என்ற நம்பிக்கையில்! ஆனால் திடீரென்று இதழ், இதழுக்குள் காணாமல் போனது. அவள் அவனை விடுவித்துக்கொண்டு அந்த ஒற்றைப் பனைக்குப் பின்னால் ஒதுங்க, அங்கேதான் முதல் அனுபவம்... அனுபவங்கள்!

•••

என்னதான் பேசிவைத்த பெண்ணாக இருந்தாலும் திருமணத்திற்கு முன் திருட்டுத்தனமாய் சந்திக்கும் போது ஏற்படும் சின்னச்சின்ன உரசல்களின் சுவையே அலாதியானதுதான்...(இந்த 70 வயதிலும் பழைய நினைவுகள் இன்னும் பசுமையாய் சோதிநாதருக்குள் வட்டமடித்தன.)

திருமணம் முடித்த வருடத்தில் இருந்து, ஒவ்வொரு வருடமும் இந்த ஒற்றைப் பனையடியில்தான் பொங்கல் பொங்கி முழுக் குடும்பமும் குதூகலிக்கும்.

பின்பு, குழந்தைகளும் ஒவ்வொன்றாய் பிறந்து, வளர்ந்து, பெரியவர்களாகி... நாட்டுக்காகவும், குண்டடிக்காகவும் ஒன்றிரண்டு உயிரைவிட, மற்றதுகள் கலியாணம் கட்டி கொழும்புக்கும், சுவிசுக்கும், கனடாவுக்கும் போக கடைசியில் சோதிநாதருக்கு மிஞ்சியது அந்த பழைய மனைவியும், பனையும்தான். மற்றப்படி அதிக மாற்றமில்லை.

ஆனால் அண்மையில் விழுந்த "குறி தவறாத" குண்டொன்று கல்வீட்டை ஓலைக்குடிசையாய் மாற்றி, சோதிநாதரின் மனைவியை இல்லாமலாக்கி அவரைத் தனியாய் வாழவைத்தது.

"பிள்ளைகளைக் குறைகூற முடியாது. வஞ்சகமில்லாமல் காசனுப்புதுகள்.... ஆனால் அந்தக் காசை வைச்சு என்ன செய்யிறது?"

'ம்...அதுகளுக்கும் இங்க வந்து வாழ முடியாது. எனக்கும் இந்தக் கிராமத்தை, வீட்டை, இந்த ஒற்றைப் பனையை விட்டுப் போகமுடியாது. எல்லாம் விதிப்படி தான்......'

பனையை அண்ணாந்து பார்த்தார். வீட்டில் விழுந்த குண்டு அதன் தலைப்பகுதியையும் தாக்கிச் சேதப்படுத்தியிருக்கிறது.

"எனக்குத் தெரியும். நான் கண்ணை மூடுமட்டும் இந்தப் பனை என்னைக் கைவிடாது...நான் உயிரை இழுத்துக் கொண்டு இருக்கிறமாதிரி இதுவும் இன்னும் கொஞ்ச வருஷம் உயிர்வாழ வேண்டும்." சம்மந்தா சம்மந்தமில்லாமல் ஏதேதோ பேசினார், சிரித்தார். தலையாட்டிக் கொண்டார் (இப்போது பல வயதான தமிழர்களின் வாழ்க்கை இப்படித்தான்)

பக்கத்துக் குடிசை முருகேசனின் மகள் தட்டில் கொஞ்சம் பொங்கல் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப்போனாள்.

"தாத்தா! ஒவ்வொரு முறையும் பொங்குவீங்கள். இந்தமுறை பொங்கேல்லையே?"

"பொங்குவன் பிள்ளை! கொஞ்சம் பிறகுவா உனக்கும் தாறன்."

"தாத்தா! எங்கட பொங்கலைச் சாப்பிட்டிட்டு பிறகு பொங்குங்கோ" மழை நீர் தெறிக்க துள்ளித்துள்ளி ஓடி மறைந்தாள்.

சோதிநாதர் சிரித்தார். தான் இதுவரை காணாத பேரப்பிள்ளைகளின் பெயர்களை உச்சரித்து, முகத்தைச் சுளித்தார்!

•••

சைக்கிள் மணியோசை. கடிதக்காரன்.

"பெரியவர் காசு வந்திருக்கு"

"எவ்வளவு தம்பி?"

"5000/= ரூபா."

"தம்பி கோவிக்காமல் இந்தக் கடிதத்தையும் ஒருக்கால் வாசிச்சிச் சொல்லு." (சொன்னான்)

அன்பின் ஐயா!

நாங்கள் நலம்! இத்துடன் 5000/= பணம் அனுப்பியிருக்கிறோம். பொங்கல் செலவுக்கு வைச்சுக்கொள்ளுங்கோ....

"போதும்....போதும் தம்பி" (கடிதத்தை வாங்கிக்கொண்டார்)

"நீ கலியாணம் கட்டிப்போட்டியே?"

"ஓம் பெரியவர்."

"எத்தினை பிள்ளையள்?"

"மூண்டு பெடியனும், ரெண்டு பெட்டையளும்"

"பெஞ்சாதி?"

"அவளும் வீட்டோடதான்."

"அப்ப இந்தா இதை பொங்கல் செலவுக்கு வைச்சுக்கொள்." (மடிக்குள் சுருட்டி வைத்திருந்த கசங்கிய 1000/= தாளை நீட்ட கடிதக்காரன் ஆச்சரியப்பட்டு போனான்)

"பெரியவர்! இது 1000/= ரூபாத்தாள். தெரியுதோ?"

"நல்லாத் தெரியுது. தெரிஞ்சுதான் தாறன். ஆனால் ஒண்டு தம்பி... உன்ர பிள்ளைகள் பெரியவையாகி வெளிநாடு தேசமெண்டு போகேக்கை நீயும் உன்ர பெண்டிலையும் கூட்டிக்கொண்டு போயிடோணும். என்ன? வயசான காலத்தில தனியா இருக்கமட்டும் நினைச்சுப் போடாதே......."

சோதிநாதர் அனுபவத்தில் சொன்னவை கடிதக்காரனுக்குப் புரியவில்லை. ஆனால் 1000/= கிடைத்த திருப்தியில் சோதிநாதர் சொன்னதற்கெல்லாம் பெரிதாய் தலையாட்டிவிட்டுச் சென்றான்.

•••

இது நெருங்கிய சொந்தம். பெயர் கணபதி....சாடையாய் திரும்பியபோது சோதிநாதரைக் கண்டதும் சும்மா ஒரு பேச்சுக்கு ரெண்டு வார்த்தை....

"சோதி! இன்னும் பொங்கேல்லையே...."

"இனிமேத்தான்...."

"பொங்காட்டிச் சொல். பொங்கல், பலகாரங்கள் அனுப்பிவிடுறன்."

"வேண்டாம்! வேண்டாம்! கேட்டதே பெரிய சந்தோசமடா..."

சொந்த வயலில அறுவடை செஞ்ச நெல்லைக் குத்திப், புடைச்சு, புதுப்பானையில போட்டுப் பொங்கின பொங்கலுக்கும், கடை அரிசியை நெருப்பு விலை கொடுத்து வாங்கி ஏதோ கடமைக்குப் பொங்கிற (யாழ்ப்பாணத்துப்) பொங்கலுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை நினைத்துப் பார்த்தார். சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. சிரித்தார். முருகேசனின் மகள் கொண்டுவந்த பொங்கலைக் கொஞ்சம் கிள்ளி வாயில் போட்டார். இனித்தது, அந்த ஒற்றைப் பனையைப் போல்!

## வாலிபனை கடத்தியவள்

இந்தியாவிலுள்ள திரிபுரா மாநிலத்தில் சன்தன்முரா என்னும் கிராமத்தில் வாழும் பெண் நமீதா தாசுக்கு அதே பகுதியைச் சேர்ந்த பிஜாய்தாஸ் என்ற வாலிபர் மீது தீராத காதல். ஆனால் பிஜாய்தாஸ் அவளைக் கண்டு கொள்ளவே இல்லை.

இதனால் ஆத்திரமடைந்த நமீதா தன் தோழிகளுடன் ஆலோசனை செய்தாள். முடிவில் பிஜாயைக் கடத்திச் சென்று திருமணம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இளைஞிகளின் திட்டப்படி ஒரு நாள் பிஜாயை அவர்கள் விரட்டிப் பிடித்துக் கடத்தினார்கள். பிறகு மிரட்டி நமீதா கழுத்தில் பிஜாயைத் தாலி கட்டவும் வைத்து விட்டனர்.



பிஜாய் குடும்பத்தினர் பொலிஸில் புகார் கொடுத்துப் பார்த்தனர். ஒன்றும் நடக்கவில்லை. இதற்கிடையே கடத்திச் செல்லப்பட்ட பிஜாய்தாசுக்கு நமிதா தாஸ் மீது அன்பு மலரத் தொடங்கிவிட்டது. தற்போது நமீதாவும், பிஜாயும் தனி வீட்டில் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்.

கடத்திச் செல்லப்பட்டு கடிமணம் புரியப்பட்ட பிஜாய் நடந்ததை மறந்துவிடுமாறு தன் பெற்றோருக்கு கூறிவிட்டார்.

சின்னஞ் சிறுகதை

## அண்ணா நீயும் நானுமா?



ஆக்குறணை ஷீரா அனஸ்

அன்பு என்பதை காதல் என்று மட்டுமே புரிந்து வைத்திருக்கும் மயக்கவாளர்களுக்கு ஒரு வித்தியாசமாக.....

அந்தப் பூந்தோட்டத்தில் யாருமே இல்லை; அவர்கள் இருவரைத் தவிர. அவர்களிருவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்களுமல்ல.... ஆனால் உயிருக்குயிரானவர்கள்; இதயங்களால் பிணைந்தவர்கள். பிரிக்கவே முடியாதவர்கள்.

"அண்ணா?"

" என்ன மேரி"

"அண்ணா எங்களுடைய உறவு எவ்வளவு புனிதமானது."

"ஏன் மேரி இதிலென்ன சந்தேகமம்மா உனக்கு."

"அண்ணா இதுவரையில் இப்படி இனங்கள் மாறியதொரு அன்புப் பரிமாற்றம் எங்களைப் போல் நிகழ்ந்திருக்குமா என நினைத்துப் பார்க்கிறேன்."

"மேரி நீ என் தங்கையம்மா- உன் அன்புக்குப் பாத்திரமான அண்ணன் நான்."

"அனஸண்ணா இந்த மதம் மாறிய பிணைப்பை...அதுவும் இந்த இதயங்கள் இணைந்த பாசத்தை எண்ணி நான் எத்தனை தடவைகள் கண்ணீர் விட்டிருப்பேன் தெரியுமா?"

"மேரி இன்ப துன்பத்தில் இணைவது தானம்மா உண்மை அன்பு."

"அண்ணா நீங்கள் கவலைப்பட்டால் நான் என்னவாய்த் துடித்துப் போகிறேன் தெரியுமா? அனஸண்ணா உங்கள் மடியில் தலைவைத்திருக்கும் போதுதானே நான் கொஞ்சமாவது சந்தோஷித்திருப்பது."

"மேரி இந்த எங்கள் உறவு காலா காலமாக நீடிக்க வேண்டும் மட்டுமில்லை தங்கச்சி... எங்கள் பிள்ளைகளும் இணைய வேண்டும் ஒரே குடும்பமாக.."

இதனை எண்ணும் போது நிறைவேறுமா என நினைக்கையிலே மேரியின் இதயம் அடைந்து விட்டது. கண்கள் முட்ட கண்ணீர் நிறைந்து போனது.

"மேரி என்னம்மா, இது? ஏன் உன் கண்களில் கண்ணீர்? பிளீஸ் உனக்கு எத்தனை தடவையம்மா சொல்றது என்னோடு இருக்கும் போது அழக்கூடாது என்று."

"இல்லையண்ணா... எங்கள் மதம் எங்களைப் பிரித்து விடுமோ... அல்லது எங்களை எங்கள் வீட்டுக்காரர்கள் பிரித்து விடுவார்களோ என பயமாய் இருக்கிறது."

"மேரியே! பிளீஸ் சும்மா கற்பனையெல்லாவற்றையும் அள்ளிக்கட்டிக் கொண்டு அழாதேயம்மா....."

"அனஸண்ணா- இப்ப நான் இருக்கிற நிலமையிலை எனக்குத் துணை நீங்கள் மட்டும் தானண்ணா! எனக்கு ஆறுதல் நீங்கள் மட்டும் தானண்ணா!"

ஒரு கொடி தனக்காய் விரிக்கும் கொழு கொம்பை இறுக்கமாகப் பற்றிக் கொள்கிறது. கொடி மென்மையானது. அதனை கொழு கொம்பிலிருந்து கழற்றி பிரித்து எடுக்கும் போது அது கசங்கி வாடி... சோபையிழந்து விடுகிறது. ஒரு பெண்ணும் கொடியைப் போன்றவள். மென்மையானவள்.

மற்றுமொரு வேளை.

"அண்ணா! அண்ணா!..." என விக்கி விக்கி அழுத மேரியைத் தேற்ற முடியாமல் தவித்தான் அனஸ்.

அனஸின் மடியில் முகம் புதைத்தபடி இருந்தாள் மேரி.

"அண்ணா என்னைக் கொஞ்சம் உங்கள் மடியில் அழவிடுங்கோ அண்ணா."

"என்னம்மா உனக்கு என்னம்மா நடந்தது...? சொல்லு செல்வமே உனக்கு என்னம்மா நடந்தது?"

"அண்ணா எங்கடை... அக்...கா உங்...க...ளோடை பழ..கி...றதை விட்டிடட்டாம்."

மீண்டும் கேவி அழுதாள் அந்தத் தங்கை. ஆறாத் துயரில்.

"ஏனம்மா இப்பிடித் திடீரென்று."

"அண்ணா அக்காவுக்கு உங்களிலை நம்பிக்கையில்லையாம். என்னிலையும் நம்பிக்கையில்லையாம். நான் என்ன சொன்னாலும் நம்புறா இல்லை."

"அப்ப என்னம்மா செய்யுறது?"

"அதுதானண்ணா எனக்கு என்ன செய்யுறதென்று விளங்கேல்லை.

"பேசாம எங்கையாவது போய் நஞ்சைக் குடிச்சு..."

"ஏய் என்னம்மா சொல்லுறாய்.."

"கொஞ்சமிரு அண்ணா யோசிச்சு ஒரு முடிவு சொல்றன்."

"உண்மையாய் இந்த உலகம் இருண்டுபோனதம்மா.. அதன் இருண்ட கண்களுக்குத் தெரியுறது வெறும் கபாலம் மட்டும்தானம்மா... சத்தியமாய் உன்னதும் என்னதும் புனிதமான அன்பைப் பிரிச்ச தாலை ஒண்டுமில்லை. அதனாலை யாரும் சந்தோஷம் ஆகுறதுமில்லை. அதுக்காக..."

"என்னண்ணா அதுக்காக.."

"மேரி..என் செல்வமே...இந்த உலகத்திலை ஒரு ஆணும் பெண்ணும் பழகினா ஒண்டில் காதலர்கள். இல்லாட்டி கயவர்கள். இந்தச் சித்தாந்தம் இருக்கிற வரைக்கும் எங்களைப்போல புனிதமான பாசங்களுக்குக் கூட உயிர்ப்பில்லையம்மா."

"அண்ணா நீங்க என்னண்ணா சொல்லுறீங்க?" அழுது வீங்கிய அவளின் கண்கள் இன்னும் சிவந்திருந்தன.

"மேரி! உன்னைப் பிரிஞ்சு என்னாலை உயிர் வாழ ஏலாது. ஆனா அதுக்காக உன்னையும் என்னையும் பற்றி தப்பாக் கதைக்கிறவங்களை அல்லது நினைக்கிறவங்களை எங்களால நிப்பாட்டவும் முடியாது.

"அண்ணா ஒரு ஆணும் பெண்ணும் பழகினா- அல்லது ஒற்றுமையான கருத்துக்களோடை உறவாடினா அது என்னண்ணா மோகமா?"

"அப்படி எண்டுதானம்மா இந்த உலகம் எடை போடுது."

"அதை மாத்தவே முடியாதாண்ணா?"

"உலகம் எண்டு சொல்ற ஒண்டிலை மனிசர் எண்டு சொல்ற ஜடங்கள் இருக்கும் வரைக்கும் சந்தேகம் என்ற பிராணி தன்ரை கோரமான வாயை அகலப் பிளந்து கொண்டுதான் சீவிக்கும். அதுக்கு கண்ணில்லையம்மா...குருட்டு ஜீவியந்தான்."

"அண்ணா-நிஜங்கள் எண்டைக்கும் ஜீவனுள்ளது."

"சத்தியமாம்மா- உன்ரை வாழ்வுக்காக.. உன்ரை நலனுக்காக உன்ரை எதிர்காலத்திற்காக..இந்த அண்ணா-தற்காலிகமாக.."

பிரியுறன்...என்று சொல்லவே அவனால் முடியவில்லை.

ஆனால் பிரிந்து போனார்கள்.

அந்த ஆருயிர்த் தங்கைக்காக... அந்த அண்ணன் புனிதமான அன்பையே பிரிவாய் வரித்துக் கொண்டான். இந்த இளமை மட்டும்தானா அந்தப் புனிதங்களைப் பிரித்தது....? அப்படியானாலும் இதயம் இளைப்பாறுவதில்லையே. அதற்குவயதாவதில்லையே... என்றோ ஒரு நாள்.....அது காலங்களின் தீர்மானத்தின்படி. இந்தச் சமுதாய ஒரு தலைமுறையாவது அழிந்ததன் பின்னாலாவது இணைந்து கொள்ளட்டும்.

ஆம்! ஒரு முறை அனஸண்ணா "தங்கச்சி உனக்கு எண்பது வயதானாலும் நீ எனக்குக் குழந்தை. எனக்கு எண்பது வயதானாலும் நான் உனக்குக் குழந்தை தானம்மா" என்று சொன்னது- மேரியின் காதுகளில் புண்ய வார்த்தையாய் புரண்டு கொண்டிருக்கிறது.

காலமே விரைந்து போ!
அவர்களை மூப்படைய வை!
சமுதாயத்திற்கு அப்பால் நின்றாவது அவர்கள்
சேர்ந்து கொள்ளவிடு!

என்பதாய் பிரார்த்தனை செய்யலாம் போல இருக்கிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# திருந்தியது ஏன்?

அலுவலகத்திலிருந்து சற்றுமுன்னதாகவே கிளம்பி 'வசிவிட' அறைக்கு வந்து குளித்துவிட்டுக் காத்திருந்தேன் கனகரின் வருகைக்கு; இன்றும் ஏதேனும் குறும்புச் செய்தியொன்று கொண்டு வருவாரென்று.

காத்திருந்தது வீண் போகவில்லை.

அலுத்துக்கொண்டே அறைக்குள் புகுந்தார் கனகர் (கனகநாயகம்).

அவர் அலுத்துக்கொண்டால் எண்ண வேண்டியதுதான் இன்றும், கிஷான் ஏதாவது குளறுபடி செய்திருப்பானென்று.

கனகரும் நானும் தொழில் நிமித்தமாக வெளியூர் வந்து ஓர் அறையில் வசிக்கும் நண்பர்கள். கனகர் என்னைவிட ஐந்து வருடங்கள் மூத்தவர். இங்கு உயர்தரப் பாடசாலையொன்றில் ஆசிரியராக இருக்க நான் தனியார் நிறுவனமொன்றில் தஞ்சம். நண்பராயினும், மூத்தவராதலால் அவரை 'அண்ண' என்றழைப்பது என் வழக்கம்.

அறையில் ஓய்வு நேர சம்பாஷனையில் கல்லூரி அதிகம் அடிபடுவது வழமையாகி விட்டது. அதற்குக் காரணம், 'கிஷான்.' கல்லூரியில் கிஷான் பெயர் சொன்னால் போதும், அதிபரிலிருந்து சிறுபிள்ளைவரை ஒரே கிலிதான். பயத்திற்குக் காரணம் வன்முறையல்ல. மாறாக குறும்புத்தனம். அவன் செய்யும் குறும்பிற்கு அளவே கிடையாது. வயது வரம்பு கிடையாது. ஏன் ஆண் பெண் வேறுபாடே கிடையாது. ஒவ்வொருவரும் கதிரையில் உட்காரும் போது கூட ஒரு முறை நன்றாக கதிரையை பார்த்துக்கொள்வார்கள். தவறின் கிஷானின் விஷமம் அவர்களைப் பதம் பார்த்துவிடும். புத்தகங்கள் கூட அவரவரிடம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால்,.....

வகுப்பில் விஞ்ஞான பாடத்திற்கு வந்த ஆசிரியை மேசையில் புத்தகத்தை வைத்துவிட்டு அவசர வேலையாய் வெளியே போக புத்தகத்தில் இவன் தன் கைவரிசையைக் காட்டிவிட, வந்து புத்தகத்தை திறந்த ஆசிரியைக்கு கோபத்தில் முகம் சிவந்து போனது. காரணம் புத்தகத்திலிருந்த மனித உடல் படத்திற்கு ஆண், பெண் அங்கங்களை தத்ரூபமாக வரைந்து விட்டிருந்தான். ஆசிரியை புத்தகத்தை தூக்கிக்கொண்டு அதிபர் அறைக்கு விரைய, வகுப்பில் அவனைச் சொல்லிக் கொடுக்கப் பயந்து அன்று பூராக அவனுடன் அவன் வகுப்பும் வெய்யிலில்.

இவையெல்லாம் கனகரின் வாயால் அலுத்துக்கொண்டே வரும் விடயங்கள். ஆனால் இவை எனக்கு மிகச் சுவாரஸ்யமாக இருக்கும். (இக்காலத்தில் வெளியில் இறங்குவதைவிட அறைக்குள்ளிருந்து இப்படி விஷயங்களை அளவளாவுவதே மேல். ஓ..., அறைக்குள்ளிருந்தாலும் நடுராத்திரியில் ஆபத்து என்கிறீர்களோ? அதுவும் சரிதான்– (வேட்டி கொய்த ஞாபகம் வந்தது)

கிஷானின் குறும்பு ஆட்கொள்ளாத ஒரேயொரு நபர் கனகர்தான். காரணம் அவரது அணுகுமுறை. இன்றைய இளைய தலைமுறையின் குணங்களையும், எதிர்பார்ப்புக்களையும் அறிந்து வைத்து அதற்கேற்ப காய்களை நகர்த்தும் திறமை அவருக்கு. இதனால் அதிபர், ஆசிரியரிலிருந்து மாணவர் வரை அவருக்கொரு நல்ல பெயர். கிஷானும் அவருக்குக் கட்டுப்பட்டவன். இதனால் கிஷானின் குறும்புகளின் புகார்கள் யாவும் கனகரிடம்தான். விளைவு, அவன் தொல்லை பொறுக்காது தினமும் அலுத்துக்கொண்டே வருவது கனகரின் இயல்பாகி விட்டது. அன்றும் வழமை போலவே,

"இவன் தொல்லைய என்னண்டுதான் அடக்குறதோ தெரியல"

"ஏன், இண்டைக்கு என்ன நடந்தது?"

"ம்.... அதையேன் கேட்கிறாய், தில்லை மாஸ்ரர் பாடம் எடுத்துக் கொண்டிருக்க கிஷானுக்கு பக்கத்தில் இருந்த ஜுனைதீன் நித்திரை தூங்கியிருக்கான். இதக் கண்ட மாஸ்ரர் ஜுனைதீனிடம் பாடசம்பந்தமா ஒரு கேள்வியைக் கேட்க, நித்திரையால திடுக்கிட்டு எழும்பின ஜுனைதீனுக்கு கேள்வி விளங்காம முழிக்க, இவன் மெதுவா அவனைச் சுரண்டி "மீன்குழம்பு" என்று சொல்ல ஜுனைதீனும் பெரிய சத்தமாய் அதுதான் விடையெண்டு நினைச்சு 'மீன்குழம்பு' என்று சொல்ல,..... பிறகேன் கேட்க, பிரச்சனை கடைசியா என்னிடம் வந்துதான் நிண்டுது" ஒரே மூச்சாய் சொல்லிவிட்டு குளிக்கப் போக, நான் சிரிக்க முடியாது சிரித்து வயிற்றுத் தசை வலியெடுத்துப் போனது.

இக்குறும்புக்கார கிஷானைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை என்னுள் துளிர் விட்டது. அதுவும் அன்றே நிறைவேறியது. கனகரைச் சந்திக்க கிஷான் அறைக்கு வந்திருந்தான். பாடசம்பந்தமாய் ஏதோ பேசிவிட்டுப்போனான்.

சில நாட்கள் கழிந்திருக்கும்.



அன்று ஊருக்குப் போவோமென்று (நேற்றுத்தான் 'றவுண்டப்' முடிஞ்சுதாம்) அவசரமாய் புறப்பட்டுக்கொண்டிருக்க, கனகர் வேலை முடிந்து வந்தார்.

வழமையாகவே அலுத்துக்கொண்டு வரும் கனகர் அன்று அப்படி வராதது ஆச்சரியமாக இருந்தது. அவரது முகத்தைப் பார்த்தேன். ஒரு நிம்மதி தெரிந்தாலும், அகத்திலிருந்த ஒரு சோகம் முகத்தில் தெரிந்தது. ஆனால் இதனைக் கேட்குமளவிற்கு எனக்கு நேரம் கிடைக்கவில்லை. அவரிடம் சொல்லிக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டுப்போனேன். (செக் பொயின்ருகளை' எண்ண விரல்கள் போதவில்லை)

இரு நாட்கள் கழித்து ஊரிலிருந்து வந்த போது, கனகர் அறையிலேயே இருந்தார்.

விடுமுறைநாள். அறையிலிருந்து வெளியிறங்கவில்லைப் போலும்.

"என்னண்ண, வெளியில எங்கயும் போகல்லயா?"

"எங்க போறது? வெளியில இறங்கவே பயமாக் கிடக்குது."

"அதுவும் சரிதான். பிறகு கிஷானுடைய பாடு எப்படியண்ண?"

"அதையேன் கேட்கிறாய், இப்ப அவன் பழைய அடாவடித்தனமெல்லாம் பண்ணுறதில்லை. யாரைக் கண்டாலும் மரியாதை, தானும் தன்னுடைய பாடும். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். கவலையும் கூட. அவனுடைய குறும்புத்தனத்தில் இருந்து பழகிய பிறகு, இப்ப ஒன்றுமில்ல என்றவுடன் எங்களுக்கே ஒரு மாதிரியா இருக்கு. இப்ப எல்லோருக்கும், நிம்மதிதான் என்றாலும் இந்த திடீர் மாற்றத்திற்கு காரணம் மட்டும் ஒருத்தருக்கும் புரியல்ல."

"என்னது கிஷான் திருந்திட்டானா?" திருந்திய அவனது முழு உருவத்தையும் கண்முன் நிறுத்தினேன். வெகு ஆச்சரியமாயிருந்தது. காரணத்தைத் தேடி மனம் பரபரத்தது. கனகருக்கே தெரியல்ல, பிறகென்ன. பெருமூச்சோடு எழுந்தேன். இருந்த ஒரு சுவாரஸ்யமும் போய்விட்டது.

மாலை 'காற்று'வாங்க கடற்கரைக்குப் போவோமென்று புறப்பட்டேன். (நகர ஒற்றனுடைய பாதிப்பு எனக்குள். குடைகளினுள் நடைபெறும்" அளவளாவல்கள், உண்மையில் வெகு சுவாரஸ்யம்தான்)

"அண்ண' பீச்சுக்குப்' போவோம் வாறீங்களா?"

"எனக்கு ஏலாது, நீ போய்ட்டு வா" வழியனுப்பினார்.

திரும்பி வர வேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக் கொண்டு புறப்பட்டேன்.

கடற்கரையில் சுவாரஸ்யமான கூட்டங்கள், ஜோடிகள். ஓரிடத்தில் அமர்ந்தேன்.

அருகே ஒரு குடை ஜோடி. உள்ளிருந்த உரையாடல் என் காதுவரைக்கும் வந்தது. வந்த குரலிலொன்று எங்கேயோ கேட்ட குரல்.

சம்பாஷனையை உற்றுக் கவனித்த போது ஒரு முடிச்சு அவிழ்ந்து கொண்டிருந்தது. ஆம், அக்குரல் வேறு யாருடையதுமல்ல, கிஷானுடையதே.

கிஷான் திருந்தியதன் காரணம் பிடிபட்டது.

'கிஷான் காதலிக்கின்றான்'

எவராலும் சாதிக்க முடியாததை 'காதல்' எனும் பந்தத்தால் ஒரு பெண் சாதித்தது ஆச்சரியமாகவிருந்தது.

காரணம் கண்டுகொண்ட திருப்தியில், தூரத்தில் காக்கி உடை வருவதைக் கண்டு எழுந்து கொண்டேன் நான்.

—வாழையூர் ஸ்ரீ வரணி

---

# த னி ம ர ம்


—ஷர்மிளா இஸ்மாயில்

"ஷகி....அங்கே பார்." எங்கேயோ படர்ந்திருந்த என் பார்வையைத் திருப்புகிறேன். பசேலென்ற இயற்கையின் செழுமை. மரங்கள். பூக்கள். "என்னடி.. என்ன?" புரியாமல் வினவ, அவள் சுட்டு விரலை நீட்டி தூரத்தே தெரிந்த அதைக் காட்டினாள். "அங்கே பாருடி."

"ஆ...." வாய் பிளந்து பார்த்தேன். "எல்லா மரங்களிலும் இருக்கும் ஒன்று உன்னிடம் இல்லையே..." அவள் பாடிச் சிரித்தாள். "பார்த்தியா...இந்த மொட்டை மரத்தை:..ஒரு இலை கூட இல்லை." அவள் கூற "பாவம்டி...இந்த தோப்புல ஒரு வித்தியாசமான தனிமரம். அதுவும் எவ்வளவு பெரிய மரம். செத்துப் போச்சுது போல. இன்னம் தறிக்காமல் விட்டு விட்டாங்களே..." இது நான்.

"கலையம்சம் கொண்ட கண்களுக்கும் உள்ளங்களுக்கும் ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தும் விதமாய்– அத்தனை இலைகளையும் உதிர்த்து... பரிதாபமாய், ஆனாலும் ஒரு கம்பீரமாய் கிளைகளைப் பிரப்பி.... "நண்பிக்கொரு ஆசை. என்ன தெரியுமா?" என்னவென்று நான் கேட்கவில்லை. மரத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவளே தொடர்ந்தாள். "அந்த தனி மரத்தினடியில் நின்று ஒரு படம் எடுக்கணும்."

"பூ...இதுதானா.." கேலி செய்தேன். "என் ஆசை என்ன தெரியுமா? அந்த மரத்தைக் கட்டிப்பிடித்து ஒரு முத்தம் கொடுக்கணும்." என்னைப் பார்த்த நண்பியின் முகத்தில் குறும்பு தெரிந்தது. "ஏய்..அது ஒரு மரம். நெனப்புல வைச்சுக்க. அது வேட்டி கட்டியோ, ட்ரவுஸர் உடுத்தியோ இல்லையே." பக்கென சிரிப்பு வந்தது. "அதுக்கில்லேடி... 'அப்பவாவது அது துளிர் விடுதான்னு பார்க்கலாமேன்னு...." -ம்ஹூம்- அது இயலாதுடி. ஆயுள் முடிஞ்சாப்புறம் மனிதர்களே இல்லை. இந்த மரங்கள் எம்மாத்திரம்?" நண்பி தத்துவம் பேச... நான் பேச.. மௌனமாய் எங்களையே தொலைவிலிருந்து உறுத்துப் பார்த்தபடி அந்த மரம், யாருமே அதனை அண்ட முடியாதவாறு பெரிய பள்ளத்தில் வேரூன்றி நின்றது.



•

'அத் இன்னமும் நிற்கிறதா...இல்லை வெட்டி விட்டார்களா..?'

பஸ்ஸின் ஓட்டத்துடனேயே கடந்த காலமும் சுழன்று சுழன்று நினைவலைகளாய்த் திரண்டு.... நிறுத்தம் வரவும் இறங்கிக்கொண்டேன்.

ஓடி வந்து கட்டிக்கொண்டாள் நண்பி. இன்னும் அப்படியே மெலிவாய்....அழகாய் கலகலவென்று...ஓ...நான் தான் அடங்கிப் போய்...அழுகை என்னுள் அலைபாய அடக்கிக் கொண்டேன். ஐந்து வருடங்களாய் பிரிந்திருந்து மீண்டும் சந்திக்கிறோம்: அவளுடன் ஈடுகொடுத்து கதைக்க என்னால் இயலவில்லை. என்னயறியாமலே ஒரு தயக்கம். ஏதோவொன்று தொண்டையை அழுத்தும்.

"எங்கேயடி உன் ஹஸ்பன்ட்? பிள்ளைகள் எத்தனை..? ஒரு டசினா...? இல்லை நாமிருவர் நமக்கிருவர் பொலிஸியா? நீ மெரி பண்ணி போனது தான் போனே... ஒரேடியா என்ன மறந்திட்டியே... லெட்டர் கூட போடல. எப்படி இனி உன் வெளிநாட்டு வாழ்க்கை...? அவரு ஏன் வரல? நீமட்டும் தான் சிலோன் வந்தியா? நல்ல வேளை மறக்காம என்ன பார்க்க வந்தியே... இது போதும்..." அவள் கேள்விகளை அடுக்கடுக்காய் அடுக்கிவிட தடுமாறிப் போனேன். வாய்க்கு வந்த வார்த்தைகளால் சமாளிக்கவும் மனசுக்குள் ஒரே வேதனை அலைகள். "இவளுக்கென்ன தெரியும்? என் வேதனைய கிளறிவிட்டாளே..." மனசு ஆர்ப்பரித்தது. முகத்தில் வேதனைச் சுவடுகள். மறைக்க முயன்றேன்.

"வீட்டுக்குள்ள சரியான உஷ்ணம்டி. வா வெளியில. காலாற நடந்துட்டு வரலாம்." நான் அழைத்தபடி நடக்க அவள் தொடர்ந்தாள். என் மௌனம் ஏதோ அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும். "ஷகி...எ..என்னம்மா இது...? ஏதோ நீ.... நீ.... என்கிட்ட எதையோ மறைக்கிற மாதிரி ஒரு ஃபீலிங்..."

மெதுவாக என் கைகளைப் பிடித்து முகத்தை உறுத்துப் பார்த்தாள். "ஹ...ம்" பெருமூச்சு என் அனுமதியில்லாது வெளிவந்தது. "எவ்ரி திங் இஸ் ஃபினிஷ்ட் நிரோ... இனி சொல்வதற்கு எதுவுமில்ல..." கரகரப்பான தொண்டையில் வார்த்தைகள் குளற தொடர்ந்தேன்.... எல்லாம் முடிஞ்சுது கண்ணம்மா... இப்போ அவர் வேற. நான் வேற... என் கல்யாணம் ஒரு கனவு. குடும்ப வாழ்க்கை ஒரு கனவு. எல்லாமே பாலை நிலத்துல வெதச்ச விதை மாதிரி.... செத்துப் போன கனவுகள்."–நண்பி தடுமாறிப் போனாள். "எ...என்னடி சொல்கிறாய் நீ?"

"ஆமாடி...வெளிநாட்டு கணவர்... சொகுசான வாழ்க்கைன்னு நம்பி ஏமாந்துட்டேன். எல்லாம் இருக்கு. ஆனா அவர்கிட்ட நான் எதிர்பார்த்த நம்பிக்கை, நேர்மை, அன்பு இல்லாமப் போச்சுடி. என் இரசனைகள், எதிர்பார்ப்புக்கள்.... எல்லாத்துக்கும் நேர்மாறா அவரு. கூடாத சகவாசம். வாழ்க்கை முறையின் பழக்கங்கள் வித்தியாசம்... எல்லாத்துக்கும் மேலா..."

"மேலா?"

என்னைத்தவிர அவரோட வாழ்க்கையில இன்னும் பல பெண்கள்!.." முகம் இறுக அவள் வெறித்தாள்.

"அந்த வாழ்க்கை எனக்கு வேண்டாம்டி. முடிவா.. இப்போ நான் தனியா...நான் மட்டும்".... நிறுத்திய என் கண்களில் அந்த மரம் தென்பட்டது. "ஓ.. இன்னும் தறிக்கவில்லையா?... அதோ... அந்த மரம்...அதைப் போலவே நானும்... இப்போ..." முடித்த போது நண்பி கண்ணீரில் சங்கமித்திருந்தாள். நான் மரத்தை பார்த்திருந்தேன்.

(கற்பனை)

---



# கத்தரித்த கடி ஜோக்ஸ்

- 'கதையைப் படிச்சு முடிச்சதும் இஞ்சி சாப்பிடவும்' என்று எழுதியிருக்கீங்களே எதுக்கு?
- கதையின் முடிவு ஜீரணிக்கக் கூடியதாக இல்லை என்று ஒருத்தரும் தப்பு சொல்லக் கூடாது பாருங்க.

□□□

**டாக்டர்:** எவ்வளவு நாளா வயிற்றெரிச்சல் இருக்கு?
**பெண்:** பக்கத்து வீட்டுக்காரி ஃப்ரிட்ஜ் வாங்கின நாளில இருந்து டாக்டர்.

□□□

**பிச்சைக்காரன்:** அம்மா மகாராசி இந்த தெருவில் ஒங்க அழகை 'பீட்' அடிக்க எவளும் இல்லை தாயி.
**வீட்டுக்காரப்பெண்:** ஏம்பா பெரிய பாத்திரமாக் கொண்டாரக் கூடாதா?

□□□

**ஒருவன்:** ஏண்டா உங்க வீட்டு நம்பரை தலைகீழா எழுதியிருக்கீங்க?
**மற்றவன்:** ராத்திரியில எங்கப்பா எப்பொழுதும் குடிச்சிட்டு போதையில தலைகீழாத்தான் நடந்து வருவாரு. அவருக்காகத் தான் இந்த ஏற்பாடு.


□□□

**நீதிபதி:** நீ ஏன் அந்த வீட்டிலேயே அடிக்கடி திருடுற?
**திருடன்:** நான் அந்த வீட்டுக் குடும்பத் திருடன்.

□□□

**வந்தவர்:** டாக்டர் என் வாய்க்குள்ளே கரப்பான் பூச்சி போயிடுச்சு.
**டாக்டர்:** கொஞ்சம் வாயைத் திறங்க.
**வந்தவர்:** என்ன செய்யப் போறீங்க?
**டாக்டர்:** 'பேகோன் ஸ்பிரே' அடிச்சா சரியாயிடும்.

- நான் அந்தச் செருப்பை ரொம்ப நேரமா பார்த்து வைச்சிருக்கேன். நீங்க வேற ஒன்றைப் போட்டுக்குங்க ப்ளீஸ்.
- யோவ்.... என்ன கிண்டலா...? இது என்னோட செருப்புய்யா.



**டாக்டர்:** உங்க தொண்டையில கட்டி இருக்கு.
**நோயாளி:** அய்யய்யோ....சீக்கிரமா அவிழ்த்து விடுங்க டாக்டர்.

□□□

**நோயாளி:** பேசாம செத்துப் போயிடலாம் என்று தோன்றுகிறது டாக்டர்.
**டாக்டர்:** அப்போ என்னைக்கு ஒப்பரேசனை வச்சிக்கலாம்?

□□□

**சிறுவன்1:** நேற்று அந்தக் காகம் பெரிதாக இருந்தது. இன்று சின்னதாக இருக்கிறதே ஏன்?
**சிறுவன்2:** காக்கா கரையும் உனக்குத் தெரியாதா?

□□□

**ஆசிரியர்:** கம்சனை தந்தையார் எப்படி அழைப்பார்?
**மாணவன்:** Come son, Come son என்று.

□□□

**ஆசிரியர்:** ஷேக்ஸ்பியர் படிப்படியா மேலே வந்தார். இதில் இருந்து என்ன தெரிகிறது?
**மாணவன்:** அவர் காலத்தில் 'லிப்ட்' இல்லை என்று தெரிகிறது.

□□□

**நண்பர்:** என் அயல் வீட்டுக்காரர் எல்லாம் நேரப்படி நடப்பதைத்தான் விரும்புவார்.
**மற்றவர்:** அப்படியா?
**நண்பர்:** இரவு 12 மணிக்கு அலாம் வைத்து தூக்கம் விட்டு எழுந்து விடுவார்.
**மற்றவர்:** நேரப்படி நடப்பதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?
**நண்பர்:** காலண்டர் தேதியை கிழிக்கத்தான் 12 மணிக்கு எழுந்திருக்கிறார்.

□□□

**அவர்:** என்ன இது உங்க படுக்கை அறையிலே ஒஃபீஸ் மேசை. ஒஃபீஸ் கதிரை என்று எழுதிவைத்திருக்கிறீர்கள்?
**மற்றவர்:** அப்பதானே தூக்கமே வருகிறது.

□□□

## வாசகியின் அடி!

கருக்கலைப்புப் பற்றி ஒரு பத்திரிகை கட்டுரை வெளியிட்டது. உடனே ஒரு வாசகி கடிதம் எழுதியிருந்தார்.



"அன்புள்ள ஆசிரியரே! உங்கள் தாய்க்கு அப்படியொரு புத்தியிருந்திருந்தால் இப்படியொரு பத்திரிகை ஆசிரியரை நாம் சந்திக்க வேண்டி வந்திருக்காது."

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

தருவது ரசிகன்

# கோபமும் இன்பம்தான்



“கோபம்தான். பொல்லாத கோபம்.”

மாயாவின் தேன் குரலை கோபம் சூடேற்றியது.

“காரணத்தைச் சொல்லாமல் கோபப் பட்டால் என்ன அர்த்தம் மாயா? சொல்லிவிட்டு கோபப்படு மாயா!”

ரகுதேவ் கெஞ்சுவது போலப் பேசினான். கொஞ்சுவது போல மாயாவின் பட்டுக் கன்னத்தின் அருகே முகம் கொண்டு சென்றான்.

அவன் உதட்டிலே தன் உள்ளங் கையால் அழுத்தி பின்னாலே தள்ளிவிட்டாள் மாயா.

பட்டுக் கன்னங்களில் உதடுகளால் தொட்டுக் கொள்ள முடியவில்லையே என்று வருந்திக்கொண்டே ரகுதேவ் மேலும் குழைந்தான்.

“மஞ்சம் போல் என்னை தாங்கிக் கொள்ளும் நெஞ்சத்தில் இன்று வஞ்சம் வந்த மாயம் என்ன? இனியவளே! தென்றலை வீசும் உன் விழிகள் இன்று தீயை வீசும் மர்மம் என்ன?”

ரகுதேவ் கேட்டுக்கொண்டே இருந்தான். மாயா சந்திரனையும் பழிக்கும் தன் சித்திர முகத்தில் கோபச் சிவப்பை இன்னமும் குறைக்காமல் இருந்தாள்.

“வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சு வது போல, நொந்து போன என் நெஞ்சிலே உன் கோபம் தேளாகக் கொட்டுகிறதடி.”

“கொட்டட்டும். கொட்டட்டும். நன்றாகக் கொட்டட்டும்.”

மாயாவின் குரலில் கோபம் பாதி. கேலி பாதி.

“காயம் பெரிதாகிவிட்டால் பின்னர் சிகிச்சையும் பெரிதாகச் செய்ய வேண்டியிருக்கும்.”

“செய்யுங்கள். யார் தடுத்தார்களாம்?”

ரகுதேவ் குறும்பாய் சிரித்தான்.

“சிகிச்சை என்பது வைத்தியர் மூலம் செய்யப்படுவது.”

“தெரியும். பச்சைக் குழந்தையல்ல நான்.”

“இங்கே வைத்தியர் நீதான். விருந்தும் நீ. மருந்தும் நீ. என்னை வருத்தும் தேளும் நீ. வருடிக்கொடுத்து அந்த வருத்தம் போக்கும் தேவசுந்தரியும் நீ.”

மாயாவுக்குள் இருந்தது பொய்க் கோபம். தன் பிரியமானவர்களை ஏமாற்றிப் பாப்பதும், கோபம்போல் நடித்து துடிக்கவைத்துப் பார்ப்பதும் காதலில் ஒரு விளையாட்டுத்தான்.

சமையலுக்கு உப்புச் சேர்க்காவிட்டால் சுவை இருக்காது. காதலில் ஊடல் இல்லாவிட்டால் சுவை இருக்காது.

தான் சீற, அவன் குழைய, தான் விலக, அவன் நெருங்க, அவன் கிள்ளவர, தான் தள்ளிவிட மாயாவுக்குள் மகிழ்ச்சி ஒரு நந்தவனமாய் செழித்து மலர்ந்தது.

ரகுதேவ் மாயாவின் கரத்தை தன் கரத்தால் மெல்லப் பற்றினான்.

மாயா பேசாமல் இருந்தாள். பற்றிய கரத்தை ஏந்தி தன் உதட்டிலே பொருத்தி முத்தமிட்டான்.

மாயா முதலில் தடுத்திருக்கலாம். தன் கரத்தை அவன் ஏந்திச் செல்கையில் இழுத்திருக்கலாம். அவன் முத்தமிடும் வரை அனுமதித்துவிட்டு பின்னர் இழுத்துக்கொண்டாள். ஏதோ விருப்பம் இல்லாதவள் போல் நடித்துக்கொண்டாள்.

“மாயா புயலில் சிக்கிய கட்டுமரம் போல உன் கோபத்தில் சிக்கிய என் இதயம் தவிக்கிறதே. தெரிகிறதா?”

“தெரியவில்லை. மை போட்டுத்தான் பார்க்க வேண்டும்.”

“மை போட்டு பார்க்க வேண்டாம். மெய் மறைக்காமல் பேசு. ஏன் என்மீது கோபம்?”

ரகுதேவ் கேட்க, மாயா அவனைப் பார்த்து உதட்டைச் சுழித்து பழிப்புக் காட்டினாள்.

‘பாவம் ரகுதேவ். என் நடிப்பை மெய் என்று நம்பி உருகிப் போகிறான். இனிப் போதும்.’

என்று மனதுக்குள் நினைத்தாள். ரகுதேவ் மாயா ஏன் பிடிவாதமாய் கோபம் காட்டுகிறாள் என்பது புரியாமல் குழம்பினான்.

“மாயா! உனக்கென்ன, என்னை துன்பக்கடலில் போட்டுவிட்டு அரண் மனைக்கு சென்றுவிடுவாய். அங்கே கேலி செய்யவும், கதைகள் பேசி பொழுதைக் கழிக்கவும் தோழிகள் இருப்பார்கள். இங்கே நான் வருந்திக் கொண்டிருப்பேன். உன் கோபத்தின் காரணம் புரியாமல் மனம் உடைந்து கொண்டிருக்கும்.”

ரகுதேவின் குரல் தழுதழுத்தது. மாயா பொய்க்கோபம் துறந்தாள். ரகுதேவ் எதிர்பாராத நொடியில் அவன் இரு கன்னங்களிலும் தன் உள்ளங்கைகள் பதித்து தன் இதழ்கள் நோக்கி இழுத்தாள்.

இனிய வார்த்தைகள் வரவில்லையே என்று வருந்தியவனுக்கு, தேனூறும் இதழ்களை கொடுத்தாள்.

ரகுதேவ் மனதில் மாயாவின் ஊடலால் விளைந்த காயம் மாயமாய் மறைந்தது.

அணைத்தான். அணைத்தாள். இதழ்கள் கலந்து நனைந்தன. உடல்கள் இணைந்து மகிழ்ந்தன.

வானத்தில் நிலவு வெட்கப்பட்டுக் கொண்டு மேகத்தால் முகம் மறைத்துக் கொண்டது.

மாயா ஊடலால் விளைந்த சுகம் உணர்ந்தாள். பொய்க் கோபம் காட்டி நடிக்கவைத்ததால் அது மறைந்த போது தன்னவன் காட்டிய வேகமும், தாகமும் புரிந்து இன்ப வானில் எழுந்து உயர்ந்தாள்.

இதனைத்தான் திருவள்ளுவரும் சொன்னாரோ? என்ன சொன்னார்?

“நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.”

அதிகாரம்-131
குறள்-1309

இலக்கிய நயம்

---

# சிந்தியா பதில்கள்

டியர் சிந்தியா! எதிரிகள் நண்பர்களாக மாறும்போது அவர்களை நம்பலாமா?

ஆர்.பாபி-ராகம.

*நேர்மையான எதிரி என்றால் நம்பலாம்.*

•

சிந்தியா, நீங்கள் ஒரு கட்சி ஆரம்பித்தால்?

என்.எல். முஸம்மில்-புதிய காத்தான்குடி-6.

*உள்ள கட்சிகளும், உருப்படாத மோதல்களும் போதாது என்று நினைக்கிறீர்களா முஸம்மில்?*

•

டியர் சிந்தி, அன்னை தெரேசாவைப் பற்றிய உங்கள் சொந்தக் கருத்து என்ன?

எஸ்.சுரேஸ்குமார்-கல்முனை.

வரப்போகும் தேர்தல்கள் பற்றி மட்டுமே சிந்திக்கும் அரசியல் தலைவர்கள், வாழும் தலைமுறைக்காக பாடுபட்டு, வருங்கால தலைமுறை பற்றியும் சிந்திக்கும் அந்த வாழும் தெய்வத்திடம் வரம் கேட்கவேண்டும் - நல்ல சிந்தனை என்னும் வரம்.

•

பிரச்சனைகள் சூழ்ந்த நிலையில் நாம் எதைக் கைப்பற்ற வேண்டும்?

எம்.டி.எம். சாபிகான்-பட்டுகொடை.

*தளராத தன்னம்பிக்கையை.*

•

தீபாவளிப் படங்களிலே அசத்திய படம் எது?

டி.எஸ்.பிறமேந்திரன்-அம்புகாமம் எஸ்டேட்.

*கிழக்குச் சீமையிலே. அது மண் வாசனை மாறாத படம்.*

•

போலி நட்பை அறிய வழி?

எம்.எச்.எம். நிஸ்வான்-திருகோணமலை.

*உங்களைத் துன்பம் சூழவேண்டும்.*

## போலி நட்பை அறிய என்ன வழி?

•

அன்பின் சிந்தியா! வாழ்க்கை, நடிப்பு ஆகிய இரண்டுக்கும் என்ன சம்மந்தம்?

க. பிறேமலதன்-அக்கரைப்பற்று.

*சிலர் வாழ்வதற்காக நடிக்கிறார்கள். நல்ல நோக்கம் நிறைவேற நடிப்பதில் தவறில்லை. ஆனால் நடிப்பே வாழ்க்கையானால் அது நரகம்.*

•

டியர் சிந்தியா! கடந்த வருடத்தில் உங்களை ஆச்சரியத்திற்கு உட்படுத்திய சம்பவம் ஒன்றைக் கூறுங்கள்?

அ.யசோதினி-புத்தளம்.

*ஒரே பிரசவத்தில் பதினைந்து குழ்நதைகள் ஈன்ற தாய்.*

•

சினிமாவுக்கும் நாடகத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?

அ.லெட்சுமணன்-நாவலப்பிட்டிய.

*ஒரு சினிமா ஒரே நேரத்தில் உலகமெல்லாம் காட்டப்படமுடியும். ஒரு நாடகம் ஒரு சமயத்தில் ஒரு அரங்கில்தான் நடக்கமுடியும். அதனால் மக்களைச் சென்றடைவதில் நாடகத்தை விட சினிமாவுக்கு வாய்ப்பு அதிகம்.*

•

டியர் சிந்தியா, பூக்களில் சிறந்த பூ என்ன பூ?

பர்சானா.

*ரோஜா. அதில்தானே முள்ளும் உண்டு. கோபம் உள்ள இடத்தில் குணம் இருப்பதுபோல முள் உள்ள மலரில் நறுமணமும் இருக்கும்.*

•

குஸ்புவும்-பிரசாந்தும் இணைந்து நடிப்பார்களா?

ரிஸ்மிலா அஸீஸ்-அக்குறணை.

*அவர்கள் தயார். தயரிப்பாளர்கள் தயாராக இருக்க வேண்டுமே.*

•

மற்றவர்களின் மடல்களை அவர்களுக்குத் தெரியாமல் பார்ப்போர் பற்றி?

ஏ.எம். இப்திகார்-புத்தளம்.

*நாகரிகம் கிலோ என்ன விலை என்று கேட்கக்கூடியவர்கள்.*

•

கிழக்கு,வவுனியா உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பி.பாலச்சந்திரன்-மட்டக்களப்பு.

*திருவிழாவே இப்போதுதான் ஆரம்பம். அதற்குள் அவசரப்பட்டு அபிப்பிராயம் சொல்வானேன்?*

•

தமிழகத் தலைவர்களில் உங்களுக்கு விருப்பமானவர்?

எஸ்.சசிகலா-கொழும்பு-7.

*ஜெயலலிதா. காரணம் - பெண் என்ற வகையில் தொடுக்கப்படும் கீழான விமர்சனைங் களையும் புறம்தள்ளி ஜெயித்துக்காட்டிவிட்டார்.*

•

---

# தாயின் தலையை சீவிய தனயன்

## படுகொலைக்குப் பரிசாக பதவி வேண்டுமாம்!



தனது தாயின் தலையினை வெட்டிய தனயன் அவளுக்குச் சொந்தமான கடையின் காட்சித்தட்டில் அதனை வைத்து விட்டான். தாயின் உடலின் ஏனைய பாகங்களைத் துண்டு துண்டாக வெட்டி அவற்றை சாக்குப் பைகளில் வைத்திருக்கிறான்.

தனது தாய் ஒரு பேய் என்றும் அவளைக் கொன்றொழிக்காவிட்டால் அவள் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பழிவாங்கி விடுவாள் என்பதனாலேயே தான் அவளைக் கொன்றதாக அந்த மகன் பொலிசாரிடம் தெரிவித்துள்ளான்.

ஆஸ்திரியா நாட்டில் வெயின் டொப்லிங் என்ற நகரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. மைக்கேல் ரோமி என்ற 26 வயது பல்கலைக்கழக மாணவனே தனது தாயான 56 வயது இல்டிக்கோவை 15 தடவை கத்தியால் குத்திக்கொன்றபின் தலையைக் கொய்துவிட்டு உடலை பல கூறுகளாக்கி சாக்கில் போட்டுக் கட்டியுள்ளான். சம்பவம் நடைபெற்ற அன்றைய தினம் இல்டிக்கோவின் அழுகுரலும் மைக்கேலின் அதட்டல் குரல்களும் தங்களுக்குக் கேட்டதாக பொலிசாரிடம் அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்படுவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னர்தான் இல்டிக்கோ தனது மகனுக்கு ஒரு அழகான வீடொன்றை வாங்கிக்கொடுத்துள்ளார். இருப்பினும் மகன் மீது இல்டிக்கோ மிகக் கண்டிப்புடன் நடந்துகொள்வார் என்றும் மிகக் கடுமையான ஆதிக்கம் செலுத்துபவர் என்றும் மைக்கேலின் நண்பர்களும் உடன் மாணவர்களும் பொலிசாரிடம் தெரிவித்தனர்.

மிகவும் அமைதியான போக்கும் நல்ல சுபாவமும் உடைய மைக்கேலை எடுத்ததற்கெல்லாம் தாய் திட்டுவதனாலும் கண்டிப்பதனாலும் வெறுப்படைந்தமையினால் தாய் மீது வெறுப்பு அதிகரித்து இந்தக் கொலையினை அவன் செய்திருக்கலாம் என்று அவனுடைய நண்பர்கள் கருதுகின்றனர்.

இல்டிக்கோ காபர் என்பவரை மணம் முடித்திருந்தார். மைக்கேல் பிறந்ததும் தம்பதிக்கிடையில் ஏற்பட்ட பிணக்கின் காரணமாகப் பிரிந்தனர். இருப்பினும் மகன் மீது காபர் அதிக பிரியம் வைத்திருந்தார் என்று காபரின் இரண்டாவது மனைவி கூறியுள்ளார்.

கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ள மைக்கேல், கொலை செய்யும்போது மூளைக் கோளாறுடன் இருந்தாரா என்பதனை அறிவதற்கான பரிசீலனைகள் நடத்தப்பட்டு வருவதாக மன நோய் மருத்துவர் டாக்டர் நாட்ஜா பிரான்ஸ்ராட்டர் கூறியுள்ளார்.

உலகத்தையே ஆட்டிப்படைக்க வேண்டும் என்ற வெறி கொண்ட தனது தாயாரைக் கொன்றொழித்தமைக்காக தனக்கு ஆஸ்திரிய இராணுவத்தில் உயர் பதவி ஒன்று கிடைக்கும் என்று மைக்கேல் கருதுவதாக மற்றுமொரு மருத்துவ நிபுணர் சொன்னார்.



---

## குறுக்கெழுத்துப் போட்டி இல—33

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | 3 | 4 |
| | ■ | 5 | | | | |
| 6 | | | | ■ | | |
| | ■ | | ■ | 7 | ■ | |
| 8 | | | | | ■ | |
| ■ | | | ■ | 9 | | ■ |
| 10 | 11 | ■ | 12 | | | |

### இடமிருந்து வலம்

1. மகாபாரதத்தில் வரும் ஒரு பாத்திரம்.
2. சமையலறையில் இதுவும் இருக்கும்.
5. இது தங்கத்தில் இருந்தால் நல்ல சிறப்பு.
6. தூக்கத்தின் இன்னொரு பெயர்.
8. குற்றம் செய்யாமலும் இவ்வாறு சிலர் இருப்பதுண்டு.
9. இப்போது இது பல நவீன ரகங்களில் வந்துவிட்டது.
10. சில பெண்களுக்கு இதன் மீது ஒரு பைத்தியம்.
12. பெண்களுக்கான ஆடைகளில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. முற்றும் துறந்தவர்.
3. இதைத் தடுக்க நாம் தான் விழிப்பாக இருக்கவேண்டும். (குழம்பியுள்ளது)
4. சில விருந்துகளில் பலர் ஒன்றுகூடி இதைச் செய்வதுண்டு.
5. கோவலன் மீது கண்ணகிக்கு இருந்தது.
7. நிர்வாகம் நடத்த இவரும் தேவை.
11. கரம் கறைபடியாமல் தடுக்க உதவும் (தலைகீழாக உள்ளது)

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 22.01.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-33
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-31க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தே | 2 வா | ர | ம் | ■ | 3 பு | 4 பா |
| ர் | று | 5 அ | 6 வ | தா | ர | ம் |
| 7 த | க | ன | ம் | ■ | ட் | பா |
| ல் | ■ | 8 இ | ச | ரா | சி | ட் |
| ■ | 9 தா | ழ | ம் | பூ | ■ | டி |
| 10 ணி | ■ | ப் | ■ | 11 சி | கை | ■ |
| 12 ம | ண் | பு | ழு | ■ | 13 ப | சு |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.31இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி. வாசுகி சபாரத்தினம் மண்டூர்.
2. செல்வி.எம்.ஏ. றிதானா பாணு மூதூர்-4.
3. தா.மு. நுஃமான் பத்துலு ஓயா.
4. மா. விதுஷா புத்தளம்.
5. கே. ஆபிரகாம் வவுனியா.
6. எச்.ஏ. நாஸர் பிபில.
7. கு. சிவநாதன் கொழும்பு-6.
8. சி. ரகுபதி கண்டி.
9. என். நரேந்திரன் கொழும்பு-11.
10. ச. தஜானி ஆரையம்பதி-3.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (16.01.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 12

*யமுனா நதிக்கரையில் கோகுலம் இயற்கை அழகு பொங்கக் குதூகலிக்கிறது. கால் நடைகள்- முக்கியமாக பசுக்களும் கன்றுகளும் துள்ளிக்குதிக்கின்றன.*

**காலத்தின்குரல்:** *காலமாகிய நான் நேரடியாக கோகுலத்தின் குதூகலத்தைக் காண்கிறேன். இயற்கை எழிலும் மணமும் எங்கும் பரிமளிக்கின்றன. பருவமழை பொழிந்து பசுமைக் கோலம் போட்டிருக்கிறது. இயற்கை அன்னையே ஒரு புனிதனின் வரவைக் கட்டியங் கூறி வரவேற்கிறாள் போலும். அந்தப் பரம் பொருள், வல்லமை பொருந்திய சர்வலோக நாயகனின் வரவை உலகமே வரவேற்று விழாவெடுக்கிறதோ! ஆம் அத்தனையும் தேவகியின் எட்டாவது புதல்வனை வரவேற்கத்தான்!*

-காட்சியின் துவக்கம்-

*(கம்சனின் அரண்மனை-கோப மிகுதியால் குமுறியவண்ணம் கம்சன் உலாவுகிறான். ஏற்கனவே கேட்ட அசரீரியின் வார்த்தைகள் அவனைத் துன்புறுத்துகின்றன. மாமந்திரி வருகிறார்)*

**கம்சன்:** உமது வாழ்த்துக்கள் எனக்குத் தேவையில்லை. தேவகியின் எட்டாவது மகன்தான் இப்போதைய எனது தேவை.

**மந்திரி:** மகாராஜா இளவரசி தேவகிக்கும் வாசுதேவருக்கும் பிறந்த எட்டாவது புத்திரன் ஒரு மாயாவி என்றே எனக்குத் தோன்றுகிறது. இல்லையானால் இத்தகைய கட்டுக்காவலை மீறி ஒரு குழந்தை எவ்வாறு ஓடி மறைய முடியும்?

**கம்ச:** தேவகியின் மகன் மாயாஜாலம் செய்தே மறைந்திருந்தானேயானால் அவன் இந்த நாட்டின் எல்லையை விட்டு எங்குமே சென்றிருக்க முடியாது. படையினரை ஏவுங்கள். நேற்றுப் பிறந்த எல்லாக் குழந்தைகளையும் தேடிக் கண்டுபிடித்துக் கொல்லட்டும். படைகளுக்கு ஆணையிடுங்கள்.

**மந்திரி:** தங்கள் கட்டளைப்படியே செய்துவிடலாம். ஆனால் அதனால் பெரும் கிளர்ச்சி எழ நேரிடும் அல்லவா மகாராஜா!

**கம்ச:** இது நிறைவேறாவிட்டால் எத்தகைய முடிவு ஏற்படும் என்று உமக்குத் தெரியாதா மந்திரியாரே!

**மந்திரி:** தெரியும் மகாராஜா! இருப்பினும் இந்தக் குழந்தை ஒரே நாளில் திடீரென வளர்ந்து விடப் போவதில்லையே! ஆகவே நாம் நமது ஒற்றர்களை அனுப்புவோம். கால அவகாசமும் இருக்கிறது. கடந்த இரவு பிறந்த அத்தனை பிள்ளைகளின் கணக்கு விபரங்களை அவர்கள் திரட்டி வருவார்கள்.

**காவலன்:** வாழ்க மகாராஜா! தங்கள் சமுகம் நாடி ஒரு தூதன் வந்திருக்கிறார்.

**கம்ச:** நல்ல சகுனம் மந்திரியாரே! நாம் ஒற்றர்களை அனுப்புவது பற்றி பேசிக்கொண்டிருக்கும் போதே தூதனும் வந்திருக்கிறான். உடனே இங்கனுப்பு!

*கம்சன் அமர்ந்து கிரீடத்தை சிரசில் வைத்துக்கொள்கிறான்.*

**தூதன்:** வாழ்க மகாராஜா!

**கம்ச:** என்ன செய்தி கொண்டு வந்துள்ளீர் தூதரே!

**தூதன்:** மகாராஜா! கோகுலத்தில் குதூகலம் கரை புரண்டோடுகிறது. என்றுமேயில்லாத பெருமாற்றங்கள் அந்த வரண்ட பூமியில் இன்று காணப்படுகின்றன. பெரும் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. அங்கிருந்து எழும் இசைவெள்ளம் யமுனை நதியைக் கடந்து மதுராபுரியில் எதிரொலிக்கின்றது பிரபு!

**கம்ச:** மாமந்திரி! இதன் அர்த்தம் என்னவென்று தோன்றுகிறதா உமக்கு! அவன் கோகுலத்தில்தான் ஒளிந்துள்ளான். படையைத் தயார் படுத்தும். உம்...!

*மந்திரி கம்சனிடம் தூதுவன் போகும் வரை அமைதியாக இருக்கும்படி சாடையாகச் சொல்லுகிறார்.*

**மந்திரி:** ஒரு குழந்தையைப் பிடிக்க ஒரு படையினை அனுப்புவது மதுராபுரி வேந்தனுக்கு அழகல்ல மகாராஜா! பார்ப்பவர்கள் நகைப்பார்களல்லவா?

**கம்ச:** அப்படியானால், பூதனையை அழைத்து வாருங்கள்.

-காட்சி மாற்றம்-

*கம்சனின் அரண்மனை- கொடிய தோற்றமுடைய பூதனை எனும் அரக்கி வருகிறாள்.*

**பூதனை:** வாழ்க மகாராஜா! (பூதனை வணங்குகிறாள்)

**கம்ச:** எனது வளர்ப்புத்தாயே! நீ எனக்கு வணக்கம் செலுத்த வேண்டுமா? ஆசி வழங்கினால் போதும்! *(பூதனை வாழ்த்துகிறாள்)*

**பூதனை:** இந்தப் பூதனை, மகாராஜாவுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறாள்.

**கம்ச:** பூதனை! நான் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கிறேன்.

**பூதனை:** என்ன செய்ய வேண்டும்? ஆணையிடுங்கள் மகாராஜா!

**கம்ச:** எனது எதிரி ஒருவனை ஒழித்துக் கட்ட வேண்டும்.

**பூதனை:** பூ இவ்வளவுதானே; நான் அவனை அழித்தாக வேண்டுமா மகாராஜா?

**கம்ச:** ஆமாம் பூதனை! ஏனெனில் அவன் ஒரு சிறு குழந்தை!

**பூதனை:** யார் குழந்தை மகாராஜா?


**கம்ச:** யார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவன் கோகுலத்தில்தான் இருக்கிறான். கடந்த இரவுதான் பிறந்திருக்கிறான்.

**பூதனை:** கோகுலத்தில் ஓர் இரவில் பல பிள்ளைகள் பிறந்திருக்கலாம் அல்லவா?

**கம்ச:** ஆமாம் அவ்வாறு பிறந்திருக்கலாம்.

**பூதனை:** அவ்வாறானால் நான் என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்கள் மகாராஜா?

**கம்ச:** அங்குள்ள குழந்தைகள் அனைத்தும் எனது எதிரிகள் தான்.



இதனை நிறைவேற்ற முடியுமா பூதனை?

*பூதனை ஒரு அழகிய இளம் பெண்ணாக உரு மாறுகிறாள்.*

**பூதனை:** கவலையை விடுங்கள் மகாராஜா. நான் அக்குழந்தைகளுக்கு நச்சுப் பாலூட்டிக் கொன்று விடுகிறேன் மகாராஜா!

**கம்ச:** கவனம்! நஞ்சூட்டப்படும் சங்கதி எவருக்கும் தெரியக்கூடாது பூதனை.

**பூதனை:** எந்த மருத்துவராலும் நான் ஊட்டும் நஞ்சினைக் கண்டுபிடிக்க முடியாது மகாராஜா! எனக்கு உத்தரவு கொடுங்கள்.

-காட்சி மாற்றம்-

*கோகுலம்: கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. திரும்பிய திசையெல்லாம் மக்கள் ஆடிப்பாடிக் குதூகலிக்கின்றனர். ரோகினி இரண்டு வயது மகனுடன் காணப்படுகிறாள்.*

நந்தகோபனின் இல்லம்: மகன் பலராமனுடன் ரோகினி வருகிறாள்.

**நந்த:** இப்பொழுதாவது எங்களிடம் வர வாய்ப்புக் கிடைத்திருக்கிறது போலும் ரோகினி!

**ரோகி:** ஆமாம் அண்ணா...!

**நந்த:** என்னிடம் எந்தச் சாக்குப்போக்கும் சொல்ல வேண்டாம். எல்லாவற்றையும் யசோதாவிடம் போய்ச் சொல்லு. அவள்தான் உன் மீது கோபத்துடன் இருக்கிறாள்.

**ரோகி:** நான் மதுராபுரியில் இருந்தேன் அண்ணா. இப்போதுதான் அங்கிருந்து வருகிறேன். இங்கு நடைபெறும் கொண்டாட்டங்களும் அங்கு எதிரொலிக்கின்றன. ஆகவே கொஞ்சம் எச்சரிக்கை தேவை அண்ணா.

**நந்த:** ரோகினி! நீண்ட கால எதிர்பார்ப்பின் பின்னர் தேவகிக்கு இப்பொழுது தான் குழந்தை பிறந்துள்ள மகிழ்ச்சியில் கொண்டாடும் கோபியர்களை தடுக்கும் நிலையில் நான் இல்லையே ரோகினி!

**வயோதிபர் ஒருவர்:** *(வெண்ணைப் பாத்திரத்துடன் வந்துகொண்டே)* நந்தகோபரே! வாழ்த்துக்கள்!

**நந்த:** வாருங்கள் அண்ணா..! என்ன இது..?

**வயோ:** அதிகாலையில் உங்கள் மகன் கனவில் வந்தான். பெரியப்பா எனக்கு வெண்ணை தாருங்கள் என்று கேட்டான்.

*வேறு கோபியர்களும் வெண்ணை நிறைந்த கலசங்களைத் தலையில் சுமந்து வந்து கொண்டிருப்பதை நந்தகோபன் பார்த்து அதிசயப் படுகிறார்.*

**நந்த:** அடடே..... இதென்ன? மதுராபுரிக்கு இன்று நீங்கள் வெண்ணை அனுப்பவில்லையா?

**கோபி:** இன்றைய வெண்ணை யாவுமே நந்த குமாரனுக்குத்தான். உங்கள் மகன் எங்கள் கனவில் தோன்றி வெண்ணை வேண்டும் என்று எங்களிடம் கேட்டானே! அம்மா உங்கள் மகனுக்கும் கொஞ்சம் வெண்ணை எடுத்து ஊட்டுங்களேன்.

*ரோகினி சிறிது வெண்ணையை எடுத்து பலராமனுக்கு ஊட்டுகிறாள்.*

**ரோகி:** இப்போ நந்தகுமாரனே வெண்ணை தின்றான் என்று கருதுங்கள்.

*(அமைதி நிலவுகிறது)*

-காட்சி மாற்றம்-

*கோகுலம்- ஒரு பெண் ஒரு சிறு குழந்தையின் சடலத்தை வைத்து அழுதுகொண்டிருக்கிறாள். அவளைச் சுற்றி வேறு பல பெண்கள் இருக்கின்றனர். இதே வேளை அழகிய பெண் வேடம் கொண்ட பூதனையை ஒரு பெண் கண்டு விடுகிறாள்.*

-காட்சி மாற்றம்-

*நந்தகோபன் இல்லம்-உட்புறம். கண்ணன் யசோதையின் மடியில் படுத்திருக்க பலராமன் அருகே வருகிறான்.*

**பலராமன்:** சித்தி என்னிடம் அவனைக் கொடுங்கள் சித்தி.

**யசோ:** அவனைத் தூக்க உன்னால் முடியாது மகனே! நீ சின்னவன் அல்லவா!

*பலராமன் அடம் பிடிக்கிறான். ரோகினி வருகிறாள்.*

**யசோ:** நீண்ட நாட்களாக உங்களை இந்தப் பக்கம் காணவில்லையே!

**ரோகி:** அதிருக்கட்டும். சுகானந்தன் தன் மகனைப் பறி கொடுத்துவிட்டான்.

-காட்சி மாற்றம்-

*பூதனை ஒரு வீட்டில் நுழைந்து மீண்டும் வெளியேறுகிறாள். அப்போது அங்கிருந்து அழுகுரல் கேட்கிறது.*

-காட்சி மாற்றம்-

*கோகுலம்- பஞ்சாயத்துக் கூடுகிறது. குழம்பிய நிலையில் பெரியவர்கள் காணப்படுகின்றனர்.*

**ஒருவர்:** மதுராவிலுள்ள மருத்துவர்களால் கூட இந்தக் கொடிய நோயினைக் கண்டறிய முடியாதிருக்கிறது. கோகுலத்தில் குழந்தைகள் திடீர் திடீரென இறந்து போகின்றனர்.

**நந்த:** எனக்கே புதுமையாக இருக்கிறது. கண்ணன் பிறந்த அதே காலத்தில் கோகுலத்தில் பிறந்த குழந்தைகள் ஒவ்வொன்றாக இறக்கின்றன.

**மற்றொருவர்:** நீங்கள் கூறிய கருத்து எங்களுக்கு இதுவரை தோன்றவில்லை. உண்மைதான். சுகானந்தன், ராமாவதார், பஜ்ராங்கி, ராம்லேக்கன் ஆகிய எல்லோருக்கும் ஒரே நாளில் தான் குழந்தைகள் பிறந்தன. இவர்களுடைய குழந்தைகளும் இறந்துவிட்டன. காரணம் என்னவாக இருக்கும் நந்தராஜா?

**நந்த:** காரணம் என்னவென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே!

**மூன்றாமவர்:** நீங்கள்தான் எங்கள் தலைவர் இதற்கான காரணத்தைக் கண்டு நீங்கள்தான் பரிகாரம் தேட வேண்டும்.

**முதலாமவர்:** அன்றிரவு பிறந்த குழந்தைகளில் வேறு எத்தனை குழந்தைகள் உயிருடன் உள்ளன?

**நந்த:** அவற்றில் ஒன்றுதான் என் மகன்.

**மூன்றா:** மற்றொன்று என் மகன்.

*இவ்வாறு கூறியவர் தனக்கும் ஏதோ நடந்துவிட்டதாக மருண்டெழுகிறார்.*

-காட்சி மாற்றம்-

*கம்சனின் அரண்மனை. கம்சனின் முன் மாமந்திரி தலைகுனிந்து நிற்கிறார்.*

**மந்தி:** மகாராஜாவுக்கு நல்வாழ்த்துக்கள்! அன்றிரவு பிறந்த குழந்தைகளில் ஆக இரண்டு குழந்தைகள் தான் இப்பொழுது உயிருடன் இருக்கின்றன மகாராஜா!

**கம்ச:** யாருடைய குழந்தைகள் அவை?

**மந்தி:** பாற்காரரான சுகாதேவனுடையது ஒன்று, மற்றக்குழந்தை நந்தகோபனுடையது. பொழுது புலர்வதற்கு முன் பூதனை தனது கடமைகளை நிறைவேற்றிவிடுவாள்.

*(கம்சன் மகிழ்ச்சியடைகிறான்)*

-காட்சி மாற்றம்-

*நந்தனின் இல்லம். பசுவில் நந்தகோபன் பால் கறக்கிறார்.*

-காட்சி மாற்றம்-

*நந்தகோபன் இல்லம் உட்புறம். கண்ணன் தொட்டிலில் படுக்கிறான். யசோதா தொட்டிலை ஆட்டி கண்ணனைத் தூங்க வைக்கிறாள். அப்போது வெளிப்புறத்திலிருந்து நந்தகோபன் யசோதாவை அழைக்கிறார்.*

**நந்த:** யசோதா...!

*யசோதா பால் குடத்தை கொண்டு வருகிறாள்.*

**யசோ:** கண்ணனின் தந்தையே! மெதுவாகப் பேசுங்கள். கண்ணன் முழுமையாக இன்னும் உறங்கவில்லை. மெதுவாக ஓர் அரவம் கேட்டாலும் அவன் தூக்கம் கலைந்துவிடும். உண்மையாகச் சொல்லுங்கள் பிரபு- இவனைப் போன்ற அழகான குழந்தையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

**நந்த:** நான் எங்கே கண்டேன்? உலகில் இத்தகைய ஒரு குழந்தை இதுவரை பிறந்ததேயில்லை. இத்தகைய ஒரு குழந்தையின் வரவால் நாம் பெரும் பாக்கியம் பெற்றவர்களே!

**யசோ:** அவன் வளரட்டும். அவனுக்கு வெண்ணையினை ஊட்டியே வளர்க்கப் போகிறேன்.

**நந்த:** எல்லா வெண்ணையையும் உன் மகனுக்கு ஊட்டினால் அரண்மனைக்கு அனுப்ப வெண்ணைக்கு எங்கே போவது?

**யசோ:** மகாராஜாவுக்கு வெண்ணை வேண்டுமானால் மேலும் பசுக்களை வாங்குங்களேன்.

*தூரத்தில் அழுகுரல் கேட்கிறது- ஒரு பெண் யசோதாவிடம் வருகிறாள்.*

**பெண்:** சுகதேவரின் குழந்தையும் மாண்டு போய்விட்டது.

**யசோ:** புதுவகையான நோயாகக் காணப்படுகிறதே! பிரபு நமது கண்ணனுடன் பிறந்த குழந்தைகள் அத்தனையும் இறந்துவிட்டன. கண்ணனுடன் சேர்ந்து விளையாட ஒருவருமே இருக்க மாட்டார்களே!

*பூதனை பின்புற வழியால் நந்த கோபனின் இல்லத்துள் நுழைகிறாள். கண்ணன் கண் விழித்து தொட்டிலில் விளையாடுகிறான். அவனை எடுத்துக் கொண்டு பூதனை வெளியேறுகிறாள்.*

*நந்தகோபனின் பசு வெருண்டு கத்திக்கொண்டு பிணைப்பினை அறுத்துக் கொள்ளக் குமுறுகிறது. இதனால் யசோதா துயரமடைகிறாள்.*

**யசோ:** கண்ணனின் தந்தையே! நமது கௌரி என்றுமில்லாதவாறு இன்று திமிறுகின்றாளே?

*இவ்வாறு கூறிக்கொண்டு வீட்டுக்குள் சென்று கண்ணனின் தொட்டிலைப் பார்வையிடுகிறாள். தொட்டிலில் கண்ணனைக் காணாமல் பதறி அழுகிறாள்.*

**தேவ:** ஐயோ என் கண்ணனைக் காணவில்லையே? கண்ணா.... (வெளியே ஓடி) கண்ணனின் தந்தையே என் கிருஷ்ணனைக் காணவில்லையே!

*இருவரும் ஓடி ஓடிகண்ணனைத் தேடி கத்துகின்றனர்.*

*பூதனை கிருஷ்ணனை எடுத்துச் சென்று தனது சுயரூபத்தை எடுத்துக்கொண்டு அவனுக்கு பால் கொடுக்க முயற்சிக்கிறாள்.*

*இந்தக் காட்சியை கோபியர்கள் தொலைவிலிருந்தவண்ணம் கண்டு பயந்து அலறியவண்ணம் நந்த கோபனிடம் ஓடுகின்றனர்.*

*நந்தகோபனையும் யசோதாவையும் கண்டு தாங்கள் கண்ட காட்சியைக் கூறுகின்றனர். ஓர் இராட்சசியின் பிடியில் கிருஷ்ணன் சிக்கியிருப்பதைப் பற்றிக் கூறுகின்றனர். எல்லோரும் அந்த இடத்தை நோக்கி ஓடுகின்றனர்.*

*(யசோதா பயந்து அலறுகிறாள்)*

*பூதனையின் உயிரற்ற உடல் கீழே கிடக்கிறது. கிருஷ்ணன் அவளுடைய உடலின் மீது இருந்து விளையாடுகிறான். அவனை வாரி அணைத்த யசோதா முத்தமாரி பொழிகிறாள்.*

*பூதனையை நந்தகோபன் அடையாளம் கண்டு கொள்கிறார்.*

**நந்த:** அடடே! இவள் பூதனையல்லவா?

**யசோ:** யாரது....பூதனை?

**நந்த:** கம்சனின் வளர்ப்புத்தாய்.

**மற்றவர்கள்:** கம்சனின் வளர்ப்புத்தாயா?

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் அரண்மனை)*

**கம்சன்:** என்ன சொல்லுகிறீர் அமைச்சரே? பூதனை இறந்துவிட்டாளா? அவளைக் கொன்றவன் யாராக இருக்க முடியும்?

**அமைச்சர்:** பூதனை இறந்த்தாகத் தான் செய்தி வந்துள்ளது. துன்பத்திலும் இனிக்கும் தகவலும் இணைந்து வந்திருக்கிறது மகாராஜா. அன்று பிறந்த அத்தனை குழந்தைகளும் இறந்துவிட்டன. கோகுலத்தில் தன் குழந்தையைப் பறி கொடுத்த யசோதா 'ஐயோ என் மகனே' என்று அழுத குரலை நமது ஒற்றன் காதால் கேட்டதாக தகவல் தந்திருக்கிறான் மகாராஜா!

**கம்ச:** *(மகிழ்ச்சியுடன்)* இப்போ அந்த ஆண்டவனின் திட்டங்களையும் அவன் எனது எதிர்காலத்தையிட்டு போட்ட கணக்கையும் கவனிக்கிறேன். கோகுலத்தை தீயிட்டுப் பொசுக்குங்கள். இருந்த இடம் தெரியாமல் அழியட்டும் அந்தக் கோகுலம்! எனது எதிரிக்கு அடைக்கலம் கொடுத்த அந்தக் கிராமம் முற்று முழுதாகப் பொசுங்கட்டும்! அந்த ஆக்கும் கடவுள் என்னிடம் தோற்றுவிட்டான். அதற்காக ஒரு பெரும் கொண்டாட்டத்தையே ஏற்பாடு செய்ய வேண்டும். ஹ்ற....ஹ்ஹ்ற........ ஹா...

-காட்சி மாற்றம்-

*(கோகுலம்- நந்தகோபன் இல்லம் யசோதா விளக்கேற்றுகிறாள்)*

**யசோ:** எனக்கு பயமாக இருக்கிறது பிரபு!

**நந்த:** உண்மைதான். கோகுலத்தில் நாம் தொடர்ந்து வாழ்வது ஆபத்துத்தான்.


**யசோ:** நாளை வரை காத்திருக்க வேண்டாம் இன்றிரவே கிளம்பி விடலாம்.

-காட்சி மாற்றம்-

*சிறைகூடம் முதல் ஏனைய முக்கிய கட்டங்களின் பின்நோக்குடன் காட்சி முடிகிறது.*

(வாரந்தோறும் வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.



யப்பான்காரர்கள் புதிது புதிதாக என்ன செய்யலாம் என்று யோசிப்பதை நிறுத்த மாட்டார்கள்.

இது ஒரு சைக்கிள். முழுமை இல்லாத இரு சக்கரங்களின் உதவியோடு வெற்றிகரமான வெள்ளோட்டம் நடத்திக் காட்டி படத்தில் உள்ளவர் பரிசும் வாங்கிவிட்டார். ஜப்பானில் நடந்த இயந்திரவியல் போட்டியில் இந்த வெள்ளோட்டம் நடந்தது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




## மோதுவதை நிறுத்து! நேசிப்பதை தொடங்கு!

"ஆயுதங்களை தூர எறியுங்கள்." இதுதான் கடந்து போன கிறிஸ்மஸ் தினத்தன்று போப்பாண்டவர் விடுத்த செய்தி.

ஆயுதங்கள் மரியாதை பெற்று வருகின்றன.

அயலவனை நேசிப்பதற்குப் பதிலாக ஆயுதத்தோடு துரத்துவதே வன்முறைக் கலாசாரத்தின் விளைவாகி வருகிறது.

வருங்காலத் தலைமுறையை தற்காலத்திய வன்முறைக்கலாசாரம் நச்சுப்படுத்திவிடுமோ என்று அன்புள்ளம் கொண்டோர் அச்சப்படுகிறார்கள்.

மனிதனை மனிதன் நேசிப்பதும், அன்பென்னும் விளைநிலத்தில் மனிதப் பண்புகள் செழித்து வளரவும் ஏற்ற சூழலை உருவாக்க மனிதகுலம் ஒன்றாய் முயல வேண்டும்.

போப்பாண்டவரின் குரல் போர் வெறி கொண்டவர்களின் செவிகளிலும் விழ வேண்டும்.





ஹிலாரி கிளின்ரன்

## கம்பீரம்+ அறிவுக்கூர்மை= ஹிலாரி கிளின்ரன்

அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியின் பெயர் இன்று உலகச் செய்திகளை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டது.

அமெரிக்கர்களது மனங்களையும் ஹிலாரி ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டார்.

ஜனாதிபதி கிளின்ரனுக்கு உள்ள செல்வாக்கைவிட திருமதி ஹிலாரி கிளின்ரனுக்கு உள்ள செல்வாக்கு அதிகமோ என்று ஆச்சரியப்படும் அளவுக்கு அமெரிக்க மக்கள் அவரை நேசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அரசியலில் தேவையில்லாமல் மூக்கை நுளைக்கிறார்கள் என்று குற்றம் சாட்டியவர்கள் இப்போது அடங்கிப் போய்விட்டார்கள்.

கம்பீரமும், அறிவுக்கூர்மையும் கொண்ட பெண் என்று ஹிலாரியை அமெரிக்கர்கள் பாராட்டுகின்றனர்.

## முற்பதிவில் ஒரு கலக்கு!

அமெரிக்க நியூயோர்க் நகரில் உள்ள உலகப்பிரசித்தி பெற்ற நாடக அரங்கின் பெயர் "புரோட்வே"

மிகச் சிறந்த நாடகங்கள் பல அந்த அரங்கில் மேடையேறியுள்ளன.

1991ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு இசை நாடகம் மேடையேறியது.

அதன் பெயர் 'மிஸ் செய்கோன்' இந்த நாடகத்திற்கு அன்று கிடைத்த வரவேற்பு இருக்கிறதே. அதைத்தான் மகத்தான வரவேற்பு என்று சொல்லவேண்டும்.


நாடகம் நடக்கப் போவதற்கான முன் அறிவிப்பு வெளியானதும் பல மாதங்களுக்கு முன்னரே முற்பதிவு தொடங்கிவிட்டது.

உலகில் வேறெந்த நாடகத்திற்கும் இதுபோன்ற இருக்கை முற்பதிவுகள் செய்யப்படவில்லை. அதனால் முற்பதிவில் அந்த நாடகம் உலக சாதனை படைத்துவிட்டது. இன்றுவரை முறியடிக்கப்படாத சாதனை அது.

இருக்கை முற்பதிவாகக் கிடைத்த வசூல் எவ்வளவு என்று தெரியுமோ?

3 கோடியே 60 இலட்சம் டொலர். நம்நாட்டு பெறுமதிப்படி நூற்றியெண்பது கோடி ரூபாய்கள்!

வாரமலர் தினமுரசு



## சாதனை படைத்த சைக்கிள்!

உலகில் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட சைக்கிள் அதிக பாரமுடையதாகக் காணப்பட்டது.

பாரத்தைக் குறைக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் ஜேம்ஸ் ஸ்டார்லி. இவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்.


பாரத்தைக் குறைப்பதற்காக முன் சக்கரத்தை பெரிதாகவும், பின் சக்கரத்தை சிறியதாகவும் மாற்றியமைத்தார்.

1870ம் ஆண்டு இந்த சைக்கிள் இங்கிலாந்து வீதிகளில் பவனிவந்தது.

இந்த சைக்கிளுக்கு ஜேம்ஸ் வைத்த பெயர், 'பென்னிஃபார்திங்'.

அக்காலத்தில் இங்கிலாந்தில் செப்புக்காசு புழக்கத்தில் இருந்தது. அக்காசுகளில் மிகப் பெரியவையும் உண்டு. சிறியவையும் உண்டு. எனவே அந்த நாணயத்தின் பெயரையே சைக்கிளுக்கும் சூட்டிவிட்டனர்.

உலக சாதனைப் புத்தகத்தில் இந்தச் சைக்கிளும் இடம் பிடித்துவிட்டது.



## பாவிக்கப்படாத கண்டுபிடிப்பு!

இரண்டாவது உலகப் போரின்போது அமெரிக்கா மிகப்பெரிய-சிறு பீரங்கி ஒன்றினை உற்பத்தி செய்தது. இதன் பெயர் 'லிட்டில் டேவிட்' இதன் குழல்விட்டம் 9 1/4 மில்லிமீட்டர். (36 அங்குலம்)

இதே போன்று 1857ல் லண்டனில் இதே ரக பீரங்கி உற்பத்தி செய்யப்பட்டது. இதனை 'மல்லெற் மோட்டார்' என்றழைத்தனர். இரண்டும் ஒரே குழல் விட்ட அளவினைக் கொண்டவை.

இதில் வேடிக்கை என்ன வென்றால், இவை இரண்டுமே எந்தப் போர்க்களத்திலும் பாவிக்கப்படவில்லை. இவை இன்றும் வெறும் காட்சிப் பொருட்களாகப் பாதுகாக்கப்படுகின்றன.





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜனவரி மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது